உ

கடவுள் துணை.

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

புலந்திரன்களவுமாலை

மதுரை, சிவஞான தீபச்சபை காரியதரிசி

ம. அழகர்சாமிபிள்ளை யவர்கள்

பார்வையிட்டது.

இ. ராமசாமிக்கோன்,

புத்தகவியாபாரம்,

வடக்காவணிமூல வீதி, மதுரை.

எக்ஸெல்ஸியர் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1924 அணா 6.

181986.

உ

கடவுள் துணை.

புலந்திரன் களவுமா

விநாயகர் துதி.

அத்திமுகத்தோனே அரனார்திருமகனே
சத்திக்கணபதியே சங்கரனார்திருமகனே
பானைவயிற்றோனே பழமேந்துங்கையோனே
ஆனைமுகத்தோனே ஐங்கரனேமுன்னடவாய்
வேலவர்க்குமுன்பிறந்த வித்தைக்களஞ்சியமே
மூலமுதலே முன்னடக்கவேணுமையா

சரஸ்வதி துதி.

நாவிற்சரஸ்வதியே நான்முகனார்தேவியரே
சதுர்முகனார்தேவியரே தாயேசரஸ்வதியே
வாக்குவரமருள்வாய் மறையவனார்தேவியரே
நாவுதவறாமல் நற்கருத்தைத்தாருமம்மா
இந்தக்கதைதனக்கு இனிகருத்தைத்தாருமம்மா
பூவிலமர்ந்தவொரு பொற்கொடியேநான்சரணம்
சரணமென்றடிபணிந்தேன் தற்காக்கவேணுமம்மா
தப்புகளுண்டாயின் தாயேயருள்புரிவாய்
குற்றமிருந்தாலும் கொண்டணைக்கவேணுமம்மா
புலந்திரனார்கதையுரைக்க புத்திவரமருள்வாய்

பாண்டியன் பெருமை.

பட்டணமாம்பட்டணமாம் மதுராபுரிபட்டணமாம்
பட்டணத்தையாளுகின்ற பாண்டியராசாக்கள்
மதுரைபதிதனிலே மன்னர்கள்ராசாக்கள்
நீதிமனுமுறைகள் நெறிதவறாபாண்டியர்கள்
ஆறிலொருகடமை அரசர்கள்வாங்குவது
சொக்கர்வலிமையுண்டு துரைராசாபாண்டியர்க்கு
மீனாட்சிவலுமையினால் மேன்மையுடனாண்டிருந்தார்
சக்கரநெறிப்படியே தரணிதனையாண்டிருந்தார்

அல்லியரசாணி உற்பத்தி.

இப்படியாகவே இருக்கின்றநாளையிலே
ஆறுயிரவர்களும் அணிதிரளாம்பாண்டியர்கள்
பிள்ளையைவேண்டியே பெருந்தவசுதானிருந்தார்
மைந்தனைவேண்டியே மகாதவசுதானிருந்தார்

சோலைமலருடைய சொக்கரைநோக்கியேதான்
கால்கள்நடுங்கத்தான் கடுந்தவசுதானிருந்தார்
சங்கரருமப்போது தயவாய்மனமிறங்கி
அங்கையர்கண்மீனாட்சி அருளுமிறங்கியேதான்
சந்திரர்கள்சூரியர்கள் சந்திபண்ணும்பொய்கையிலே
செவ்வலரிப்பூவிலே செல்வம்பிறந்ததுகாண்
அல்லிமலரிலே அவதரித்தாள்பெண்பெருமாள்
குழந்தையைப்பார்க்கவே கொற்றவர்கள்ராஜாக்கள்
கண்டுமனமகிழ்ந்தார் காவலர்கள்ராஜாக்கள்
பார்த்துமனமகிழ்ந்தார் பாண்டியராஜாக்கள்
கண்டெடுத்துக்கொண்டுவந்தார் காவலர்கள்ராஜாக்கள்
வைத்துவளர்த்தெடுத்து மறிவுள்ளபெண்கொடிக்கு
அல்லியரசாணியென்று அரசியற்குபெயருமிட்டு
நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாய்
வைத்துவளர்த்தார்கள் வண்டார்கருங்குழலை

அல்லியரசாணி பராக்கிரமம்.

ஏழுவயதாச்சு இளங்கொடியாள்நாயகிக்கு
பாதியரசு பகுந்தாண்டநீன்முகனை
முடிக்கவந்தநீன்முகனை முந்திமயிர்பிடித்து
குடலைபிடுங்கியேதான் கொம்பனையுமாலையிட்டு
பெண்ணரசுபட்டங்கட்டி பெருக்கமுடன்வாழ்ந்திருந்தாள்
ஆண்காற்றடித்தாலே அதம்பண்ணிபோட்டிடுவாள்
கண்டவரைகுத்தியே கழுவிலேபோட்டிடுவாள்
எண்ணவொண்ணாச்சேனையுடன் எடுத்தாளேமந்திரவாள்
மந்திரவாளெடுத்து மதயானைபோலெழுந்து
எதிர்க்கத்தான்கண்டவரை யெண்ணியேபாராமல்
கண்டமுனிராட்சதரைக் கண்டதுண்டமாக்கிடுவாள்
வடமதுரைநன்னாடு வடதேசப்பட்டணமும்
ஈழம்கலிங்கதேச மினமுள்ளபட்டணமும்
முத்துக்கப்பலாயிரமும் மிளகுகப்பலாயிரமும்
பாக்குபடுந்துறையும் பாண்டிவளநாடும்
இத்தனைநாடுகளும் இடமுள்ளராச்சியமும்
பட்டணமுங்கட்டியவள் பாருலகையாண்டிருந்தாள்
பத்துவயதாச்சு பைங்கொடியல்லியற்கு
வளர்ந்துசமைந்தாள்காண் மாதருநுவானாள்

ஸ்ரீகிருஷ்ணர் அல்லியை அர்ச்சுனற்கு பாரியாளாக நினைத்தது.

ஏழுலகையாண்டதொரு எம்பெருமாள்தான்பார்த்து
அல்லிமலரி லவதரித்தபெண்பெருமாள்
அழகில்மிகுந்ததொரு அல்லியாசாணியரை

தக்கப்புகழுடைய தருமரதுதம்பியரை
காண்டாவனமெரித்த காளையந்த அர்ச்சுனற்கு
ஆணலழகனுக்கும் அல்லியரசாணியற்கும்
இருவரழகுக்கும் ஏற்குங்காண்வையகத்தில்
என்றுசொல்லிமாயவனார் இயலாகத்தானினைத்து
சோலைமலருடைய சொக்கருமாயவரும்
அருளால்மிகுந்ததொரு அங்கையற்கண்ணாயகியும்
தேவாதிதேவருடன் தென்மதுரைவந்துநின்று
அடங்கலுந்தானழைத்து ஆறுயிரவருமாய்
பெண்கேட்கவந்தோங்காண் பேருலகில்ராஜாவே
பெண்ணாய்ப்பிறந்தாலும் பிழையில்லாப்பெண்பிறந்தாள்
நீண்முகனைக்கொன்று நீலிபட்டமாண்டவளை
கூடியவர்தானினைத்து கொம்பனையைக்கொள்ளுதற்கு
மதுரைப்பதியாளும் மன்னவர்கள்பாண்டியரே
மணக்கோலம்வந்தோங்காண் மன்னவரேயிப்பொழுது
என்றுயிவருரைக்க இராஜமன்னரப்பொழுது
ஆறுயிரவர்களும் ஐயன்மாரேதுசொல்வார்
மந்திரவாளோடே மயிலனையாள்தான்பிறந்தாள்
கண்டவரைக்கொன்று கழுவிலேஏற்றிவைப்பாள்
அண்டாப்பெருநீலி ஆர்சொல்லுங்கேளாளே
அப்படிக்கொத்தவளை அண்டப்பயப்படுவோம்
அவளுக்குஏற்றவர்தான் அர்ச்சுனரேயாகுமென்றார்
ஆண்காற்றடித்தால் அதம்பண்ணிப்போட்டிடுவாள்
உங்களாலானபடி உத்தமரேபாருமென்றார்

அர்ச்சுனன் பாம்பாகவும் பெருமாள் பிடாரனாகவும் வருதல்.

ஏழுலகையாண்ட எம்பெருமாள்தான்கேட்டு
என்னாலேயாகுமென்று எழுந்திருந்தாரெம்பெருமாள்
காண்டாவனமெரித்த காளையென்னுமர்ச்சுனனை
ஐந்துதலைநாகம்போல் அடைவாய்வடிவாக
மண்ணுளிப்பாம்பு வகையானசர்ப்பமுடன்
புண்ணியமூர்த்தி பிடாரனைப்போல்வேஷங்கொண்டு
வேஷம்உருவெடுத்து வேறேயுருமாறி
அரசாளும்நாயகியாள் அல்லியுடபட்டணத்தில்
தண்ணீர்குளத்தருகே தார்வேந்தர்வந்துநின்று
பொற்பாம்புதன்னைவிட்டு பெருமாளுமாட்டிவைத்தார்
ஆயக்குழலூதி ஆயனுமாட்டிவைத்தார்
பாடாதசிந்துகவி பாடினார்மாயவரும்
அரசாளும்நாயகியாள் அல்லியுடத்தாதியர்கள்
[illegible]ாவனத்திலே பொய்கையருகாக

மாயன்பெருமாளும் மகாமயக்கந்தான்செய்து
மகடிக்குழலூதி மன்னவருமாட்டிவைத்தார்
ஆட்டினார்நாகமும் ஆடுதுகாணந்நேரம்
பாட்டுக்கிசைவாகப் பாம்புகளாடுதுகாண்
தண்ணீர்குடமெடுத்துத் தண்ணீர்க்குவந்தார்கள்
பாம்பாடும்பாவனையை பைங்கிளிமார்தான்பார்த்து
அரசாளும்நாயகியாள் அடிவணங்கிதெண்டனிட்டு
...துமதுரைவளர் நாட்டில்வந்ததோர்பாம்பு
தண்ணீர்குளத்திலே தார்குழலேயாடுதென்றார்
பாம்பாடும்பாவனையை பட்டணத்தில்கண்டதில்லை
அந்தஅழகும் அதிசயமுங்கண்டறியோம்
என்றுமவளுரைக்க ஏந்திழையுந்தான்கேட்டு
அப்படிப்பட்டதொரு அழகுள்ளநற்பாம்பை
இங்கேயழையுமென்றாள் ஏந்திழையாளல்லியரும்
அப்படியேபோய் அழைத்துவந்துவிட்டார்கள்
பாம்பைத்திறந்துவிட்டார் பார்வேந்தர்மாயவரும்
மகடிக்குழலூதி மாயவனாராடினின்றார்
பாம்பாடும்பாவனையை பைங்கிளியுந்தான்பார்த்து
மன்னன்மேல்சிந்தையுமாய் மயங்கினாள்மங்கையரும்
மாயவனைத்தான்பார்த்து மயிலனையாளல்லியம்மாள்
பாம்பையனுப்புமென்றாள் பைங்கொடியுந்தன்னருகே
அப்படியேகற்பாம்பு அவளருகேவந்ததுகாண்
பாம்புமடியேறப் பைங்கிளியும்பார்த்திருந்தாள்
முன்னழகும்பின்னழகும் முதுகில்மட்சரேகைகளும்
அரசாளும்நாயகியாள் அல்லியருந்தான்பார்த்தாள்
காண்டாவனமெரித்த காளையருச்சுனரும்
சொக்குப்பொடிபோட்டார் தேன்மொழியாளல்லியற்கு
மாதுசவுரியம்போய் மயங்கினாளர்ச்சுனன்மேல்
மயங்கியெழுந்திருந்து மாயவரைத்தான்பார்த்து
பாம்பையடையுமென்றாள் பைங்கொடியாளல்லியரும்
அந்தப்பிடாரன் அடைவாகப்போனபின்பு
அரசாளும்நாயகியாள் அல்லியருந்தான்பார்த்து
ஆறாயிரவரென்னும் அணிதிரளாம்பாண்டியர்கள்
தந்தையார்சீர்பாதந் தையலடிபணிந்து
தக்கபுகழுடைய தருமரிடதம்பியரை
இந்தட்சணமே இயலாகவரவழையுங்கள்
கலியாணங்கூட்டுமென்றாள் காரிழையல்லியரும்
ஆறாயிரவர் அணிதிரளாம்பாண்டியர்கள்
வற்றிக்கிடந்தவருள்பெரியகாவேரி
முட்டப்பெருக்கியே கரைபுரண்டுவந்தாற்போல்

இன்பங்குளிர்ந்தாரே இருதோளும்பூரித்து
தக்கப்புகழுடைய தருமர்தனஞ்செயற்கு
எழுதினர்பாண்டியர்கள் இன்பமர்யோலைதன்னை
காண்டாவனமெரித்த காளையந்தவர்ச்சுனர்க்கும்
அரசாளும்நாயகியாள் அல்லிமலர்நாயகிக்கும்
சித்திரைமாசத்திலே சீர்பத்தாந்தேதியிலே
சுக்கிரவாரமது தசமிபுனர்பூசம்
அன்றையவேளையிலே அர்ச்சுனற்குமல்லியற்கும்
கலியாணங்கலியாணம் காரிழைக்குங்கலியாணம்
கலியாணமென்றுசொல்லி கனமானவோலையப்போ
இட்டோமுகூர்த்தமென்று எழுதினரோலையிலே
ஓலைகண்டநாழிகைக்கு உத்தமரேவாருமென்றூர்

கலியாணம்.

என்றிருக்குமோலைதன்னை இராசாக்கள்தான்பார்த்து
ஐவர்பஞ்சபாண்டவர் அனைவோருந்தான்பார்த்து
தக்கப்புகழுடைய தருமரவரேதுசொல்வார்
இதுநல்லகாரியங்கள் என்றுமனதிலெண்ணி
சரியொத்தசம்பந்தம் ஆரென்றுதார்வேந்தர்
மதுராபுரிதனக்கு மன்னவர்கள்பயணமானூர்
துரோபதைநாககண்ணி சுபத்திரையும்பயணமானூர்
மந்தாரக்குந்தியம்மாள் மாதாவும்பயணமானூர்
வந்துஇறங்கினூர் மதுரைபதிதனிலே
ஆரானூர்திருவுளத்தால் அர்ச்சுனற்குமல்லியற்கும்
செய்யுஞ்சடங்குவகை செய்தார்கள்வேதியர்கள்
மங்கிலியந்தானெடுத்து வாள்விசையன்தான்றரித்தான்
மாதுகழுத்திலே மங்கிலியஞ்சாற்றினபின்
கூடியிருந்தார்கள் குங்குமகட்டிலின்மேல்
அர்ச்சுனனுமல்லியரும் அமர்ந்திருந்தாரங்நோம்

புலந்திரனுற்பத்தி.

அப்படியாகவேதான் அநேகநாட்சென்றபின்பு
பாலகனுண்டானூன் பைங்கிளியாளல்லியற்கு
பத்துமாதமுஞ்சென்று பைங்கொடியாளல்லியரும்
பெற்றூள்புலந்திரனை பேருமிட்டாளல்லியரும்
வளர்த்தாள்புலந்திரனை வைத்திருந்தாளல்லியரும்

புலந்திரனுக்குக் கலியாணம்.

ஐந்துபிராயமது அடைவாய்வளர்ந்தபின்பு
தேசத்தழகுமன்னன் திரியோதனன்தங்கை
துன்னுங்கருங்குழலாள் துற்சடையாள்தன்மகளை

புலந்திரன் களவுமாலை.

அந்தகாரிழையாள்பாது கலந்தாரிநாயகத்தை
போரஞ்சாமன்னர் புலந்திரவீரியற்கு
கலியாணம்பண்ணவே காரிழையாளல்லியரும்
சரியொத்தசம்பந்தம் தார்குழலாள்வேண்டுமென்று
வேண்டுமென்றுசொல்லி விரும்பியேமங்கையரும்
ஐவரும்நூற்றுவரும் அப்பாலேகூடியொன்றாய்
கூடிமணஞ்செய்தார்கள் குமாரன்புலந்திரற்கு
கலியாணஞ்செய்துமே கடிகிமுடிந்தபின்பு
அப்படியாகவே அநேகநாள்சென்றபின்பு
தேசத்தழகுமன்னன் திரியோதிரப்பெருமான்
பருவமதயானை பஞ்சவர்களைவரையும்
உருவமதயானை உத்தமர்களைவரையும்
வலியவேதானழைத்து மாயத்தால்சூதாடி
பார்வனவனவாசம் பஞ்சவர்கள்போயிருக்க
அன்றுமுதலாக அர்ச்சுனனார்புத்திரனும்
க்காரிழையாள் மாது கலந்தாரிநாயகியும்
அவரவர்கள்தாய்வீட்டில் அருமையாய்தானிருந்தார்
தங்கள்தங்கள் தாய்மனையில்சதிருடனேவளருகிறார்

அல்லிகொலுச்சபை.

அப்போது அல்லியவள் அரசாளும்நாயகியாள்
அஞ்சாப்பெரும்புலியா அரிவையிளமங்கையரும்
ஆசாரமண்டபத்தில் அருங்கிளியும்வீற்றிருந்தாள்
எண்டிசையுஞ்செங்கோல் எதிரொருவரில்லாமல்
தப்பாதரசாண்டாள் தாமரைசூழ்நாயகியாள்
முத்துவளநாடும் முடிகவியும்பெண்பெருமாள்
பட்டணமுஞ்செங்கோலும் பாராளும்பெண்பெருமாள்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளல்லியரும்
கொய்பேரிடையாள் கொலுசலைந்தபிற்பாடு
வண்டார்குழலாளும் மாளிகையிற்போய்புகுந்து
சிங்காதனத்திலே தேன்மொழியும்வீற்றிருந்து
தனக்குக்கவரியிடும் தாதிமுகம்நோக்கி
வயிரக்கவரியிடும் மங்கையரைத்தானழைத்து
முத்தின்கவரியிடும் மூப்பிமுகம்நோக்கி
செம்பொன்கவரியிடும் தேன்மொழியேநீகேளாய்

அல்லி சொற்பனங் கண்டது.

நேற்றையராத்திரியில் நித்திரைபோம்போது
சொற்பனங்கண்டேனான் துன்னுங்கருங்குழலே
தாமக்கருங்குழலாள் தாதியருக்கூறலுற்றாள்

ஏதேதுசொற்பனங்கள் எனக்கரியக்கூறுமென்றாள்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்கூறுகிறாள்
சோலைமலருடைய சொக்கநாதர்கோவிலுக்கு
சேவிக்கப்போனதாய் தேன்மொழியேநான்கண்டேன்
சோலைமலருடைய சொக்கரவர்கானபார்த்து
சிவனாருமப்போழுது செங்கழுநீர்பூவெடுத்து
அங்கையற்கண்ணம்மை அகிலாண்டநாயகியும்
கொண்டுவந்துயென்கையில் கொம்பனையுந்தான்கொடுத்தாள்
மைந்தர்புலந்திரற்கு வாங்கினேனேற்குமென்று
ஏற்குமென்றுவாங்கி இந்திரர்கைகொடுத்தேன்
அதனையவர்வாங்கி அவன்தேவிகைகொடுத்தான்
மங்கையரும்செல்வம் பெற்றுவளர்ந்திருக்கக்கண்டேன்
நன்மையோதுன்மையோ நாயகமேகூறுமென்றாள்
தாமக்கருங்குழலாள் தாதியருக்கூறலுற்றாள்
ஆச்சிநீகண்டகினா அறியவேசொல்லுகிறேன்
உன்மைந்தனுக்குமைந்தன் வாய்க்குங்காண்தப்பாது
புத்திரற்குபுத்திரற் வாய்க்குங்காண்தப்பாது
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்கூறுவாள்
ஆரடிதாதியரே அன்னபசுங்கிளியே
பஞ்சவர்கள்நாடுவிட்டு பாரவனம்போயிருக்க
ஐவருங்காட்டகத்தே அனள்பிறந்தாள்காட்டகத்தே
மாலைமுடியார்கள் வனவாசம்போயிருக்க
வண்டார்குழலாளும் மயிர்விரித்துபோயிருக்க
எந்தவனத்திலேயிருக்கிறாரென்றறியேன்
பஞ்சவரும்நாடுபெற்று நாமும்பயந்தெளிந்து
கொற்றவர்கள்நாடுபெற்று வருங்காலமெக்காலம்
வண்டார்குழலாளும் வாழ்பெறுவதெக்காலம்
என்மைந்தருக்குமைந்தருமாய் வாய்ப்பதுமெக்காலம்
எண்ணாததுமெண்ணியே ஏங்கிமுகம்வாடினாள்
தாமக்கருங்குழலாள் தாதியருங்கூறுகிறாள்
நீர்கண்டகினவுநன்மை கன்னியரேநீர்கேளீர்
மைந்தருக்குமைந்தருய் வாய்க்கும்புனக்கிளியே

புலந்திரன்பள்ளியறைக்கு அல்லிவந்துகாண்கிறது.

பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்கூறுகிறாள்
போரஞ்சாமன்னன் புலந்திரவீரியனார்
என்பாண்டிப்பெருமாளின் பள்ளியறையெங்கேயென்றாள்
மண்டபத்துக்குள்ளாக மன்னவனார்பள்ளியென்றார்
எங்கேயென்றுசொல்லி எழுந்திருந்தாளல்லியம்மாள்
சிங்காதனத்தைத் திகழக்குதித்திறங்கி

தாமக்கருங்குழலாள் தாதியருமப்போது
கட்டழகிப்பெண்ணை கன்னியரேவாருமென்று
மெத்தெனவேதானெழுந்து வேல்பொருந்துங்கண்ணாளும்
சித்திரஞ்சேர்மண்டபத்தே சென்றாள்திருவணையும்
தாள்நீட்டிக்கொண்டு தனஞ்சயனும்பள்ளிகொண்டான்
காமக்கருங்குழலாள் தாதியருமப்போது
பேர்சொல்லித்தானழைத்தாள் பெருமாள்புலந்திரனை
அஞ்சுவான்மாதே ஆரணங்கேபோவென்று
வாளாலேயேந்தி வளநாடிதான்திறந்தாள்
எந்தித்திறந்தாளே இந்திரனார்பொற்கதவை
தருமமுடியாளும் தனித்துப்படுத்திருந்தான்
தேவியுடனேயிவர் திருத்தமுடன்கூடாமல்
தனியாகப்படுத்திருக்கச் சங்கரனார்கட்டளையே
பகையாகத்தலைக்கடையில் பக்தஜனவாசலிலே
மாதைத்துயிலுரிந்த பாபாவிவாசலிலே
கோதைதுயிலுரிந்த கொடும்பாவிவாசலிலே
சகுனிதலைக்கடையில் சண்டாளன்வாசலிலே
மாற்றான்றன்வாசலிலே மாலையிடப்பெற்றேனே
மற்றொருவர்வாசலிலே மாலையிட்டேனாமாகில்
பொற்கைவளநாடியரைப் போகவரப்பாரேனோ
வண்டார்குழலாளை வரப்போகப்பாரேனோ
கொம்பனையாள்செய்ததொரு குடிவாழ்க்கைபாரேனோ
இந்திரனார்தேவிசெய்யும் இயல்வாழ்க்கைப்பாரேனோ
காணாதிருந்தேனே கண்ணற்றாளானேனே
பாராதிருந்தேனே பாவினானேனே
மைந்தர்புலந்திரனைப் பார்த்தாள்பலகாலும்
கால்கள்தொடங்கியே கரியகுழல்வாயும்
பார்த்தாள்பலகாலும் பாலன்புலந்திரனை
தாமக்குழலாளும் தாதிமுகம்நோக்கி
இவர்பொய்யாமொழியும் பொறுமைதலையழகும்
ஐவர்கள்தனையழகும ஆசாரப்பேரழகும்
தங்கநெறியுந் தவத்திற்பெருமைகளும்
தக்கப்புகழுடைய தருமரைப்போலிருக்கும்
இந்திரனார்மார்பும் இடம்பெரியதிண்டோளும்
வெற்றிமதயானை வீமரைப்போலிருக்கும்
அழகுமிளமையும் அர்ச்சுனரைப்போலிருக்கும்
தலையில்தலைக்கட்டும் சகாதேவன்போலிருக்கும்
நடையுமநடையழகும் நகுலரைப்போலிருக்கும்
விரலும்விரற்கொடியும் வேந்தரைப்போலிருக்கும்
காசிவளநாடாளுங் கர்னரைப்போலிருக்கும்

ஐவர்திருவழகும் அருமைகள்தானுமுண்டு
வேறேவருகுமோ வேல்பொருந்துங்கண்ணாளே
மைந்தர்புலந்திரனை வாளாலேதட்டிவிட்டாள்

புலந்திரன் தாயாரைக் காண்கிறது.

சற்றேதான்தட்டலுமே தருமர்திருமகனும்
பொட்டெனக்கண்விழித்துப் புலந்திரனார்தான்பார்த்து
அவர்-அஞ்சிப்பயந்து அட்சணமெழுந்திருந்து
உத்தமனார்வேந்தன் உருமாலைதான்கழல
திட்டெனவேதான்குதித்தான் செம்பொன்னின்மெத்தைவிட்டு
பூங்காவில்போகவென்றால் பொற்கொடியுங்கிட்டிவந்தாள்
மலர்க்காவில்போகவென்றால் மாதாவுங்கிட்டிவந்தாள்
மாலைமுடியானும் மலரணையிற்பூவெடுத்து
மாதாவின்பாதமது மலர்தூவித்தெண்டனிட்டான்
வந்துபணிந்தவனை வாளாலேதானெடுத்து
மாணிக்கமெத்தைதன்னை வாளாலேதான்விலக்கி
ஏறியிருந்தாளே ஏகாந்தக்கட்டில்மேல்
போரஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறலுற்றான்
இந்நேரம்ஆச்சிநீ யிங்குவந்தகாரியமேன்
நான்செய்துவந்தகாரியத்திற் செய்தபிழையுமுண்டோ
ஊரிற்புதுமையுண்டோ உள்ளூரிற்குற்றமுண்டோ
நாட்டிற்புதுமையுண்டோ நமதூரிற்குற்றமுண்டோ
யானைபடுகுழியும் ஆச்சிமிகராச்சியத்தில்
மெத்தக்களவுகள் மெல்லியரேவந்ததுண்டோ
கப்பலுஞ்சோங்கும் களவுகள்மெத்தவுண்டோ
இந்நேரம்ஆச்சிநீ ரிங்குவந்தகாரியமேன்
சொல்லியேதான்தொழுதான் சுந்தரப்பூமுடியான்
வேறொன்றுமில்லையையா வேந்தர்பெருமாளே
அஞ்சாதேயென்றுசொல்லி அணைத்தெடுத்துத்தாதியர்கள்
ஆடையொதுக்கியே ஆபரணம்ஒப்பமிட்டு
உத்தமனார்வேந்தருக்கு உருமாலைதானுங்கட்டி
காவலனார்வீரியனும் கைகட்டிநின்றானே
அஞ்சியேநின்றானே ஐயன்பெருமானும்

புலந்திரனுக்குத் தாயார் சொல்லுகிறது.

மைந்தன்புலந்திரனை வளநாடிதான்பார்த்து
தருமபூடியானே தனியாகப்பள்ளிகொண்டாய்
உன-மச்சினியாள்தானொழிய மறவொருத்தியாகாதோ
அத்தைமகளொழிய அசல்நாட்டாளாகாதோ
ஐயனார்கோவிலிலே ஆடும்ரம்பையாகாதோ
நாடகசாலையிலும் நாயகிமார்தங்களிலும்
வேறொருத்தியாகாதோ விஜயன்மகனாரே

கொம்பேரிடையாளும் கோவிலிலேதேவடிமார்
எண்பத்தெண்ணுயிரம்பே ரிளங்கொடிமார்தானுமுண்டு
அன்னநடைமாதர்களும் ஆகாதோமன்னவனே
தருமமுடியானே சலிப்புவந்தகாரணமேன்
மதுரையம்பத்தாருகாதம் ஆள அரசிருக்க
ஆருயிரவரொன்னும் அணிதிராளாமபாண்டியர்கள்
பொன்னின்மலைநாடாளும் போரொழிதிஅம்மானும்
மாலைமுடியானே மாமன்மார்தானிருக்க
நானுமிருக்கையிலே நாயகமேயுந்தனுக்கு
தருமமுடியானே சலிப்புவந்தகாரியமேன
நன்முகமைந்தனே நான்பெற்றேனென்றிருந்தேன்

புலந்திரன் சொல்லல்.

போரஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறலுற்றான்.
வாய்புதைத்துக்கைகட்டி மன்னனெடுத்துரைப்பான்
ஆச்சிநீர்கேளீ ரடியேன்வாய்விண்ணப்பம்
தேசத்தழகுமன்னன் திரியோதிரன்பாவி
பருவமதயானை பஞ்சவர்களைவரையும்
உருவமதயானை உத்தமர்களைவரையும்
விருந்தமிர்தமென்றுசொல்லி வேந்தரைத்தானழைத்து
வலுவிலேதானழைத்து மாயத்தால்சூதாடி
மாயத்தால்சூதாடி மண்டலத்தைத்தான்பறித்து
உபாயத்தால்சூதாடி உத்தமர்களைவர்களும்
எத்தேசமுந்தோற்று இருப்பிடமுந்தான்தோற்று
வில்தோற்றுவாள்தோற்று வீமாபுரந்தோற்று
தக்கபுகழுடைய தர்மரவர்நால்வரையும்
வீமனருச்சுனரை வேந்தரவர்தோற்று
நகுலசகாதேவ ராசர்களைத்தோற்று
தம்மையுந்தோற்றுத் தம்பிமாரையுந்தோற்று
ஆடைக்கொடிதோற்று ஆபரணந்தான்தோற்று
சேலைப்பணிகளுடன் சேரஅவர்தோற்று
ஆயிரங்கோடிவெள்ளை யானைகளைத்தோற்று
ஐந்நூறுகோடி அசுவங்களைத்தோற்று
ஆயிரங்கோடி அரம்பையரைத்தோற்று
நாடகசாலைப்பெண்கள் நாயகியைத்தோற்று
யானைகுதிரைகளை அரசரவர்தோற்று
சேரஅவர்தோற்று செம்பொன்மணிமுடியார்
நித்திலங்குபூமுடியார் நீரோடுமண்டபமும்
பாவையுருவதுபோல் பளிங்குமாமண்டபமும்
பேடைமலர்க்கண்ணாள் பேரரசிமண்டபமும்
காவலர்கள்தேவி கதைகேட்குமண்டபமும்

தருமமுடிபஞ்சவர் சனியெண்ணெய்மண்டபமும்
பேர்பெரியபஞ்சவர்கள் புதனெண்ணெய்மண்டபமும்
செப்புமழகுடைய சிவன்பூசைமண்டபமும்
ஐவர்கள்பூசைசெய்யும் அரனாருடமேடை
இத்தனையுந்தோற்றுமே யிவ்வளவுமல்லாமல்
வித்தகனார்பஞ்சவர்கள் பெற்றவிடக்கொளியை
தாமக்குழலாளை தருமருடதேவியரை
என்-மாதாவையும்வைத்து மன்னவர்கள்தோற்றார்கள்
இத்தனையுந்தோற்றே யிருந்ததொரு மன்னவரும்
தேசத்தழகனவன் திரியோதிரன்பாவி
மாவுரியைத்தான்கொடுத்து மன்வர்களைவரையும்
வெய்யலிலேதானிறுத்தி வேந்தரைவைத்தானே
தோருவடிவழகி துரோபதையாள்நாயகத்தை
தாமக்குழலாளைத் தள்ளிநடக்கவைத்தான்
வேல்பொருந்துங்கண்ணாளை வீதிநடக்கவைத்தான்
அன்னநடையாளை அம்பலமேற்றிவைத்தான்
பாவையழகியரைப் பந்தாட்டமாட்டிவைத்தான்
சொல்லாதுஞ்சொல்லியே துகிலுமுரியவைத்தான்
யஞ்சவர்கள்புண்ணியத்தால் பாஞ்சாலன்புண்ணியத்தால்
தக்கபுகழுடைய தர்மரிடபுண்ணியத்தால்
மாளாதிருந்தது மாதுதுகிலாடை
உரியாதிருந்தது உத்தமியாள்பூவாடை
அழியாதிருந்தது ஆணழகிபூவாடை
உருவிநழுவிதுயில் உடைகுலைந்தாளாமாகில்
வெற்றிமதயானை வீமரதுதெண்டாலே
வீமரதுதெண்டாலே வேந்தர்படைகளெல்லாம்
மாளுவதுஅன்றல்லோ மன்னன்பெரும்படைகள்
சாகிறதுஅன்றல்லோ தனஞ்செயன்கையம்பாலே
பஞ்சவருந்துரோபதையும் பாரவனம்போயிருக்க
எந்தவனத்திலே இருக்கிறாரென்றறியேன்
எக்காட்டுக்குள்ளே யிருக்கிறாரென்றறியேன்
புன்னையுடன்தும்பை விருப்பமுடன்காய்கிழங்கு
தின்றுமவர்திரிய தேசாந்திரிபோலே
காடுசெடிதோறும் கடுகிஅவர்திரிய
எனக்குச்சுகமேது என்தாயேசொல்லுமென்றான்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்கூறுகிறாள்
அத்தனைக்குமீர்சலித்தீர் ஆனந்தவாழ்மார்பா
என்செய்வேன்மகனே யெழுத்துவசந்தப்பாது
தலையின்விதிப்படி தப்பாதொருக்காலும்
பாஞ்சாலிபட்டுரிய பஞ்சவர்கள்காடுறைய

உன்வலதும்என்வலதும் உத்தமனேயல்லவிது
தெய்வவலதுகண்டீர் செம்பொன்முடியாரே

புலந்திரனைக் கலந்தாறியிடஞ்சேர்ந்துவாவென்று சொல்லியது.

உன்மச்சினியாள்மீறி வளர்ந்துசமைந்தாளாம்
அத்தைமகள்மீறி அவள்வளரக்கண்டேனான்
கண்டேன்கனவிலே கட்டழகிசீர்வடிவை
மச்சினியாள்கோவிலுக்கு மன்னாநீசெல்லுமென்றாள்
பொற்கொடியாள்கோவிலுக்குப் போய்வருவாய்புலந்திரனே

புலந்திரன் மறுத்துச் சொல்வது.

போரஞ்சாமன்னன் புலந்திரன்கூறலுற்றான்
பகைவனரண்மனைக்குப் பாவியிடவாசலிலே
சகுனிபடுபாவி சத்துருவின்வாசலிலே
எந்தாயைத்துகிலுரிந்த சண்டாளன்வாசலிலே
கோதைத்துகிலுரிந்த கொடும்பாவிவாசலுக்கு
மாதுபொருட்டால் வலுவிலும்போவேனே
பஞ்சவரும்நாடும்பெற்று நாமும்பயந்தெளிந்து
கொற்றவரும்நாடுபெற்று நாமும்குறைநீங்கி
மன்னர்கள்நாடு பெற்றுவந்தபிறகாக
வண்டார்குழலுடையாள் வந்ததின்பிற்பாடு
அன்னநடையென்னுடைய தாய்வந்தபிற்பாடு
பொற்கொடியாள்வாசலுக்குப் போரேன்காணச்சியரே
இப்போதுபோவதில்லை யென்தாயே யென்றுரைத்தார்
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியவளேதுரைப்பாள்
தோளுக்குத்தோளு துணைவேனுந்தம்பியரே
காலத்திற்பெற்றபிள்ளை கைக்குதவிகண்டீரோ
போனீரேயாமாகில் புத்திரரைப்பெற்றிடுவீர்
பெற்றீரேயாமாகில் பேருண்டாய்வாழ்ந்திடுவீர்
பொற்கொடியாளரண்மனைக்குப் போவீர்புலந்திரரே
போரஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறலுற்றான்
எனக்குமோரையாண்டு ஏந்திழையாள்மூவாண்டு
மாலையிட்டபிற்பாடு மாது அறியாளே
தையலர்க்குமங்கிலியந் தரித்தவன்நானறியேன்
என்னையவளும் ஏந்திழையாள்தானறியாள்
நானும்வளர்ந்தது நாயகியும்தானறியாள்
என் - மாமியார்வீட்டை மறுபடியும்போனதில்லை
மாமியார்வீட்டிலே மருவுண்டுவந்ததில்லை
பொற்கொடியாள்வாசலுக்குப் போகும்வகைசொல்லுமென்றார்.
அரசாளும்நாயகியாள் அல்லியருந்தான்கேட்டு
சீறியெறிபறந்து செவ்வாய்க்கருகலிட்டு
எதிர்த்தெதிர்த்துப்பேசுவதும் என்னுடன்சொல்லுவதும்

மறுத்துத்தடுக்கிறாய் மன்னாகெருவமென்ன
இந்தக்கெருவத்தை இப்போதடக்குவேனென்பார்
கட்டழகிதாதியரே கருமானையழைபுமென்றாள்
விஜயனார்தன்மகனை விலங்கிலேபோடுமென்றாள்
கால்விலங்குகைவிலங்கு கழட்டவொண்ணாப்பெருவிலங்கு
மார்விலங்குதோள்விலங்கு மன்னனுக்குப்போடுமென்றாள்

புலந்திரன் சொல்வது.

போரஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறலுற்றான்
என்னைவிலங்குபோட யென்செய்தேனென்தாயே
போகாத அரண்மனைக்குப் பொற்கொடியேபோவேனோ
மங்கையர்கள்கோவிலுக்கு வலுவிலும்போவேனோ
குடிமக்கள்வாசலிலே கூசாமல்போவேனோ
உப்பரிகைமேல்நான் உயரக்குதித்தேனோ
கப்பல்கள்சோங்குகள் களவுகள்செய்தேனோ
என்னகொடுமைசெய்தேன் என்னைவிலங்கிட
அரசாளும்நாயகியாள் அல்லியருங்கூறுகிறாள்
ஆடாதம்பியரே அல்லவென்றார்போகாதே
அத்தனையுமல்லாமல் அரசே நீகேட்டருள்வீர்
மச்சினியாள்மீறி வளர்ந்துசமைந்திருக்க
மாதுசிறையிருக்க மன்னவனேயாகாது
குடியாள்சிறையிருக்கக் கொற்றவனேயாகாது
நாடுவராதுமன்னா நகருகளும்சேராது
ஊரும்வராதுகண்டீர் உத்தமனேயுந்தனுக்கு
மச்சினியாள்கோவிலுக்கு மகனேநீசெல்லுமென்றாள்
போரஞ்சாமன்னன் புலந்திரனும்கூறலுற்றான்
உன்-ஆக்கினைக்குத்தான்பயந்து ஆச்சியரேபோனாலும்
அவள்-கற்கோட்டைமுத்திரையுங் கர்னனிடகாவல்களும்
சுத்திமதிலெழுப்பிச் சூரியனைக்காணாமல்
பக்கமதிலெழுப்பி பகவானைக்காணாமல்
வாசலுக்குஆயிரம்பேர் வாள்வீரர்காவலுக்குள்
உருவினஆயுதங்கள் உறையிலேபோடாமல்
விழித்தகண்சிமிட்டாமல் மெல்லியிடமிருப்பார்
காசிவளநாடாளுங் கர்னன்சிலைகாரன்
தாமக்குழலாளின் தலைவாசல்காப்பானாலும்
அத்தனையுந்தான்கடந்து ஆச்சியரேபோனாம்
ஆயிரந்தாதி அவளருகேயிருப்பாராம்
அம்மானையாடி ஆடுங்கழலாடி
விளையாடிவீற்றிருப்பார் மெல்லியராயிரம்பேர்
பொற்கொடியாளரண்மனைக்குப் போகும்வகைசெப்புமென்றார்

அரசாளும்நாயகியாள் அல்லியருமேதுசொல்வாள்
ஆருமறியாதே அம்மானைக்காணாதே
அருகிருக்குந்தோழியர் யாருமறியாமல்
மாதினிடவாசலிலே மன்னவரேநீர்போவீர்
மேகப்புரவியது வேந்தனேநான்தருவேன்
என்னாணை மன்னாநீ இனியொன்றுஞ்சொல்லாதே
மன்னாநீபேசாதே மன்னர்பெருமாளே
தருமர் திருவாணை தம்பிமார்தன்னாணை
காடுரைந்தபஞ்சவர்கள் கட்டழகிதன்னாணை
பின்னையெங்குஞ்செல்லாதே பெருமாள்புலந்திரனே
மச்சினியாள்கோவிலுக்கு மன்னாநீசெல்லுமென்றாள்
போரஞ்சாமன்னன் புலந்திரனுமேதுசொல்வான்
அவர்எந்தவனத்திலே இருக்கிறாரென்றறியேன்
இதுவுமொருகாரியமாய் இவ்வாணைவந்ததென்ன
மாளவென்றால்மாளுகிறேன் மாதாவேஇப்போது
ஆணைவிடுந்தாயேயென்று அடிவணங்கித்தெண்டனிட்டான்
வந்துபணிந்தவரை வாளாலேதாவெடுத்து
ஆணழகர்பஞ்சவர்கள் ஐயரிடயாணைவிட்டேன்
காடுரைந்தபாஞ்சாலி கட்டழகியாணைவிட்டேன்
தருமருடஆணைவிட்டேன் தம்பிமார்ஆணைவிட்டேன்
மாதருடன்கூடி மருவிவருமளவும்
என்ஆணைமட்டும் இருக்கட்டும்இந்திரனே
என்றுமவருரைக்க வின்பமுடன் தான்கேட்டு
மாதாவின்பாத மலர்தூவித்தெண்டனிட்டு
கொம்பனைக்குத்தெண்டனிட்டுக் கூறுவானிந்திரனும்
உம்மாணைகொண்டுநான் ஊர்வழியேபோவேனோ
தாயாணைகொண்டுநான் தனிவழியேபோவேனோ
போனால்பலிக்குமோ பொற்கொடியேயுந்தனுக்கு
ஆணைவிடுமென்று அடிவணங்கித்தெண்டனிட்டான்
அரசாளுநாயகியாள் அல்லியருந்தான்கேட்டு
விட்டேனேயாணையெல்லாம் வேந்தர்பெருமாளே

அல்லி இந்திரனிடத்துப் புரவிவாங்குவது.

ஆகாயவான்புரவி அழைப்பித்துநான்தருவேன்
இந்திரரேநீரும் இங்கேயிருமென்றுசொல்லி
கட்டழகிநாயகியும் காவலிலேபோய்ப்புகுந்து
ஆழச்சுனையில் அரசியருந்தானிறங்கி
காலோடுகண்ணும் கனிவாயுங்கொப்பளித்து
வாயோடுபல்லும் மதிமுகஞ்சுத்திசெய்து
தென்மதுரைநாடாளுந் திருநீற்றுக்காப்பணிந்து
சிந்தித்துநின்றாளே சிவனையடிபணிந்து

தேவேந்திரனை நினைத்தங்கே தெண்டனிட்டாள்
மைந்தர்புலந்திரற்கு வான்புரவிவேணுமென்று
ஆகாயவான்புரவி யாரணங்குவேண்டுமென்று
இந்திரரைநோக்கி ஏந்திழையுந்தெண்டனிட்டாள்
மருமகள் தானினைக்க மன்னவருந்தான்கேட்டு
தேவேந்திரருந்தான் தேவிமுகம்நோக்கி
கண்டாயோபெண்ணரசே கயற்கண்ணாள்நின்றவிதம்
தன்-மைந்தருக்குமைந்தருமாய் வாய்க்கவேவேண்டுமென்று
புத்திரற்குப்புத்திரராய்ப் பிறக்கவேவேண்டுமென்று
தவசுமேசெய்கிறாள் தையலிளம்பிறையாள்
என்றுரைக்க இந்திரனார் இந்திராணிதான்கேட்டு
தேங்காய்க்குமூன்றுகண் தேசத்திலென்பார்கள்
ஓடுமயில்கண்ணாட்கு ஒருகண்ணேயுள்ளதுவும்
தோளுக்குத்தோளு துணைவேண்டுமிந்திரரே
அதனாலேயல்லவோ யாரணங்குவருந்துகிறாள்
ஆகாயவான்புரவி அனுப்பவேவேண்டுமென்றாள்

தேவேந்திரன் புரவிகொடுத்தது.

தேவேந்திரபகவான் சிரித்துமனமகிழ்ந்து
வானத்துமேகங்கள் வானவர்கோன்வரவழைத்து
பார்த்தானேயிந்திரனும் பார்வைகள்கொள்ளாதே
இப்படிக்குப்போனால் இந்திரற்குஏற்காது
என்றுஇவர்நினைத்து இன்பமுள்ளபேரனுக்கு
பூமியில்வாழுகிற புரவிபோல்சோடித்து
அங்குபடிவைத்தல்லோ அழகாயலங்கரித்து
நாலுகால்வண்டயமாம் நடுக்கழுத்திற்கொலுசுகளாம்
செம்பொன்சிறுசதங்கை சேர்ந்தபலவரையும்
அம்பொன்னின்கிண்கிணியும் அழகாகபூட்டினாராம்
மாணிக்கந்தன்னாலும் வைடூரியந்தன்னாலும்
நெற்றிக்குசுட்டிகட்டி நேர்விழிக்குமையெழுதி
மெத்தைதமடுத்திட்டு மேதேயணைகோலி
அம்பொன்னின்கிண்கிணியும் அழகாகப்பூட்டினாராம்
மாணிக்கந்தன்னாலும் வைடூரியந்தன்னாலும்
நெற்றிக்குச்சுட்டிகட்டி நேர்விழிக்குமையெழுதி
மெத்தைதமடித்திட்டு மேலேயணைகோலி
சித்திரஞ்சேர்பட்டு சீராய்மடித்துவிட்டு
குப்பியிலேசாந்துகளும குழாயில்புனுகுகளும்
வாய்த்தவில்லைச்சுருளும வானப்பலாக்காயும
தட்டிப்புனுகுகளும சவ்வாதுபரிமளங்கள்
பூவாலலங்கரித்துப் புலந்திரனார்புரவிதன்னை

வகைவகையாய்ப்பூச்சரங்கள் வைத்துப்புரவியிலே
சோடித்தலங்கரித்துச் சுந்தரற்குவேண்டுமென்று
தேவேந்திரபகவான் சிரித்துஅலங்கரித்து
ஏற்குமோஇப்புரவி இந்திரற்குஏற்குமென்று
தட்டிப்புரவியைத் தாமந்தவாழ்மார்பன்
குதிரைக்குபதேசங் கூறினார்காதிலேதான்
ஆகாயம்போகாதே அவலோகம்போகாதே
செம்பொன்மணிமுடியான் தேவியுடகோவிலுக்கு
ஒருசாமப்பொழுதிலே உத்தமனைக்கொண்டுசென்று
இருசாமமங்கே இருக்குமட்டுந்தானிருந்து
விடியஒருசாமத்திலே விடுபட்டுவந்துவிடு
அப்போதுவான்புரவி அவருடனேசொல்லுகுது
அருளருளும்ஐயாவே அப்படியேயாகுமென்று
வந்ததுகாணப்புரவி மதுரைவளநாட்டிற்கு
செம்பொன்கடிவாளம் தென்னாடிகைபிடித்து
மலர்க்காவிநான்கடந்து வைகைவளநாடியரும்

புலந்திரனை அலங்கரித்தது.

மாலைமுடியானே மஞ்சநீராடுமென்றாள்
மஞ்சநீர்ச்சாலையிலே மன்னவனும்போய்ப்புகுந்து
ஆடைகளைந்துவைத்து ஆபரணந்தான்கழற்றி
கத்தியுடனே அங்கி காவலனுந்தான்கழற்றி
சேரவேதான்கழற்றிச் செம்பொன்மணிமுடியான்
கொற்றவர்கள்கோமானுங் குளித்துக்கரையேறினான்
துப்பட்டிகொண்டு துவட்டினார்சுந்தரிமார்
ஈரமுலரவே யிணைகவரிவீசினார்கள்
ஆடையெடுத்துடுத்தி ஆபரணந்தான்பூட்டி
கச்சைவரிந்துகட்டிக் கச்சைமிகச்சொருகி
தென்னமுடிவேந்தன் திருநீறுக்காப்பணிந்து
சிந்தித்துநின்று சிவனையடிபணிந்து
செங்கழுநீர்பூவெடுத்துச் சிவனாரைத்தோத்தரித்து
கஸ்தூரிபொட்டுமிட்டு கண்டபெண்கள்சேர்ந்திடவே
மாணிக்கமண்டபத்தில் மன்னவனுஞ்சென்றானே
சிங்காதனத்திலே திரளவீரனவீற்றிருந்தான்
அரசாளும்நாயகியாள் அல்லியருங்கூறுகிறாள்
மைந்தர்புலந்திரனை மயிலனையாள்தான்பார்த்து
ஆனந்தவாழ்மார்பா அடிசலுக்குவாருமென்றாள்
சிங்காதனத்தைவிட்டுத் தாழக்குதித்திறங்கி
அமுதுண்ணுமண்டபத்தே ஆணழகன்சென்றானும்
அரசாளும்நாயகியாள் அல்லியருங்கூறலுற்றாள்
இருமிருமென்று இணைகடக்கையமர்த்தி

பொற்றடுக்குமேலே புலந்திரனும்வீற்றிருந்தான்
சிங்கமுகக்காலி செம்பொற்றளிகைவைத்தாள்
கைக்குநீர்வார்த்தாள் காவலனார்வீரியற்கு
நீர்சுழற்றியூற்றி நிகர்வளைமுன்கையாளும்
போனகம்வாங்கிப் புரிகுழலாள்தான்படைத்தாள்
பத்துவகைக்கறியும் பதினெட்டுபச்சடியும்
நீர்கடகக்கையால் நீரெடுத்துதான்கொடுத்தாள்
அறிவுடையநாயகற்கு ஆகாரந்தான்கொடுத்தாள்
அந்தவடிசல் அமுதுண்ணபிற்பாடு
அத்தளிகைமாற்றி பொற்றளிகைமுன்னேவைத்து
போனகம்வாங்கிப் புரிகுழலாள்தான்படைத்து
காச்சியபாலும் காட்டுமாங்கனிப்பழமும்
திருத்தியமுதுஞ் செலுத்தியநெய்பாலும்
கூட்டிப்படைத்தார்கள் கொம்பனைமார்தாதியர்கள்
அந்தஅடிசல் அமுதுண்டபிற்பாடு
கைகழுவநீர்வார்த்தாள் காரிழைமார்தாதியர்கள்
உத்தமியுமைந்தனுமாய் ஒக்கவுலாக்கொடுத்து
சித்திரஞ்சேர்மண்டபத்தில் தேன்மொழியாள்வீற்றிருந்தாள்
முடிபூவுஞ்சந்தனமும் மெல்லியருந்தானைவாங்கி
மைந்தருக்குத்தான்கொடுத்து மாதுநல்லாளப்பொழுது
தானுமினியமிர்தம் தையலருந்தினாளே
மாதாவிளைப்பார வான்கவரிவாங்கினார்கள்
தாமக்கருங்குழலாள் தாதிமுகநோக்கி
கொண்டுவந்துபூட்டுமென்றாள் குமாரன்புலந்திரற்கு
மச்சினியாள்மெச்ச வகைவகையாய்ப்பூஷணங்கள்
ஆபரணப்பேழை அலைகொதிதான்திறந்து
ஆனந்தமார்பனுக்கு ஆபரணந்தானெடுத்து
தெரிந்தபணிகளைச் செம்பொற்றளிகைவைத்து
கொண்டுவந்துமுன்னேவைத்தாள் கொம்பேரிடையாளும்
தென்னம்பெருமான் திருமேனிதீண்டவல்லான்
ஆனந்தமார்பனுக்கு அருகாகவந்துநின்று
முத்தினுருமாலை முகம்நிறையத்தானறித்து
வேதிச்சுநற்புனுகால் மின்னைமுகந்துடைந்து
கட்டழகர்நெற்றியிலே கஸ்தூரிப்பொட்டுமிட்டு
தேனல்லோதாரன் திருநீற்றுக்காப்புமிட்டு
ஈரெட்டுப்பூண்கடுக்கன் யிட்டுவளைகாதில்
ஆனந்தமுடிசூட்டி அழகாகப்பூட்டினார்
ஒருமுத்தேமுத்து உலகமெல்லாம்பெற்றதுபோல்
பாரியமுத்து பரிமுத்துதாழ்வடமும்
நவரத்தினப்பதக்கம் நாகரீகத்தாழ்வடமும்

ஆர்ப்பதக்கமாலையும் அழகுசரப்பளியும்
பார்த்தமணித்திரமும் பருதத்துத்தாழ்வடமும்
முன்கைமுதாரிகளும் முழுகடகமோதிரமும்
சந்திரகடகங்கள் தாயித்திசோதிமின்ன
அஸ்தகடகமும் அழகானமோதிரமும்
முத்திரைமோதிரமும் முன்கையிற்கடகமும்
செம்பொன்பவுத்திரமும் சேர்ந்தகணையாழிகளும்
பொன்னினரைஞாணும் பூட்டினாள்பொற்சலங்கை
கச்சையிறுகணைந்து கத்திமிகச்சொருகி
பாங்குகள் தான்சொருகி பாலரிடதாளில்
பூஞ்சிலம்புந்தண்டையும் பொன்மெட்டின் தானணிந்து
ஆபரணமெல்லாம் அடங்கலுந்தான்பூட்டி
இழையாயிரம்பொன்பெற்ற இந்திரவர்ணப்பட்டு
ஆனந்தமார்பனுக்கு ஆடைவரிந்துகட்டி
நிரஞ்சனமாகவே நின்றதொருமேனியெல்லாம்
இந்தப்படியாக இயலாயலங்கரித்து
அரசாளும்நாயகியாள் அல்லியருங்கூறலுற்றாள்
மைந்தர்புலந்திரரைப் பார்த்துவளநாடி
கண்திருஷ்டிவாராமல் காப்பிடுங்கள்தாதியென்றாள்
சந்தனமுஞ்சாந்தும் சவ்வாதுமிகவணிந்து
ஆலாத்திகாட்டுமென்றாள் ஆனந்தமார்பனுக்கு
முத்தாலேஆலாத்தி முப்பதுநூறாயிரம்பேர்

புலந்திரனுக்குத் தாயார் புத்திசொல்வது.

ஆகாயவான்புரவி அலைதாராநீரேறி
ஒருசாமப்பொழுதிலே உத்தமரேநீர்போய்
மந்திரவாள்தாரேன் மன்னர்பெருமாளே
வாள்வைத்தால்கதவு திறக்குங்காண்மன்னவனே
தானேதிறக்குங்காண் தனஞ்செயனேபொற்கதவு
போனாற்போல்நீரும் பொற்கொடியையெழுப்பாதே
ஆராய்ந்துபார்த்து ஆணழகாமன்னவனே
கையாலேதட்டிக் காரிழையையெழுப்பாமல்
வாளாலேதட்டி மங்கையரைநீயெழுப்பும்
சற்றேதான்தட்டலுமே தையலெழுந்திருப்பாள்
அவள்வாழும்பெருமைகளும் மாமன்மார்சேவகமும்
உத்தமர்கள்பஞ்சவரை ஓட்டியரசாளுவதும்
கட்டழகர்பஞ்சவரைக் காட்டிலோட்டியாளுவதும்
கர்னனிடவதிகாரம் காவல்போலவீரியமும்
ஏசாதுமேசி எடுத்துரைப்பாளாமாகில்
உத்தரங்கள்சொல்லாதே ஒத்துநின்றுபேசாதே
கொற்றவனேயுந்தனுக்குக் கோபங்கள்வாராமல்

அத்தனைக்குமுட்கொண்டு அலைகாரா நீர்கேட்டு
எத்தனைசொன்னாலும் எனக்காக நீர்பொறுத்து
அன்னமேஇக்கோவில் ஆர்கோவில்சொல்லுமென்று
ஆரணங்கேயும்முடைய ஆச்சிபேர்சொல்லுமென்று
மங்கையரேயும்முடைய மாமன்பேர்சொல்லுமென்று
அன்னமேயும்முடைய ஐயன்பேர்சொல்லுமென்று
மங்கைநல்லாள் தன்பேரும் மணவாளன் தன்பேரும்
ஆரமுலையாள் அடையாளஞ்சொல்லுமென்று
நிருப அடையாளம் நேரிழைக்குத்தான்கொடுக்க
தானேயடையாளம் தையலற்குக்கொடுத்து

அடையாளங் கொடுத்தது.

அல்லிக்கொடியும் அழுத்தியசீராவும்
சீராவும்கச்சும் திருமுடியுந்தான்கொடுத்தாள்
உன்-மாமியாரிட்டதொரு பவுத்திரந்தான்கொடுத்தாள்
வாங்கிமுடிந்துகொண்டார் மன்னர்பெருமானும்
மாதா அடையாளம் வைத்தான்மடிதனிலே
அரசாளும்நாயகியாள் அல்லியருங்கூறுகிருள்
அரும்பாவிவாசலிலே அமுர்தம்புசிக்காதே
கஸ்தூரிபூசாதே கபடனதுவாசலிலே
தண்ணீர்குடியாதே தையலதுவாசலிலே
கொப்பளித்துநீரைக் குடியாதேவாருமென்ருள்
இருந்துஒருசாமம் ஏந்திழையைநீகூடி
வரவொருசாமத்திலே வந்துவிடுமென்ருளே
அருளருளுமென்தாயே அப்படியேயாகுதென்ருர்
போகவிடைதாருமென்று புலந்திரனுந்தெண்டனிட்டான்
வந்துபணிந்ததொரு மகனுரைவாழ்த்தலுற்ருள்
நீரே அரசாள்வீர் நீடூழிகாலமெல்லாம்
என்னைப்பெறுவீர் எதிர்த்தார்முடிபெறுவீர்
பிள்ளைபெறுவீர் பெருமாளைப்போல்வாழ்வீர்
வாழ்ந்திடுவீரென்று மனங்குளிரவாழ்த்தினுள்
தேனல்லோதாரனுக்குத் திருநீறுதான்கொடுத்தாள்
வாய்ந்தவிலைச்சுருளும் வர்னக்களிப்பாக்கும்
காவலன்வீரியற்குக் கைநிறைய அள்ளியிட்டாள்

புரவிமகிமை சொல்வது.

ஆதீனம்விட்டிறங்கி அன்னநடையாளும்
மாதாவுமுன்னடக்க மைந்தரும்பின்னடக்க
சிங்காரத்தோட்டத்தில் சென்ருள்திருவனையும்
வான்புரவிதான்பிடித்து வைகைவளநாடியரும்

செம்பொன்னாற்கடிவாளம் தென்னடிகைபிடித்து
மைந்தர்புலந்திரரை வளநாடிதான்பார்த்து
பூமியிலேவாழுகிற புரவியைப்போலெண்ணாதே
வையாளிபுரவியோடு வருவவதல்லாங்கண்டீரே
கடிவாளங்கைவிடாதே கட்டழகாமன்னவனே
மாலைமுடியானே வழிபிடித்துவாருமென்றாள்
மச்சினியைக்கண்டபின்பு வாராமலிருக்காதே
வேந்தர்பெருமானே விடியவிங்கேவாருமென்றாள்
அருளருளுமென்னச்சி அப்படியேயாகுதென்றார்

புலந்திரன் புரவிமேல் நடப்பது.

மறுபடியுந்தெண்டனிட்டான் மாதாவின்சீர்பாதம்
புரவியைச்சுற்றிவந்து போதசலாம்வாங்கினனே
அங்குபடிகால்வைத்து ஆனந்தவாழ்மார்பன்
உத்தமர்கள்புத்திரனும் உதாரிச்சுயேறினனே
ஏறினதுகண்டாளே இந்திரரைக்காணமல்
பிள்ளையிவள்காணளே பெருமாள்புலந்திரரை
ஆகாயமாகவே அப்புறவிதான்பார்க்க
அந்தரமார்கத்தில் அப்புறவியெழும்பினதே

அல்லியம்மாள் புலம்பல்.

மைந்தரைப்போகவிட்டு வாடிமனந்தளர்ந்தாள்
போகமாட்டெனென்றனே வலியநான்போய்விட்டேன்
கர்னனறிந்தானே காவலர்கள்கண்டாரோ
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்கண்டாரோ
மாலைமுடியானை வதைசெய்தாராமாயின்
மாளும்படியொழிய மண்ணிலிருப்பதில்லை
பஞ்சவர்கென்னசொல்வேன் பாஞ்சாலிக்கென்னசொல்வேன்
வெற்றிமதயானை வீமருக்கென்னசொல்வேன்
அங்கவர்க்கென்னசொல்வே னருச்சுனர்க்கென்னசொல்வேன்
சோலைமலருடைய சொக்கரல்லோசெய்ததெல்லாம்
அவரிட்டகலகமல்லோ யாதொன்றுநானறியேன்

அல்லிசொக்கநாதர் கோவிலிக்குவந்தது.

தண்டிகைதானிருக்கத் தையலருந்தானிருக்க
தானுவ:ிநடந்து தையலரும்மந்நேரம்
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டாள்
மைந்தர்புலந்திரர்க்கு வாட்டங்களில்லாமல்
மன்னன்புலந்திரனர் வந்தாரேயாமாகில்
ஆலாத்திப்பெண்கள் அதிசையமாய்நான்தருவேன்

மாடைவராகனு மாணிக்கரத்தினமும்
செம்பொன்னின்முத்துகளும் சுவாமியேநானளிப்பேன்
தண்டிவந்தபெண்ணையெல்லாம் சங்கரனேநான்தருவேன்
கொண்டுவந்துநான்சொரிவேன் கோபுரவாசலிலே
மைந்தர்புலந்திரர்க்கு வல்வினையில்லையென்று
திருமுடியில்புஷ்பமது சேரவேதள்ளுமென்றாள்

சொக்கர்மீனாட்சியை நோக்கிச்சொல்வது

சோலைமலருடைய சொக்கருந்தான்பார்த்து
அங்கயர்க்கண்ணாகிய அரனாருந்தான்பார்த்து
கண்டாயேமாதேநீ கயற்கண்ணாள்நின்றநிலை
எத்தனையோநேரமட்டும் இவள்கெஞ்சிநின்றாலும்
பொற்கொடிமாதருக்குப் புஷ்பங்கள்கொடுப்பதில்லை
அங்கயர்க்கண்ணம்மா ளவர்முகத்தைத்தான்பார்த்து
எல்லோருக்குங்கண்கள் இரண்டெனபார்ராச்சியத்தில்
தேங்காய்க்குகண்மூன்று தேசத்திலென்பார்கள்
ஓடமலர்கண்ணாட்கு ஒருகண்ணேயுள்ளதுகாண்
பிறந்ததுகன்னியானால் பிள்ளை துணைவேணும்
அதனால்வருந்துகிறா ளாரணங்கிந்நேரம்
பொற்கொடியாளமாதருக்குப் புஷ்பமதுகொடுவென்ன
சங்கருமப்போது சற்றேநகைநகைத்து
நங்கைபரிதாபங் தையலரேகண்டாயே
வெட்டுவேன்குத்துவேன் விலங்கிடுவேனென்றுசொல்லி
ஆக்கினைகள்செய்து அவனையிவள்போகவிட்டாள்
எத்தனைநேரமட்டும் இவள்கெஞ்சிநின்றாலும்
பொய்கைவளநாட்டிற்குப் புஷ்பங்கள்கொடுப்பதில்லை

மீனாட்சிசொக்கருக்குச் சொல்வது.

அங்கயர்கண்ணம்மை ஆதினத்தைவிட்டிறங்கி
மாதேவர்பாதமது வணங்கியேதெண்டனிட்டு
அங்கயர்கண்ணம்மை அருகில்வந்தென்னசொல்வாள்
ஆயிரவர்களும் அணிதிரளாம்பாண்டியர்கள்
மாளுவோமென்றுசொல்லி மலைமேலேதவமிருந்தார்
மாளாதேயென்று மலரிலவதரித்தாள்
வீறுகச்செங்கோல் செல்விசெலுத்திநின்றாள்
மன்னன்விஜயன் மடலூர்ந்தமாதேவி
காளைவிஜயனார் கட்டழகன்தேவியிவள்
சிறுவிரல்பாதரெண்டும் சிலம்புக்கால்கொப்பளிக்க
செண்பப்பூமேனடிகள் திருவடிக்குத்தானேக
எத்தனை நேரமட்டாய் இளங்கொடியாள்கெஞ்சிநிற்க

இப்படிக்குநீரிருக்க இதுஉமக்குத்தருமமல்ல
பொற்கொடிமாதுக்கும் புஷ்பமதுகொடுத்தால்
சந்தோஷமாயிடுவாள் தருமமுடியழகி
சங்கருமப்போது தயவாய்மனமிரங்கி
சிவனுருமப்போது தேவிமுகம்நோக்கி
ஏலங்குழலாளும் இருகையுந்தானிறைய
வாங்கிமடியில்வைத்தாள் மதுரைவளநாடியரும்

சொக்கர் பிள்ளைக்குத் துணைபோனது.

சொக்கருங்கூடத் துணைபோகவேண்டுமென்ருள்
சிவனுருமப்போது தேவிமுகம்நோக்கி
ஆரமுலையாளே ஆளடிமையானுமே
அது-சந்தேகமென்று சங்கரியுந்தான்சிரித்தாள்
சொக்கருங்கூடத் துணையாகத்தாஞ்போனர்
தீர்த்தமும்திருநீரும் திருமாலைச்சந்தனமும்
கொண்டெதிர்தந்தார்கள் கொம்பேரிடையாட்கு
தீர்த்தம்தெளித்தார்கள் திருநீற்றுக்காப்பணிந்தார்

அல்லிகொலுவுக்கு வந்தது.

சந்நிதியைவிட்டுத் தையலருந்தானமர்ந்தாள்
படித்துறையுந்தான்கடந்து பாண்டிவளநாட்டாளும்
கோபுரவாசல் கொம்பனையுந்தான்கடந்து
தென்னந்தெருவும் தேரோடும்வீதிவிட்டு
மன்னர்தெருவுகளும் மந்திரிகள்வீதிவிட்டு
வாசற்படிகடந்து மண்டபஞ்சென்றேறினாள்
தாமக்கருங்குழலாள் தாதியெதிரேவந்து
காலுக்குநீர்கொண்டு காரிழைமாரோடிவந்தார்
கோவிலுக்குப்போய்வந்தேன கொம்பனையேதாதிகளே
இதுகளொன்றும்நான்வேண்டேன் ஏலங்குழலாளே
பாவையழகியரும் பள்ளியறைபோய்ப்புகுந்தாள்
தழுவணையில்கைகொடுத்து தையலரும்வீற்றிருந்தாள்
அன்றுமுறையுடையார் ஆயிரம்பேரோடிவர
அதத்னைப்பெண்களையும் அனுப்பிவிடைகொடுத்து
மெல்லியர்களெல்லோரும் விடைபெற்றுச்சென்றபின்பு
மங்கையருமபள்ளிகொண்டாள் மாணிக்கமெத்தையிலே
விடிந்துவருவாரோ வேந்தனையுங்காண்பேனே
வேல்பொருந்துங்கண்ணாள் விசனமாய்ப்பள்ளிகொண்டாள்

புலந்திரன் புரவிமேற் போனது.

அந்நேரமிந்திரனர் ஆகாயமார்க்கத்திலே
ஆகாயமாய்ப்பறந்து ஆணழகன்வான்புரவி

மதுராபுரிகடந்து வைகைவளநாடுவிட்டு
வனமாய்வனங்கடந்து மலைக்குகைகள்தான்கடந்து
கூடல்வளநாடு குலவீரன்றான்கடந்து

தருமாபுரங் காண்கிறது.

தாமரைசூழ் அல்லிமகன் தருமாபுரங்கிட்டினனே
அத்திபுரத்தை அடுத்தானலைதாரன்
எத்திசையுந்தோப்பும் எதிர்மலர்க்காவுகளும்
கொண்டாடிபூர்க்குமந்த குங்குமவெண்டாடை
நெடுநீலங்கொங்குவளை நிர்வாணகஸ்தூரி
பூமரந்தளத்தனையும் பூர்த்துச்சொரிந்ததுவே
மந்தாரைபுன்னைகளும் மருவோடிருவாட்சி
மல்லிகைமுல்லிகை வாய்ந்ததொருசெண்பகமும்
வாழுகின்றபுன்னைமரம் மாதும்பூவாசனையும்
திருவழகும்சோலையும் தெய்வவுலகம்போல்
கண்டான்புலந்திரனும் கண்கள்ரண்டுங்கொள்ளாதே
இத்தனைநாட்டையும் இளவரையன்தான்பார்த்து
இப்பெரியநாட்டைவிட்டு எங்கொளித்தாரையன்மார்
எந்தவனங்காடுறைந்தார் என்னுடையஐயன்மார
மாயத்தால்சூதாடி மண்ணிழந்தார்பாண்டவர்கள்
கட்டழகனிந்திரனும் கண்களால்முத்துதிர்த்தான்
பூமரங்களத்தனையும் புலந்திரனைத்தான்பார்த்து
பஞ்சவர்கோமானும் பார்த்தன்திருமகனும்
வந்தாரேயிப்பொழுது மச்சினியார்கோவிலுக்கு
என்னத்தைநாம்கொடுத்து இந்திரரைக்காண்கிறது
பூவாலேபச்சைவடம் புலந்திரர்க்காகுமென்று
கொண்டுவந்துபோத்தினர் கொற்றவர்கள்புலந்திரர்க்கு
பூமரத்தைப்பார்த்துப் புலந்திரனுங்கூறுகிறான்
காவலர்கள்பஞ்சவர்கள் காடுறைந்துபோயிருக்க
வண்டார்குழலாளும் மயிர்விரித்துப்போயிருக்க
ஆர்முடிக்கப்பூத்தீர்கள் அழகியபூமரமே
தாயாதிதான்முடிக்கச் சிறப்பாகப்பூத்திரோ
மாற்றானமுடிக்கவோ வந்துமலர்சொரிந்தீர்
பூமரங்கள்கூறும் புலந்திரனைத்தான்பார்த்து
ஐயாநீர்கேளும் அடியேனவிண்ணப்பத்தை
மாலைமுடிப்பாண்டவர்கள் வனவாசம்போனவன்றே
காவலர்கள்பாண்டவர் காடுறைந்தநாள்முதலாய்
தக்கப்புகழுடைய தருமர்வனம்போனவன்றே
வண்டார்குழலாள்மயிர்விரித்துப்போனவன்றே
நல்லமழையுமில்லை நாட்டிலவிளைவுமில்லை

செந்நெல்விளைவுமில்லை தேசஞ்செழிப்புமில்லை
பூவுகள்மலராந்து பூமரங்கள்பூவாது
ஆவுங்கறவாது அரும்பாவிபட்டணத்தில்
வெள்ளியுந்தெற்கடந்து வேந்தனும்போய்மறந்து
கன்னியுங்கால்மறுத்துக் கடலுந்திசைமாறி
பாழாயிருக்குதையா பட்டணங்களத்தனையும்
மன்னர்பெருமாளே பலராமல்நாமிருந்தோம்
மாலைமுடியானேநீ வருகிறதுநாமறிந்து
இப்போதிலைதுளிர்த்து இந்நேரம்பூபூர்த்தோம்
வருகிறநாளறிந்து மலர்சொரிந்தோம்மன்னவரே
வருவதற்குமுன்னமே மன்மதரேபூர்ப்போமோ
போரஞ்சாவீரன் புலந்திரனுங்கூறுகிறான்
ஒட்டினார்பன்னிரண்டு உத்தமர்கள்பஞ்சவரை
மாலைமுடிப்பாண்டவர் வருநாளுந்தானாச்சு
ஆளுவார்பாண்டவர் மாளுவார்நூற்றொருவர்
நம்முற்றநாடுகளும் நமக்குத்தான்ராச்சியமும்
ஏதுக்குமஞ்சாதே யிருமென்றார்மன்னவரும்
அப்போதுபூமரங்கள் அழகுமெத்தைகள்தான்போலே
புஷ்பமெத்தைசோடித்துப் புலந்திரற்குதான்த்கொடுக்க

தருமாபுறத்தில் அதிசயங்காண்கிறது.

அப்பால்திரும்பி ஆணழகர்வருகையிலே
அக்காட்டில்வீற்றிருக்கும் அன்னமுந்தாராவும்
மானுங்கலையுமே மயிலுங்குயிலினமும்
சித்தானைக்கன்றுகளும் சிறுத்தைபுலிகுட்டிகளும்
காட்டானைகன்றுகளும் கரடிபுலிசிங்கங்களும்
பாடிப்பறந்துவரும் பஞ்சவர்ணக்கிளிகளும்
ஐந்துதலைநாகமது ஐவர்திருமகற்கு
மாணிக்கமின்னவே மணிவிலக்காய்கொண்டுவந்து
முடித்துமுடிமன்னன் முன்கையிலேறுதுகாண்
மகாமிருகமத்தனையும் வந்தெதிரேகண்டது
வந்தெதிர்கண்டதை மன்னவனுந்தான்பார்த்து
போராஞ்சாவீரன் புலந்திரனுங்கூறுகிறான்
என்னமாயிருந்தீர்கள் யித்தனைநாளிவ்விடத்தில்
பாண்டவர்கள்போனபின்பு பாலமிர்தம்போதாதோ
தாயாதிவாசலிலே சத்துருவின்வாசலிலே
பகையாளிவாசலிலே பாலமிர்தமுண்டீர்களோ
என்றுமிவருரைக்க யியலானமிருகமெல்லாம்
மகாமிருங்கள்கூறும் மன்னவன்முகம்நோக்கி
மாலைமுடிப்பாண்டவர்கள் வனவாசம்போன அன்றே

வண்டார்குழலாள் மயிர்வுரித்தநாள்முதலாய்
நாங்கள்-ஒடுங்கியிருப்போம் உத்தமரேஎல்லோரும்
கொங்குமலையிலே குடகுமலைகாட்டிலேயும்
அங்கங்கேசேர அமர்ந்திருந்தாரெல்லோரும்
மாலைமுடியாரேநீர் வருகிறசெய்திகண்டு
காணவிருப்பமுடன் காவலரேவந்தோங்காண்
போரஞ்சாவீரன் புலந்திரனுக்கூறலுற்றான்
அவன்-ஒட்டியபன்னிரண்டில் ஒன்பதுந்தானச்சு
மூன்றுவருஷமென்ன முடிமன்னராளுவதும்
அப்பாலேவீமன் அவர்கள்திருமுடியை
தெண்டுக்கிரைகொடுப்பார் திரியோதிரன்படையை
நம்மதேநாடுகளும் நமக்குத்தான்ராச்சியமும்
அஞ்சாதிருங்களென்று அப்புறந்தானடந்தார்

பாண்டவர்களரண்மனை காண்கின்றது.

ஐவராசாண்ட அரண்மனையைக்கிட்டினனே
கொற்றவர்கள்தங்களது கொலுக்கூடங்காட்டினனே
பாண்டவர்கள்வீற்றிருக்கும் பாரமணிமண்டபத்தே
பொற்றூணும்நற்றூணும் பெரிகையுத்தாரமும்
உத்திரமுஞ்சித்திரமும் ஒக்கநிழல்காட்ட
இட்டிருக்கும்மாதினமும் ஏறுமணிசிங்காதனமும்
போட்டிருக்குமந்த பொன்னாலே ஆதினமும்
தருமராது ஆதினமும் சகலகலை ஆதினமும்
வீமராது ஆதினமும் விஜயனாராதினமும்
நகுலராது ஆதினமும் சகாதேவனாதினமும்
மன்னவர்களாதினத்தில் மாற்றானைக்கண்டானே
தருமராது ஆதினத்தில் சண்டாளனுள்கிறானே
பாண்டவர்கள்தன்னுடனே பகுந்தரசாளாமல்
பாதியரசுமவர் பங்கிட்டு ஆளாமல்
எதனாலேகாடுறைந்தார் என்னுடைய ஐயன்மார்
தருமத்தையெண்ணியவர் தரணியிழந்தார்கள்
புண்ணியத்தையெண்ணியவர் பூமியிழந்தார்கள்
அரண்மனையைப்பார்த்து அழகியகண்முத்துதிர்ந்தான்

துரோபதை யரண்மனையைக்காண்கிறது.

தோராவடிவழகி துரோபதையாள்வாசலிலே
தையலதுவாசலிலே தங்கப்பொன்னார்சுமைத்து
நாணற்கொடி முறுக்கி நற்கொடியாள்முத்தழகி
பானுஞ்சுடரும் பசும்பொன்னாலேயடித்தது
மாணிக்கத்தாலும் வைடூரியத்தாலும்
ஆணிப்பொன்னாலே அழுத்தியசீரவ்வாசல்

ஆச்சிதலைவாசல்கண்டு ஆணழகன்வயிறெரிந்து
மாளிகையும்மிங்கிருக்க மண்டபமுமிங்கிருக்க
ஆண்டமனைகளும் அரண்மனையுமிங்கிருக்க
எழுநூறுதாதியர்கள் இணைகவரிதான்வீச
மூந்நூறுதாதியர்கள் முறைசெய்துவந்துநிற்க
ஏறியிருக்குமந்த இட்டசிங்காதனமும்
ஆச்சிமாரெல்லோரும் அடியாளையாளவந்தார்
பருங்கல்லுறுத்தவே பருமணல்கள்தானுதிர
காடுதலையிழுக்கக் கன்னிருபில்முன்னிழுக்க
கானலினும்வெய்யலினுங் கதரியவர்தானுதிர
எக்காட்டுக்குள்ளே யிருக்கிறளென்தாயார்
ஆச்சியர்தலைவாசல்கண்டு அழகியமுத்துதிர்த்தான்
இந்திரருமப்போது ஏங்கியழும்போது
கொண்டுபறந்ததப்போ குலவீரநற்புரவி

புலந்திரன் அத்திபுரங் காண்கிறது.

ஆகாயமார்க்கத்திலே அப்புறவிதான்பறக்க
அத்திபுறங்கண்டாரே ஐவரவர்திருமகனர்
அந்தவளநாட்டை அடுத்தது அப்புரவி
அம்பலமோவென்றுளோ ஐந்நூறுகாதவழி
இடம்பெரியவாசலது எழுநூறுகாதவழி
தூணுக்குத்தூணுமங்கே தொண்ணூறுகாதவழி
ஆயிரங்காதவழி அலகமுள்ள அம்பலத்தில்
நானூற்றுக்காதவழி கலம்பெரிய அம்பலத்தில்
மூந்நூற்றுக்காதவழி மூத்தனிந்தவம்பலத்தில்
பொற்றூணும்கற்றூணும் பேரிகைவுத்திரமும்
குளிர்ந்தசந்தனத்தூணுங் குங்குமநற்றூணும்
தூணுக்குத்தூண் துணைமலையாய்ச்சேர்த்து
மெத்தையலங்கரித்து மேற்சுட்டிதான்கட்டி
சுத்தியலங்கரித்துத் தோரணங்கள்தான்கட்டி
கண்ணாடிசல்லிகட்டிக் காவலன்தன்னம்பலத்தில்
சங்கிழைத்தமண்டபமுந் தங்கமுத்துமாலைகளும்
எங்கெங்குஞ்சோதியிட எழில்முத்துமாலைகளும்
வந்துநிழல்காட்டும் மாணிக்கமாலைகளும்
வாடாத்தாமரையும் வந்துநிழல்காட்ட
முத்துமரகதமும் முழுப்பன்னீர்ச்சீலைகளும்
தங்கத்தாற்பொம்மைகளுஞ் செங்கழுநீர்மாலைகளும்
செம்பொன்னாற்சிலைகளுமே செம்பவளத்தூணுகளும்
எங்கெங்குஞ்சோதிவிட இராஜாவினம்பலத்தில்
சித்திரஞ்சேர்மண்டபத்தில் செம்பவளமாலைகளும்
வந்துபரிமளங்கள் வாசனைகள்தான்வீச

வாழைகமுகளும் வர்னபலாச்சோலைகளும்
சேரவேநாட்டித் திகழ்பெரியஅம்பலத்தில்
நின்றவிடந்தோறும் நிலைதோறுஞ்சப்ரமஞ்சம்
பார்த்தவிடந்தோறும் பந்தங்கள்சேர்விளக்கும்
காடைவிளக்குகளுங் கைவிளக்கும்தேர்விளக்கும்
ஏணிவிளக்குகளும் எண்ணுதேர்விளக்கும்
தருமமுடியார்க்குச் சப்பரநல்விளக்கும்
பந்தங்கள்சேர்வையும் பகல்வத்தியிடிபாணம்
பூவர்ணமத்தாப்பும் பொறபாணந்தான்முழங்க
எத்திசையுந்தானிருக்க இட்டிருக்குமண்டபத்தில்
ஏறியிருக்குமந்த எழுமணிசிம்மாதனமும்
வந்திருக்குமன்னர் மகாசேனைதன்னுடனே
மூந்நூறுகோடி முடிமன்னரங்கிருக்க
ஈட்டிபிடிமன்னவர்கள் யிளவரையரங்கிருக்க
பாங்குபிடிக்கிறதோர் படைமன்னரங்கிருக்க
கத்திபிடிக்குமன்னர் காவலரங்கிருக்க
கோடிலட்சங்கோடி கொற்றவர்களங்கிருக்க
சட்டைகழட்டாத தாமந்தரங்கிருக்க
வேதப்பிராமணர் வேதியருமங்கிருக்க
பாஞ்சாலமகாராஜன் படைகளுமங்கிருக்க
காசிவளநாடாளும் கர்ணனதுசேனைகளும்
திரும்பசையத்தேன்சொரியும் சோழன்பரிசனமும்
ஏடல்லோதாரனவன் இடும்பன்பரிசனம்
ஆரங்கவேதமோதும் அகஸ்தியனார்தந்தருளும்
மதுரைபரிகலமும் வளநாடுசேனைகளும்
ஏழுலகுராஜாக்க ளெங்குநிறைந்திருந்தார்
தங்கைமணவாளன் தருதலையானங்கிருந்தான்
தருமமுடியழகன் சகலருமங்கிருந்தார்
மூந்நூறுதாதியர்கள் முகத்தின்கவரியிட
ஐந்நூறுதாதியர்கள் அஷ்டகவரிதான்வீச
பச்சோலைப்பெண்கள் பரிந்துகவிபாட
மேளவகைகளும் சிருதுபலமுழங்க
கவியோர்கவிபாடக் கட்டியங்களார்ப்பரிக்க
புலவரிருபுறமும் பூவருஷமாய்ச்சொரிய
கீதமேத்தும்ரம்பை கின்னரர்கள்வாசிக்க
வீணைகள்கின்னரிகள் வேணபடிவாசிக்க
கர்னன்திருமருகில் கட்டியபூச்சரங்கள்
திரியோதிரன்மருகில் சென்றுநிழலாட
திரியோதிரன்பந்தலில் சிறப்பானபூச்சரங்கள்
கர்ணன்திருமருங்கில் கண்டுசூழலமிட

அவர்குழலில்மாலை இவர்குழல்தானுட
இவர்குழலில்மாலை அவர்குழலில்தானுட
ஏறியிருந்தார்கள் இருவருமசிங்காதனத்தில்
காண்டான்புலந்திரனும் கண்கள்ரண்டுங்கொள்ளாதே
பாண்டவர்தன்னுடனே பகுந்து அரசாளாமல்
பாதிஅரசுஅவர் பங்கிட்டுஆளாமல்
எதினுலேகாடுறைந்தார் என்னுடையஐயன்மார்
இக்கோடிராஜமன்னர் இருக்கவிடமிருக்க
ஐவரந்தப்பாண்டவர்க்கு இருக்கவிடமில்லையென்று
அந்நேரங்காட்டில் அடித்தோட்டிவிட்டானே
நிற்குமோவிவ்வாழ்வு நிலைக்குமோவிவ்வரசு
இப்பெரியஅம்பலத்தில் இருந்தரசர்தங்கள்முன்னே
கட்டழகியென்தாயார் கால்நடையாய்வந்தாளோ
பார்த்துமிருந்தாரோ பாண்டவர்களைவருந்தான்
கண்டுமிருந்தாரோ காளையவரைவருந்தான்
தக்கபுகழுடைய தருமராது ஆயுதமும்
ஏழர்னைப்பலமுடைய இயல்வீமராயுதமும்
ஆணுலழகுமன்னன் அருச்சுனனுர்கையம்புவில்லும்
நாமக்கொடியுடைய நகுலராது ஆயுதமும்
சாஸ்திரக்கொடியுடைய சகாதேவர்கைவாளும்
எதுக்கென்றிருந்தது எங்களைவராயுதமும்
தன்றேவிக்கில்லாத தைரியங்களேதுக்கு
வெற்றிமதயானை வீமர்பொறுக்காரே
அர்ச்சுனராஜதுரை யார்சொல்லுங்கேளாரே
யார்சொல்லுங்கேளாரே ஐயன்மார்நால்வருந்தான்
தக்கபுகழுடைய தருமர்சொற்கேட்டாரோ
அன்றுநான்சற்றே வறிந்திருந்தேனுமாகில்
தக்கப்புகழுடைய தருமர்சொல்கேளேனே
நூலார்கடுந்திரளார் நூற்றொருவர்பூமுடியை
வெட்டிபபெலியிடுவேன் வீரமாகாளியற்கு
பட்டந்தரித்துப் பாருலகையாளவைப்பேன்
காவலர்களைவருடன் கைகட்டிச்சேவிப்பேன்
இதுபத்தினியாள்நின்று பரதவித்தஅம்பலமோ
பாவைமனமுருகப் பருந்தாட்டமாட்டிவைத்தான்
அம்பலத்தைப்பார்த்து ஆணழகன்வயிறெரிந்து
கட்டழகன்கோமானும் கண்ணிறையமுத்துதிர்த்தான்
இந்திரனுமங்கே ஏங்கியழும்போது

புலந்திரன் கலந்தாரிகோட்டையைக் காண்கிறது.

மேலாய்ப்பறந்தது வேந்தனதுதன்புரவி
காரியாமாது காந்தாரிகோட்டைகளாம்

கற்கோட்டைமுத்திரையுங் கர்ணரதுகாவல்களும்
ஆழமணல்பறித்து ஆகாயக்கோட்டைகட்டி
சுற்றிமதிலெழுப்பிச் சூரியனைக்காணாமல்
அஷ்டமதிலெழுப்பி ஆதித்தனைக்காணாமல்
வாசற்பதினெட்டும் வைத்திருக்குங்காவல்களும்
விழித்தகண்சிமிட்டாதே மெல்லியற்குக்காவல்களாம்
தாமக்குழலாட்குத் தலையாரிவோடிவந்து
நாகசுரமூத நற்கவரிகொம்பூத
கூடமுழங்கவே குலவீரர்தான்சூழ
கொக்கரித்துஎத்திசையுங் கூத்தாடிப்பாடிவர
ஆர்ப்பரித்துஓடிவந்தார் அன்னநடையாட்கு
கண்டான்புலந்திரனுங் கணகள்ரெண்டுங்கொள்ளாதே
இது-மாமன்மார்காவல்களோ வைத்தவரிசைகளோ
அம்மான்மார்காவல்களோ அத்தைவரிசைகளோ
என்றுநகைநகைத்து இந்திரரும்பார்த்திருந்தார்

சொக்கர் பிராமணர்போல்வந்து கர்ணனுக்குச் சொல்வது.

மாலைமுடியானும் வந்ததற்குமுன்பாக
சோலைமலருடைய சொக்கருமப்பொழுது
பஞ்சாங்கவேதியன்போல் பிராமணவடிவெடுத்து
மன்னர்கருணர்முன்பு மறைவர்போலேவந்து
ஆள்வருத்தாய்க்காணுது அதிகருணவீரியரே
பத்திரமென்றுசொல்லிப் பாமனும்போய்மறைந்தார்
சொல்லியேபோய்மறைந்தார் சொக்கருமப்பொழுது

கர்ணர்கலந்தாரிகோட்டைக்கு வருகிறது.

அங்கதேசநாடாளும் அதிகர்ணவீரியரும்
காரிழையாள்மாது கலந்தாரிகோட்டைவந்தார்
எண்ணவொண்ணாமகாசேனை எண்பத்தெண்ணாயிரம்பேர்
உருவினஆயுதத்தை உறையிலேபோடாமல்
விழித்தகண்சிமிட்டாமல் மெல்லியரைப்பார்த்திருந்தார்
தருமமுடியான் தலைவாசல்வந்துநின்று
அத்தண்டகாவலரை அதிகர்ணன்தான்பார்த்து
அந்திப்பொழுதிலே ஐயர்வந்துசொன்னாரே
காவலர்கள்வீரியரே கண்ணுண்டாய்பார்த்திருங்கள்
திட்டங்கள்சொல்லியே திரும்புமந்தவேளையிலே

கர்ணன் கலந்தாரிக்கு நடனசேர்வை வைத்தது.

சுந்தரப்பூமுடியை தூக்கம்வருகுதென்று
கேளிக்கைவேணுமென்றாள் கிளிமொழியாள்நாயகமும்
அப்படியேநல்லதென்று அட்சணமேசீர்கருணர்

நட்டுமுட்டுநாகசுரம் நலமுடனேயனுப்பிவைத்தார்
சதுர்தீர்ந்தகொலுவதனில் தானமர்ந்தாள்மாதுகன்னி
அப்போதுமாதருக்கு ஆடலும்பாடல்களும்
பதினெட்டுமேளம்பண்பாகத்தான்முழங்க
சிற்றிடையாள்மாதர்கள் சிலம்புகலகலென்ன
ஆடலும்கூற்றும் அரம்பையர்நாடகமும்
நாடகமும்கூற்றும் நடுநடுவேசிந்துகளும்
ஆடாதகூத்துகளும் ஆடினாராயிரம்பேர்
கேளிக்கைபார்த்திருந்தாள் கிளிபவளவாயாளும்

புலந்திரன் ஆகாயத்தில் அதிசயப்படுகிறது.

ஆடல்பாடல்சத்த மாகாயந்தான்கேட்க
பெண்கள்குரலோசை புலந்திரற்குக்கேள்விபட
கோட்டைக்குள்கேட்கிறது கொம்பனையாளிருப்பிடமோ
காதுற்றுக்கேட்டிருந்தார் கனத்தபுரவியின்மேல்

கலிந்தாரிக்குச்சொக்கர் சொற்பனஞ் சாதித்தது.

மாலைமுடியானும் வருவதற்குமுன்பாக
சோலைமலருடைய சொக்கருமேதுசொல்வார்
பஞ்சாங்கவேதியன்போல் பத்தினியாள்பக்கம்வந்து
மாதுநித்திரைசெய்கையில் மறையவர்போலேவந்து
சொற்பனஞ்சாதித்தார் துன்னுங்கருங்குழற்கு
மங்கையரேஉன்னுடைய மணவாளன்வந்தான்காண்
வந்தான்காணென்றுசொல்லி மாயமாய்ப்போய்மறைந்தார்
வாசற்படிதனிலேமன்னன் நிற்கக்கண்டாளே
எழுதிட்டுப்பார்த்ததுபோல் இந்திரனார்சீர்வடிவை
அவர்தாமரைநிறமும் யார்பவளச்செவ்வாயும்
மார்பில்பதக்கமும் வச்சிரமணித்தாழ்வடமும்
காதில்மணியழகுங் கட்டழகன்ஒப்பனையும்
உத்தமசள்புத்திறன்றன் வுறுமாலைகட்டழகும்
ஒருவருக்கொருவ ருகந்துமிகப்பேசினதும்
உத்தாரமுறவுகளும் வுறன்முறைக்கட்டளையும்
மதுரையடையாளம் மாதுகையில்கொடுத்ததுவும்
மாணிக்கமெத்தையிலே மன்னவருஞ்சென்றேறி
வெற்றிலைகள்தின்று விரும்பிவிளையாடினதும்
தக்கோலந்தின்று தழுவிவிளையாடினதும்
மாதுவிடையில்லாமல் மன்னனெழுந்திருந்து
போனார்போல்கண்டு பொற்கொடியுங்கண்விழித்தாள்
சொற்பனங்கள்கண்டதல்லால் சுந்தரரைக்கண்டதில்லை
என்-ஜென்மமொழியுமட்டுஞ் சிறையிருக்கநீதியுண்டோ
வண்ணச்சிறையிருக்க வைத்தீர்மகாதேவா

இச்சிறைகாக்கவென்னை யீஸ்வரரேவைத்திரோ
மைத்துனரைத்தானினைத்து மாதுமனந்தானுருகி
எக்காலஞ்செல்லுமோ இந்திரனைநான்காண
கண்டகனவையெல்லாங் காரிழைமார்தன்னுடனே
தோழிமார்தன்னுடனே சொன்னளேமெயாமாகில்
எந்நாளுமிந்நினைவோ என்பார்களேந்திழைமார்
தாமக்கருங்குழலாளுந் தன்மனதில்தானடக்கி
வேல்பொருந்துங்கண்ணாளும் விசாரத்துடன்படுத்தாள்

கலந்தாரி தாதிமார் காற்றுஒடுக்கந்தால்
வேறொருமண்டபம்போய்ப் படுத்தது.

ஆரணங்குதோழிமாராயிரம்பேரும்
அம்மானைப்பந்து மாடுங்கழலாடி
உடனகைபள்ளிகொண்டார் உண்டானதாதியர்கள்
பாதியிரவும் பதினைந்துநாழிகைமேல்
வாரியெழுந்திருந்து மங்கையர்களெல்லோரும்
ஒடுகரத்தினாலே உள்ளமெல்லாம்வியர்வைபட்டு
அந்தவிடம்விட்டு அப்பாலேமண்டபத்தில்
சித்திரஞ்சேர்மண்டபத்தில் தேன்மொழிமார்போனாரே
மண்டபக்கூடத்தில் மங்கையர்கள்போய்ப்படுக்க
ஒண்டித்தனியாக ஒளியிறந்தகண்ணாளும்
கண்டார்கருங்குழலும் கலந்தாரிநாயகமும்
வேல்பொருந்துங்கண்ணாள் விசனமாய்ப்பள்ளிகொண்டார்

புலந்திரன் கோட்டைக்குள் வருகின்றது.

அந்தசமயத்தில் அழகுபுலந்திரனும்
ஆகாயமார்க்கத்திலே ஐவர்மகன்புரவி
வேகமாய்ப்பறந்து வேந்தனது தன்புரவி
யாருமறியாமல் அங்கொருவர்காணாமல்
ஆறுசுற்றுங்கோட்டைக்குள்ளே அங்கொருவர்காணாமல்
தாதியர்களண்டையிலே தாவியிறங்கியது
எதிட்டுப்பார்த்திருந்தா ரிந்திரனுமப்போது
ஒற்றைபணிபூண்டு ஒருசிறமாய்ப்பட்டுடுத்தி
கூடப்பணிபூண்டு கொம்பனைமார்பட்டுடுத்தி
தேன்மொழிமாரெல்லாஞ் சொப்பனித்திருந்தார்
அதுகண்டுபுலந்திரனும் ஐயனையுமனதிலெண்ணி
ஆயிரம்பேரில் ஆரென்றுநானறிகண்டேன்
ஆரென்றுசற்றேநா னாராய்ந்துபார்ப்பேனே
பூவமெத்தைகருகில் பொற்கொடிமார்படுத்திருக்க
ஆரவணியாளே யாரென்றுநான்காண்பேன
எதுக்கேயிங்குவந்தேன் என்றுயார்கட்டனையால்.

மன்னூழிகாலமெல்லாம் வையகத்தையாண்டாலும்
பெண்புத்தியிப்போ பிடரியிலேயென்பார்கள்
ஏதுக்குநம்மையிங்கு இசைந்துவரவிட்டாளோ
நின்றுபுலந்திரரும் நெடுமூச்சைதானரிந்து
கட்டழகிநாயகியை கண்டதில்லையென்னாலும்
காணாமல்நாமும் கனமதுரைபோனக்கால்
வாளால்துணிப்பாளோ ஊமைந்தனென்றும்பாருளே
வேந்தர்பெருமாளும் விசாரமிடும்போது

புலந்திரனை புறவியிரக்கிவிட்டது

அப்போதுதன்புரவி அந்தவிடம்விட்டு
மாதுயிருக்குமந்த வாசற்படிமுன்னாலே
கொண்டுவந்துவிட்டது கொற்றவனார்தன்புரவி
தாழவிறக்கியே தருமர்திருமகனை
மேலேபறந்துநின்றது வேந்தனவன்புறவி

புலந்திரன் கதவைத் திறந்தது.

தாள்பூட்டிருந்ததொரு தையலதுபொற்கதவு
மந்திரவாள்தானெடுத்து வைத்தார்மணிக்கதவில்
தானாய்த்திறந்தது தையலதுபொற்கதவு
மெள்ளநுழைந்தாராம் மெல்லிபடுக்கையிலே

புலந்திரன் பெண்சாதியைக் கண்டது.

வாசற்படிதனிலே வந்துநின்றுமன்னவனும்
வாள்மேலேகையைவைத்து மன்னவரும்பார்த்தாராம்
ஏறிட்டுபார்த்தார் இந்திரரும்தேவியரை
வளர்ந்தெழுந்தமார்பும் மாதுயிருஸ்தனமும்
திரண்டெழுந்தமுலைமேல் செந்தாமரையழகும்
கண்புருவமிரண்டுங் கருங்குருவிவாலதுபோல்
மூக்குத்திருவழகும் மூன்றாம்பிறையதுபோல்
நாக்குத்திருவழகும் நான்காம்பிறையதுபோல்
பல்வரிசைஆணிமுத்தும் பார்க்கமுடியாது
தாடையிருபுரமும் தங்கப்பலகையைப்போல்
இருதுடையின்றன்னழகும் இளவாழைத்தண்டதுபோல்
அழகுதிருமார்பில் ஆபரணஞ்சோதிமின்ன
வாராமல்பூண்டதொரு மாணிக்கம்மின்றிலங்க
கண்டுபுலந்திரனும் கண்கள்ரண்டும்கொள்ளாமல்
இப்படிக்குமீறி எந்திழையும்வளர்ந்திருக்க
வைத்தேனவண்சிறையில் மாபாவியானேனே
பள்ளியறைசோடிப்பை பார்த்தான்பலகாலும்
வண்டார்குழலாளும் வாழாப்பெண்ணாயிருக்க
மாதுக்குமாமன்மார் வைத்தவரிசைகளோ

ஏரிட்டுத்தான்பார்த்தார் இந்திரருமேத்திசையும்
மெத்தையலங்கரித்து மேற்கட்டுதான்கட்டி
சுற்றியலங்கரித்து தோரணந்தான்கட்டி
கண்ணாடிசல்லிகட்டி கனக்கவலங்கரித்து
நாற்புறமும் நவரத்தினகால்நிறுத்தி
சங்கிழைத்தசப்புரமுஞ் சாதிலிங்கமாலைகளும்
சித்திரஞ்சேர்மண்டபமு முயரவலங்கரித்து
மல்லிகைமுல்லையுடன் வாய்த்தசிறுசெண்பகமும்
வெட்டிவேர்மருக்கொழுந்து இணைமல்லிபூச்சரமும்
தூணுக்குத்தூணுக்கு துணைமாலைதாக்கிவைத்து
வந்துபரிமளங்கள் வாசனைகள்தான்வீச
முத்தாலேதோரணங்கள் முறைமுறையாய்க்கட்டிருக்க
பந்தலிலேநல்ல பவளக்கால்தூணிருக்க
சித்திரஞ்சேர்பூம்பட்டை சிறுகமடித்திட்டு
சாருமணைபோட்டு தழுவணையுந்தான்போட்டு
ஊனுகப்பூச்சொரிந்து ஒடமலர்கண்ணாட்கு
காம்பரிந்தவைங்கலப்பூ காரிழைக்குத்தான்சொரிந்து
மெல்லியம்பூப்போட்டு மேலேயணைபோட்டு
சந்தனமுஞ்சாந்தும் தையலர்க்குத்தானுமிட்டு
புனுகுடனேகஸ்தூரி போதவேதான்வைத்து
மடித்தயிலைசுருளும் வண்ணப்பலாக்காயும்
செப்பொன்றளிகை திருவணைக்குவைத்திருக்க
தங்கப்பதக்கம்வைத்து சந்தனக்கிண்ணம்வைத்து
கெண்டியிலேதண்ணீரும் கிளிமொழிக்குவைத்திருக்கும்
கற்பூரமுத்து காராவிநெய்வார்த்து
குத்துவிளக்குக் கொழுந்துபடத்தானேற்றி
இருபுறமுங்குத்துவிளக் கெறியவேவந்திழைக்கு
பொம்மைபதுமைகளும் பொற்கொடியேசூழ்ந்திருக்க
அன்னநடையாட்கு அரும்பதுமைதானிருக்க
வெண்சாமரைவீச மெல்லியற்குபொம்மையெலாம்
கட்டழகிநாயகிக்கு கைவிளக்குகொண்டுநிற்க
ஆரமுலையாட்கு ஆலாத்திமொண்டுநிற்க
சொம்பிலேதண்ணீர்கள் சிலர்பொம்மையெலாம்
பொம்மைபதுமைகளை புலந்திரருந்தான்பார்த்து
வரும்போதுசொன்னாளே வையைவளநாடியரும்
ஆராய்ந்துமெத்தையை அன்புடனேதான்பார்த்து
பார்த்திருந்தோமென்று பதறியெழுந்திருந்து
வாளுருவிகைப்பிடித்து மன்னர்பெருமானும்
மாணிக்கமெத்தையை மன்னவனுஞ்சுற்றிவந்தான்
பொம்மையைக்கண்டானே பின்பொறுபெண்ணறியான்

நீங்களோவென்றுசொல்ல நித்திலங்குபூமுடியா
தானுஞ்சிறித்துமே தனஞ்செயன்கிட்டிவந்தான்
ஏறிட்டிப்பார்த்தாரே இந்திரருந்தேவியரை
கொண்டைமுடியழகும் கொம்பனையாள்சீரழகும்
பொருந்தும்மயிரழகும் பொன்பிறைச்சுட்டிகளும்
கட்டழகிநெற்றியிலே கஸ்தூரிபொட்டழகும்
இட்டதிருநீரும் இருகாதில்குழையழகும்
மாணிக்கமின்னவே வைடூரியமின்ன
ஆணிப்பொன்னுளிழைத்த அன்னத்திருக்கொப்புகளும்
மாணிக்கவாளு மயிரின்கீழ்சோதிமின்ன
எஞ்சலிட்டகாதுக்கு ஏற்றப்பணிதிகளும்
கார்ரைக்கழுத்தழகும் கட்டுவந்தன்னழகும்
பாரியரெட்டை பவளத்துத்தாழ்வடமும்
முன்கைமுதாரிகளும் முழுகடகமோதிரமும்
சந்திரகடகமும் தாயித்திசோதிமின்ன
அஸ்தகடமும் அழகானமோதிரமும்
பாடகத்தோடும் பணிசிலம்புசோதிமின்ன
காலாழிபீருகளும் கட்டழகிசீர்வடியும்
காலைத்தொடங்கியே கரியகுழல்வரைக்கும்
ஏறிட்டுப்பார்த்தாரே இந்திருடதேவியரை
ஈஸ்வரனுர்தேவியவள் ஈஸ்வரியுமீடலவே
மாயவனுர்தேவியவள் மாதுயெதிரலவே
இந்திரனுர்தேவியவள் இந்திராணியீடலவே
தாமக்குழலாளை தட்டியெழுப்பினுள்
கூவியெழுந்திருப்பாள் கொம்பனைக்கென்னசொல்வேன்
ஓடிவருவாரோ உண்டானகாவலர்கள்
வேந்தன்புலந்திரனுர் விசாரமிட்டுநின்றுரே

பெண்ணைப் புலந்திரன் எழுப்புதல்.

எப்படியெழுப்பலாம் ஏந்திழையையிப்போது
சந்தனத்தைவாரி தையலர்மேல்விட்டெறிந்தான்
சில்லென்றுரைக்கூ தேன்மொழியாளப்போது
பல்லியெச்சலிட்டதென்று படுத்தாளேதான்திரும்பி
அப்புறத்துக்கிப்புறமாய் அவள்திரும்பிதான்படுத்தாள்
அன்னநடைமாது அசையாமல்பள்ளிக்கொண்டாள்
பேரரஞ்சாமன்னர் புலந்திரருந்தான்பார்த்து
கண்டாரேயிந்த கட்டழகிநித்திரையை
நாமானுலாச்சுது நாயகியாள்நித்திரைக்கு
இன்னெருவரானல் இப்படியேநித்திரைகள்
நித்திரைசத்துருவு எனபடுதெல்லாங்கண்டோமே

நித்திராதேவியென்னும் நேரிழையைவேண்டினனே
ஒருசாமப்பொழுதிலே உத்திமியேயிங்குவந்தேன்
ஒருசாமமட்டா யிருந்துவிளையாடி
விடியவொருசாமத்துக்கு மேன்மையுடன்போகவேணும்
இரவும்பகலு மினிப்பிரியோமேந்திழையே
மாதினதுகட்டில்விட்டு மங்கையேநீபோய்வா
இன்றையராவிக்கு இடந்தரவேண்டுமென்றான்
நித்திராதேவியவள் நேரிழையாள்தான்பார்த்து
பூவணையைவிட்டுமே பொற்கொடியுந்தானிறங்கி
மங்கையர்கள்பள்ளிகொள்ளு மண்டபத்துக்குட்புகுந்தாள்
நித்திராதேவியவள் நேரிழையாள்போனபின்பு
போரஞ்சாமன்னர் புலந்திரவீரியனும்
தேவிமுகம்பார்த்து வசம்பொன்முடியானும்
தேவேந்திரபகவான் திருநூற்றைத்தூவினனே
மந்திரவாளாலே மன்னவனுந்தட்டினனே

கலந்தாரி புலந்திரரைக்கண்டது.

சற்றேதான்தட்டலுமே தர்மக்குழலாளும்
பொட்டெனவேகண்விழித்து பொற்கொடியுந்தான்பார்த்தாள்
உள்ளம்நடுங்கி உடம்பெங்கும்விடவிடென்று
ஆரமுலையாட்கு அடிதொடையும்கால்நடுங்கி
பூவணையைவிட்டுமே பொற்கொடியுந்தானிறங்கி
மாணிக்கத்தூணருகே மயில்போலநின்றாளே
ஏறிட்டுப்பார்த்தாளே இந்திரனுஞ்சீர்வடிவை
அங்கராயமென்பார்கள் அவரல்லகாணுமிவள்
அம்மான்மாரென்பார்கள் அவரல்லகாணுமென்பான்
காடுறைந்தபாண்டியர்கள் காவலர்களானக்கால்
மாலைமுடியாரென் மாமன்மார்வந்தாரோ
அங்கவர்காணுமவள் அல்லவென்றுதான்பார்த்தாள்
முடியணியும்பாண்டவர்கள் முடுகாயிருப்பார்கள்
ஏதோயிவரும் இளவசராயிருக்கிறாரே
எண்ணப்பிராயமது இருபத்துகாண்கிறதே
வாலைப்பிராயமது வயதுபதினறிருக்கும்
வந்தாரொருவருமாய் மாளிகைக்குள்ளாக
தாதிமாரில்லாமல் தனியேயிருந்தேனே
வந்தவரிங்கே வலியப்பிடிக்கவந்தால்
நாயகனார்தாமெதிரில் நாக்கைபிடுங்கிடுவோம்
மாளும்படியொழிய மண்ணிலிருப்பதில்லை
கற்கோட்டைமுத்திரையும் கர்ணனிடகாவரெல்லாம்
இத்தனையுந்தானடந்து யிங்குவந்தார்யாரோதான்

வாசற்போயவரையும் வதைசெய்துவந்தானே
மாலைமுடியானும் மதிலேறிவந்தானே
ஆருமறியாமல் அரண்மனைபுகுந்தானே
ஏறிட்டுப்பார்த்தாரே இந்திரனார்சீரழகை
வாசற்படியிலே மன்னவருந்தானிருந்தார்
முத்தினுருமாலை முடிமேலேகட்டிருக்க
கட்டழகர்நெற்றியிலே கஸதூரிப்பொட்டழகு
இட்டதிருநீரும் இருகாதுதன்னழகும்
பூவிருடகச்சையின்மேல் பொற்கட்டையுஞ்சொருகி
சொருகியபட்டைத் துவளத்திருவழகும்
சருவிநிலாவைச் சரிபிடிக்குங்கண்மலரும்
மார்பிற்பதக்கமும் வச்சிரமணித்தாழ்வடமும்
தாலிபதக்கமுஞ் சன்னல்பின்னல்தாழ்வடமும்
ஆரப்பதக்கமும் அங்குசரப்பளியும்
செம்பொன்பதக்கமுஞ் சேத்தசரப்பளியும்
முன்கைமுதாரியும் முழுகடகமோதிரமும்
முத்திரைமோதிரமு முன்கைகடகங்களும்
கச்சைகட்டுமென்மருங்கும் கத்திசொருகழகும்
அலைதாமரைநிறமும் ஆர்பவளச்செவ்வாயும்
காலைதொடங்கிக் கரியகுழளாவாய்
ஏறிட்டுப்பார்த்தார்கள் இந்திரனார் தன்னழ
சந்திரர்சூரியரும் தாமும்எதிரலவே
இந்திரனார்தாமு மிவருக்கெதிரலவே
ஈஸ்வரனார்தாமு மிவருக்கெதிரல்வே
பேரும்பெரிய பெருமாளெதிரலவே
இவன்-வடிவமுமொப்பனையும் மாளவென்றுவந்தானே
திருவழகுமொப்பனையும் சிதறவென்றுவந்தானே
இவன்வருவதுமுன்பாக மன்னவனையாரென்று
மாணிக்கத்தூண்மறைவில் மயில்போலேதானின்று
பூஞ்சிலம்புபாடகமும் போதவேசோர்ந்துவிட

கலந்தாரி புருஷனென்ற்றியாமல் வைகிறது.

கட்டழகிநாயகியும் கைநீட்டிவார்த்தைசொல்வாள்
கூறுவாள்வாய்திறந்து கோதுங்கிளிபோலே
அஞ்சாமல்வந்தவநீ யார்காணுஞ்சொல்லுமென்றாள்
கற்கோட்டைமுத்திரையுங் கர்ணனதுகாவல்களும்
இத்தனையும்தான்கடந்து யிங்குவந்தகாரணமேன்
வாசற்போயாவரையும் வதைசெய்துவந்தாயோ
மாலைமுடியானே மதிலேறிவந்தயோ
உன்னழகேவென்றாள் உவமைபிடப்போகாது

என்னழகுமெங்கே எவ்விடத்தில்கண்டுவந்தாய்
முன்பின்பழக்கமது முகப்பழக்கந்தானுமுண்டோ
காலைகடைசந்தைகொள்ளக் கண்ணியரேகண்டதுண்டோ
அந்திகடைசந்திகொள்ள ஆணழகாகண்டாயோ
பொய்கைக்கரையோடிப் போய்முழுகக்கண்டாயோ
வைகைக்கரையிலே வசந்தமாடக்கண்டாயோ
வீதிபுரத்திலே வெளியேநிற்கக்கண்டாயோ
உப்பரிகைமேலேறி உலாவுகையில்கண்டயோ
எங்கேயென்னைக்கண்டாய் இவ்விடத்தில்வந்துநின்றாய்
தாண்டிக்குதித்தாயோ தங்கத்திருமதிலை
எகிரிக்குதித்தாயோ எந்தன் திருமதிலை
எகிரிக்குதித்தாலும் எழுகுவலைக்காவலுண்டோ
காட்டானைக்காண்கிலையோ கண்டதுண்டஞ்செய்கிலையே
பெண்ணாளரண்மனையில் பெண்புலிகள்காவலுண்டு
மலைநாகங்காண்கிலையோ வாரிவிழுங்கலையோ
போங்காணெழுந்திருந்து பொன்மணிவாசல்விட்டு
கேளாதுபோலே கேட்டிருந்தார்புலந்திரரும்
மற்றுமிளங்கொடியாள் மயிலனையாளேதுசொல்வாள்
ஊமைச்செவியோடா உணரவில்லாவீரியரோ
செவிட்டுப்படுவானோ திறமையில்லாமன்னவரே
காதுமக்குக்கேட்கிலையோ கன்னிநான்சொல்லுவது
என்னை எங்கேகண்டாயோ என்னழகுசிந்திவிட
என்ன அழகென்று இத்தூரங்கண்டுவந்தாய்
சீதைபடாத திருவழகுபடைத்தேனோ
அகலிபடாத ஆணழகுபடைத்தேனோ
வாழச்சிறையிருக்க மனைதேடிவந்ததென்ன
வந்தவரானாலும் வாய்திறந்துபேசாமல்
மவுனமாய்நீயிருந்தால் வாளுக்கிரையாகிடுவாய்
ஆர்பெற்றபாலகனோ அன்னிதமாய்மாளவந்தாய்
போடாநீஎழுந்திருந்து பொற்கதவைத்தாள்பூட்ட
எழுந்துநடமன்னவனே என்கதவைத்தாளணைய
அப்படியேபேசானும் அழகுள்ளவிந்திரனார்
மன்னன்முகம்நோக்கி மடந்தையருங்கூறுகிறாள்
தாரார்புகழுடைய தருமர்மருமகள்தான்
வெற்றிமதயானை வீமர்மருமகள்தான்
ஆணாலழகுமன்னன் அர்ச்சுனர்மருமகள்தான்
தீரவர்மருமகள்தான் திட்டமுடன்செல்லுகிறாள்
ஆணாலேகெட்டவர்கள் ஆருமில்லைவையகத்தில்
பெண்களால்கெட்டகதை புண்ணியரேசெல்லுகிறேன்
ஸ்ரீராமர்தேவியவள் சீதையென்னும்பெண்ணரசே

தென்னிலங்கைராவணனுஞ் சிறையெடுத்தான்மாபாவி
இராவணனுஞ்சிறைஎடுக்க இராமர்வெகுகோபமதாய்
இலங்கையைத்தானழித்து இராவணனைக்கொல்லலையோ
பெண்ணாலேமாண்டானே பேராதாராவணனும்
என்னாலேநீமாண்டால் உன்னைப்பெற்றுளையாளோ
பெண்டிருந்தால்வாடாளோ புத்திகெட்டமன்னவனே
போடாநீமன்னவனே புறப்பட்டுவழிதேடி
அவ்வார்த்தைசொல்லியும் அதற்குமிவர்பேசாமல்
கல்லுமனதுடையாள் காரியத்தைப்பார்ப்போமென்று
மனைவிமனமறிய மௌனமாயிருந்தாராம்
சட்டழகிமாதுநல்லாள் கலந்தாரியேதுசொல்வாள்
காலைத்தாண்டிவந்த கட்டழகாமன்னவரே
காவலர்கண்டாலே கத்திக்கிரையிடுவார்
சொருகருணர்கண்டாலே போடுவார்பலியாக
திருவழகுப்பாவனையுஞ் சிந்தவென்றுவந்தாயோ
வேண்டுமென்றுசொல்லி விரும்பித்தவசுபண்ணி
மாதலத்தால்பெற்றெடுத்த மாதாவறியாளோ
உன்-ஆச்சியறியாமல் ஆணழகாவந்தாயோ
வந்தவரலாற்றை வாய்திறந்துசொல்லுவாய்நீ
எதுக்குஇங்குவந்து இறக்கிறாயுன்னுயுரை
குலமாதருக்காகக் குடியிழந்தார்மெத்தவுண்டு
தருமமுடியானே தருமமாய்ச்சொல்லுகிறேன்
தேவிக்காகமாண்டவர்கள் தேசத்தில்கோடியுண்டு
உத்தமனேவீரியனே உன்னுயிரிருந்தென்றால்
தேவியரைக்கொள்ளுவாய் சிறுவரைப்பெற்றிடுவாய்
குலமாதராகாதோ வேறொருத்திகிட்டாதோ
கொம்பேரிடையானே கோவிலிலேதேவடிமார்
அதிலொருத்தியாகாதோ அதிசயமுள்ளவனே
நாலால்கடுந்திரனர் நூற்றொருவர்கண்டாலே
மாலைமுடியானே வதைசெய்துபோட்டிடுவார்
காசிவளநாட்டாருங் கர்ணருங் கண்டாக்கால்
எடல்லோதாரணயன் இருபிளவாய்போட்டிடுவான்
காடுறைந்தபாண்டவர்கள் காவலர்கள்கண்டாக்கால்
மாலைமுடியானே மாமன்மார்கண்டாக்கால்
வெலறிமதயானை வீமரிருந்தாக்கால்
செம்பொன் திருமுடியைத் தெண்டுக்கிரையிடுவார்
வயிரத்திருமுடியை வாளுக்கிரைகொடுப்பார்
வெட்டிப்பிளந்திடுவார் வீமரதுகண்டாலே
அதுவுந்தானல்லாமல் அரசாளுமநாயகியாள்
அல்லிமலரிலே அவரித்தபெண்பெருமாள்

நீண்முகனைக்கொன்று நிலைபெற்றபெண்பெருமாள்
அரசாளும்நாயகியாள் அல்லிஎன்மாமியார்
ஆரவிளமுலையாள் அறிந்தாலேயாமாகில்
வாளாலேவெட்டி வரிந்திடுவாரென்சாமி
கூறுபங்குபோடுவாள் கொம்பனையாளென்சாமி
ஆரோயிவளென்று ஆகடியம்பேசாதே
வேறொருத்தியென்றுசொல்லி வீம்புகளைப்பேசாதே
மற்றொருத்தியென்றுசொல்லி வம்புகளைப்பேசாதே
எழுந்துநடவுமென்றாள் ஏந்திழையாளப்போது

புலந்திரன் பெண்சாதிகொலுவுக்கு அதிசயப்படுவது.

போரஞ்சாவீரன் புலந்திரனுந்தான்கேட்டு
மனையாட்டிசொன்ன வார்த்தையதுகேட்டு
கட்டானிவார்த்தைகளும் கைநீட்டுப்பேச்சுகளும்
உற்றுநின்று பார்த்ததில்லை உத்தமியாளென்தாயார்
தேவியதுவாய்ப்பிறப்பை திரள்வீரன்தான்கேட்டு
அறைத்திருந்தசந்தனத்தை அள்ளிவிரைத்தாப்போல்
வற்றிக்கிடந்த வருள்பெரியகாவேரி
முட்டப்பெருகிக் கரைவரண்டுபுரண்டாப்போல்
தேகங்குளிர்ந்தாரே இருதோளும்பூரித்து
பூரித்திருதோளும் பொன்னாபரணம்மொல்லாம்
இத்தனைவார்த்தைகளும் ஏனென்னும்கேளாமல்
மௌனமாய்த்தானிருந்தார் வாசற்படிகளிலே
பொற்கொடியாள்மாது பூவைகலந்தாரி
பேசாமல்தானிருந்த புண்ணியரைத்தான்பார்த்து
மாதுமையாள்வெறுத்து மன்னனை தூஷணித்து
கோபத்துடன்தானிருந்தாள் கொம்பனையாளப்போது

புலந்திரன் பெண்ஜாதியைப்பார்த்துச் சொல்வது.

போரஞ்சாமன்ன புலந்திரன்வீரியரும்
தேவிபின்றன்முகத்தைத் திரும்பியவர்தான்பார்த்து
அன்னநடையாளே அமிர்தப்பசுங்கிளியே
வாழும்பெருமைகளும் மாமன்மார்சேவகமும்
இத்தனையுஞ்சொல்லி எடுத்துரைத்தாய்பெண்மயிலே
மங்கலியத்தோடே மயிலினையேயிங்கிருக்க
கொண்டார்பெருமை குடிப்பெருமை சொல்லியோ
ஆளன்பெருமைஅரிவையரே சொல்லலையோ
வண்டார்குழலாளே வாழாப்பெண்ணாயிருக்க
நீர்செய்தகுற்றங்கள் நேரிழையேதானுமுண்டோ
சொல்லுஞ்சொல்லுமென்று செவிகொடுத்துக்கேட்டாரே
கோபம்பெருகிக் கொம்பனையாள்கண்சிவந்து

ஆரமுலையாளும் அளவற்றகோபமாய்
மாணிக்கத்தூண்மறைவை மயிலிணையாள்தானும்விட்டு
என்னுடையவுறன்முறையும் எந்தன்முறைதத்துவமும்
கொள்வினையுமங்கே கொம்பனையுமாராய்ந்து
கூட்டுறவுகொண்டு கொற்றவனேவந்தாயோ
வந்தவழிபார்த்து மன்னவனேநடவுமென்றார்

புலந்திரன் பெண்சாதியை வளப்பங்கேட்கிறது.

ஆரணங்குசொல்லுகையில் அதுகேட்டுஇந்திரரும்
அன்னமேகோயில் ஆர்கோட்டைசொல்லுமென்றார்
ஆரணங்கேயும்முடைய ஐயன்பேர்சொல்லுமென்றார்
மங்கையரேயும்முடைய மாமன்பெயருமென்ன
மாலையிட்டுக்கொண்ட மணவாளன்பெயருமென்ன
தாலிகட்டிக்கொண்ட தலைவனதுதன்பெயரும்
உன்னுடையபெயரும் வுரையுமென்றானிந்திரரும்
பெயருரைப்பாயாமானால் போவேனெழுந்திருந்து
சொன்னபிறகாக சுந்தரியேநான்போகேன்
சொல்லாதேபோனால் தோகையரேநான்போறேன்
சொல்லுஞ்சொல்லுமென்று செவிகொடுத்துக்கேட்டிருந்தீர்
நின்றவள்விசாரமிட்டு நெடுமூச்சுதானறிந்து
கண்டகனவை கயற்கண்ணாள்தானினைந்து
பேர்கேட்டுவேர்பிடுங்க புண்ணியரேவந்தீரோ
ஆனாலுங்குறைவில்லை ஆனதொருமன்னவனே
என்றுயிளமுலையாள் எண்ணாதுமெண்ணுகிறாள்
மதுரைவளநாட்டாரும் வந்தாரோவென்றறியேன்
ஆனந்தமார்பர் அவரேயிவரானால்
மெத்தவுதாகினங்கள் வேந்தரைசொன்னோமே
இவ்வளவுமுட்கொடுத்து யிருந்துமிகக்கேட்டாரே
ஆச்சியுடனே அரிக்கையிட்டுசொல்லுவாரோ
அவரோயிவனாரோ யாதுவறிகிலேனே
என்னவிதுமாயமோ ஏதுந்தெரியவில்லை
பெயருரைத்தோமானால் போவாரெழுந்திருந்து
மாணிக்கத்தூணமறைவை மங்கையரும்தான்விட்டு
வேல்பொருந்துங்கண்ணாள் வெளிப்புறமாய்வந்துநின்று
கைநீட்டிசொல்லுகிறாள் கட்டார்கருங்குழலாள்
கட்டழகாவிந்தமன்னை கலந்தாரியரண்மனைதான
எங்களையாதேர்க்கரசறெனறுயார் துற்சடையாள்
மாமன்மார்நூற்றொருவர் அரசாளும்பூபதியார்
அம்மானமார்நூற்றொருவர் அரசாளும்பூபதியார்
தேசத்தழகுமன்னனை திரியோதிரப்பெருமான்
பேரால்மிகுந்ததொரு பெருந்திருவாளென்மாமி

அருமையெனவளர்க்கும் அம்மானதிகர்ணர்
பொற்கருணர்தேவி பொன்னுருவாளென்மாமி
என்பேர்மலந்தாரி எழுந்துநடமன்னவனே
இந்திரனர்தேவிநான் எழுந்துநடவுமென்றார்
இந்தவகைபெயரும் ஏந்திழையேசொன்னாயே
கொண்டவர்கள்பெயரோ கொடுத்தவர்கள்தன்பெயரோ
எவர்களதுபெயரோ எனக்கறியச்சொல்லுமென்றார்
கொடுத்தவர்கள்பேர்சொன்னாய் கொண்டவாபேர்சொல்லுமென் [றார்
அருங்கிளியுமேதுசொல்வாள் அவ்வார்த்தைதான்கேட்டு
சொல்லுகிறாள்மாது குலங்குநவமணிபோல்
தாரார்புகழுடைய தருமரைவர்பாண்டவர்கள்
வெற்றிமதயானை வீமன்மகாராசன்
நகுலசகாதேவரென்னும் நற்புகழும்பாண்டவர்கள்
மாமன்மாரைந்துபேர் மாமியாரேழுபேர்
துரௌபதைசுபத்திரையுந் தோகைபவளக்கொடி
நாககன்னிபோகவதி நறுநுதலால்மின்னொளியும்
அல்லிமலர்தனிலே அவதரித்தபூவையரும்
எந்தனுக்குமாமியார்யெழுந்துநடமன்னவனே

கலந்தாரியை புருஷன்பெயர் சொல்லுமென்பது.

கேட்டுப்புலந்திரரும் கிருபையுடனேதுசொல்வார்
இப்போதெரிந்தது யேந்திழைபெண்ணணங்கே
மாலையிட்டயுன்புருஷன் மணவாளன்பேர்சொல்லுமென்றார்
மணவாளனென்றுசொல்ல மனதுமிகத்தளர்ந்து
துக்கித்துப்பெண்மயிலுஞ் சொல்லிநடுநடுங்கி
சொன்னால்தான்போவான் சுந்தரப்பூமுடியான்
என்றுயிளமுலையால் யெடுத்துரைப்பாள்மன்னவற்கு

கலந்தாரி புருஷன்பெயர் சொன்னது.

கேளுங்காண்மன்னவரே கிளிமொழியாள்மணவாளன்
இந்திரனரென்புருஷன் என்பேர்கலந்தாரி
இப்பவென்றால்தெரிந்ததே யெழுந்துநடவுமென்றாள்
போரஞ்சாவீரன் புலந்திரருங்கூறலுற்றார்
இந்திரனரென்றாயே யிருவருண்டிராச்சியத்தில்
அண்டத்துளிந்திரனே ஆகாயவிந்திரனே
பேர்பிரித்துச்சொல்லுமென்றார் வேந்தர்பெருமானும்
காரிழையாள்மாது கலந்தாரியேதுசொல்வாள்
ஆகாயவிந்திரனர் அவரிடதேவியென்றாள்
அர்ச்சுனனரீன்றெடுத்த அழகுள்ளவிந்திரனர்
போர்க்கஞ்சாமன்னன் புலந்திரவீரியனர்

அவரிடதேவியென்று அறியவுறைத்தாளே
அத்திபுரமுமடங்களுமென்னுதென்ருள்
தென்பாண்டிநாடாளுஞ் சேரவேயென்னுதென்ருள்
செம்பொன்படுத்துரையும் தீவுகளுமென்னுதென்ருள்
பவளப்படுந்துரையும் பட்டணமுமென்னுதென்ருள்
ஐவரும்நூற்றுவரும் அன்புடன்வாழ்கையிலே
கொற்றவர்கள்யாவரும் கூடியிருக்கைலே
மகாராசரவர்மருமகள் வேண்டுமென்று
வையகத்தையாண்டாட்கும் மருமகள்வேண்டுமென்று
சரியொத்தசம்பந்தந் தையநல்லாள்வேண்டுமென்று
மாலையிட்டாரெந்தனை வளநாடியிந்திரற்கு
திரும்பிப்பகையாச்சு தென்னவர்க்கும்நூற்றுவர்க்கும்
பாண்டவர்களைவரும் பாரவனம்போனபின்பு
அன்றுமுதலின்றளவும் அழைத்துவரயாருமில்லை
மாலையிட்டுக்கொண்ட மணவாளன்மைத்துனரும்
மணவாநளாட்டிலே மண்ணவருந்தானிருக்க
மைத்துனனுரமைத்த வன்சிறைகார்க்கிறேன்யான்
அவர்வைத்தசிறையிலே வாடுகிறேன்மன்னவனே
போரஞ்சாவீரனவர் புலந்திரன்தான்கேட்டு
சிறையென்றுசொல்லுகையி தென்னன்பெருமானும்
காவலர்கள்வீரியனுங் கண்ணிறைமுத்துதிர்த்தான்
அங்கவளைக்காணுமல் அழுதகண்ணீர்தான்துடைத்து

புருஷன்தானென்று புலந்திரன்சொல்வது.

போரஞ்சாவீரனவர் புலந்திரன்கூறலுற்ருன்
காரிழையாள்மாது கலந்தாரிநாயகியே
உன்னை-மாலையிட்டுக்கொண்ட மணவர்ளன்யான்காணும்
தாலிதரித்ததொரு தர்மர்மகன்யான்காணும்
கொண்டுசிறையில்வைத்த கொற்றவனும்யான்காணும்
மதுரைவிட்டுவந்தேன் மங்கையரேயிப்போது
அனந்தலெழுப்பியென்னை ஆச்சிவரவிட்டாள்காண்
ஆருமரியாமல் அரிவையரேயிங்குவந்தேன்
ஓமப்புகையிலே வுத்தமியேயிங்குவந்தேன்
தையலேமங்கிலியம் தரித்தவன்யான்காணும்
சுந்தரியேயுன்னுடைய சுண்டுவிரல்பிடித்த
மன்னர்பெருமாள் மணவாளர்யான்காணும்
அன்னமேயெனக்கு அத்தைமகள்தானும்
காடுறைந்தபாண்டவர்கள் காவலர்கள்தன்மகள்தான்
வேறொருவரென்றுசொல்லி விசனமதுவேண்டாம்
மற்றொருவரிங்கே வருவாரோகாவலிலே

கற்கோட்டைமுத்திரையுங் கர்ணனதுகாவல்களும்
நூலால்கடுந்திரளாற்நூற்றொருவர்களும்
இத்தனையுந்தான்கடந்து யிங்கேவருவாருண்டோ
அரசாளும்நாயகியா ளல்லித்திருமகன்யான்
ஐவர்பயின்றெடுத்த அழகுள்ளவிந்திரன்யான்
பாரஞ்சாவீரன் புலந்திரன்காணும்
ஆரணங்கேநானுனக்கு அம்மான்மகன்தானும்
வேறொருவரென்று விகற்பங்களெண்ணாதே

கலந்தாரி அடையாளங்கேட்டது

என்றுரைத்தமன்னவரை ஏதுரைப்பாள்நாகியும்
மாதுயெடுத்துரைப்பாள் மைத்துனரைத்தான்பார்த்து
மதுரையிலிருந்துவந்த மைத்துனருமானுக்கால்
மாமியடையாளம் மன்னவரேதாருமென்றாள்
அத்தையடையாளம் ஆணழகாதாருமென்றாள்
போரஞ்சாவீரனவன் புலந்திரனுங்கூறுவான்
வரும்போதுதந்தாள்காண் வைகைவளநாட்டாளும்
வைகைகரைதனிலே வந்துசெபஞ்செய்கையிலே
சிவபூசைசெய்கையிலே தேன்மொழியாளடையாளம்
கட்டளகியடையாளம் கைநழுவிவிட்டேன்காண்
வைகைகரைதனிலே வைத்துமறந்துவிட்டேன்
வைத்துமறந்துவிட்டேன் மயிலிணையேயென்றுரைத்தார்
மாதுகுழலாள் மயிலிணையேதான்பார்த்து
உங்களம்மான்மார்தன்னுடனே அறிக்கைவிட்டுசொல்லவில்லை
காவலர்கள்தம்முடைய கர்ணருக்குச்சொல்லவில்லை
சுற்றியருதிருக்குந் தோழியருக்குச்சொல்லவில்லை
இன்றையராத்திரிக்கு இன்பமுடன்விடுத்து
நாளையராத்திரிக்கு ராசாவேநீர்வாராய்
மாமியர்கையில் வாங்கிவந்தயடையாளம்
மாணிக்கமெத்தையிலே மருவயிடந்தருவேன்

புலந்திரன் அடையாளங்கொடுத்தது.

போரஞ்சாவீரன் புலந்திரனுந்தான்கேட்டு
இவள்கட்டாணிவார்த்தைகளும் கைநீட்டுபேச்சிகளும்
வாய்விளங்கப்பேசுகிற மங்கையரைத்தான்பார்த்து
இந்தாருமென்று எடுத்துமவள்கைகொடுத்தான்
கண்டாளடையாளங் கடுகனவேதான்வாங்கி
உள்ளேநுழைந்து ஒருசொம்புஜலமெடுத்து
பூஷணத்தைசுத்திசெய்து பூபோட்டுதொண்டனிட்டு
அத்தையடையாளம் அன்பாகத்தானெடுத்து
பெட்டியிலேபடைத்து புலந்திரனூர்முன்வந்தாள்

வைகைவளநாட்டா ளும்மைமறந்தாளே
திருடிக்கொண்டுவந்தாயோ தென்னன்முடிதோங்க
நம்பேனொருநாளும் நாயகனேயுந்தனைத்தான்
மைத்துனர்மெய்யானல் மாணிக்கத்தூண்பிளந்தால்
அத்தைமகனென்று யன்பாயிடங்கொடுப்பேன்
மாதுகலந்தாரி மயிலிணையாள்சொல்லுகையில்
போரஞ்சாமன்னர் புலந்திரன்வீரியரும்
பார்த்தார்பலகாலும் பாண்டவர்புத்திரரும்
ஆரைநினைத்தானே ஐவர்திருமகனும்
சோலைமலருடைய சொக்கரைத்தானினைத்தான்
நஞ்சையமுதுண்ட நாதரைத்தோத்தரித்து
அரனார்செயலாலே ஆரணங்குபொற்றூணு
தானாய்ஒடிந்ததுவே தையலதுபொற்றூணு
மாதுகலந்தாரி மைத்துனரைத்தான்பார்த்து
மாமிமகன்மெய்யானல் மதிலோடுகற்கோட்டை
கட்டியேதானடந்தா லிருக்கவிடந்தருவேன்

புலந்திரன் கோட்டையைக் கடக்கவைத்தது.

மாது அவளுரைக்கு மன்னவருமேதுசெய்தார்
அட்டாளுஞ்சொக்கரென்னும் ஐயரைத்தான்துதித்தான்
காமனைக்கண்ணுலெரித்த கர்த்தரைதான்துதித்தான்
அப்படியேகடந்தது அவளுடைகற்கோட்டை
எட்டிநடந்ததுவே இருப்பிடத்திற்சேர்ந்ததுவே
அப்படியும்நம்பவில்லை ஆரவிளமூலையாள்
போர்க்கஞ்சாமன்னர் புலந்திரனும்நீரானல்
வாயற்படிதனிலே மணிப்பதுமைகட்டிருக்கும்
மணிப்பதுமைவாய்திறந்து மன்னவரேசொன்னக்கால்
மருவவிடந்தருவேன் மைத்துனவென்றுசொல்லி
இல்லாமற்போனக்கால் சொல்லாமலெழுந்துநட

புலந்திரன் மணிப்பதுமையைப் பேசவைத்தது.

இவ்வார்த்தைதான்கேட்டு அழகுள்ளஇந்திரனர்
விலங்குமுகத்துக்கும் வெட்டுண்டுசாகாமல்
அறியாமலிங்குவந்தேன் ஆரணங்குகோட்டைக்கு
பிட்டுக்குமண்சுமந்த புனிதரைதான்தொழுதான்
காலனைத்தானுதைத்த கர்த்தரைத்தான்தொழுதான்
சொக்கரைத்தானினைந்து தொழுதானேதார்வேந்தன்
மாயாண்டிகிருபையினல் மணிப்பதுமைவாய்திறந்து
சொல்லுகிறமணிப்பதுமை சொக்கர்கிருபையினல்
தருமர்திருமகன்தான் தாரார்கருங்குழலே
கூடிமருவிடுங்கள் கொற்றவருந்தேவியுமாய்

சொல்லுகிறமணிப்பதுமை சொர்க்கிளிபோலே
காதாரக்கேட்டாளே கலந்தாரிநாயகியும்
மந்திரக்காரனோதான் மலையாளவித்தையுண்டோ
ஏமாத்தவந்தவனோ ஏதுமறிகிலேனே

கலந்தாரிதூணை வரவழைத்தது.

எண்ணாதுமெண்ணி இளங்கொடியுமப்போது
பத்தினியுநானால் பார்த்தன்மகனானக்கால்
மாணிக்கத்தூணே வாருமென்றுதானழைத்தாள்
மாணிக்கத்தூணும் வந்துவிளைந்ததுகாண்
மாமியடையாளம் மங்கையரும்கட்டிவைத்து
மாலையிட்டுக்கொண்ட மணவாளனிவரானால்
பெட்டியும்பேழையும்போய் பொருந்துமென்றாள்பொற்றாணை
பேழையானதூணிலே போட்டடைத்த அடையாளம்
ஆகாயவாணிகளும் அருந்ததிசாட்சிவைத்து
அக்கினியைசாட்சிவைத்து ஆதிசிவனைசாட்சிவைத்து
மெய்யானசாட்சிகள் மெல்லியரும்வைத்தபின்பு

கலந்தாரிபுருஷனென்றறிந்து பள்ளியரைகூட்டிப்போனது.

அஞ்சிநடுங்கி அத்தைமகனென்றறிந்து
ஆறுதப்புநூறுபிழை அடியாள்தான்செய்ததெல்லாம்
கோடிதப்புநூறுபிழை கொற்றவரேகொண்டிணையும்
என்றுஅடிபணிந்தாள் ஏந்திழையுமப்போது
பேரஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறுகிறான்
ஆறுமறியாமற் ஆச்சிவரவிட்டாள்காண்
வாருமென்றுசொல்லி வன்னவிரல்கைப்பிடித்து
செம்பொன்கதவடைத்து சிக்கனவேதாள்பூட்டி
சாளரவாசல்தனை பளிதணியதாள்பூட்டி
மங்கையரைக்கொண்டு மாளிகையினுள்ளுழைந்தார்
மாணிக்கக்கட்டில்கள் மாமன்மார்போட்டதினால்
அடுத்திருக்கும்பஞ்சணைகள் அரிவையரேயாகாது
கொண்டுவந்தேன்பூமெத்தை கொம்பனையேகூடிருக்க
பூமெத்தைபோட்டாரம் பொருந்திவிளையாட
மல்லிகைமெத்தையிலே மாதரைகொண்டுவந்து
மாதரைப்புலகி மடிமேகிலகுந்தவைத்து
ஆரனத்திருத்தி அழகுபணிதான்பூண்டு
கோவைத்திருத்திக் குழற்கோதிகொம்பனைக்கு
வாளிதிருத்த மயிற்கோதிகொம்பனைக்கு
குப்பில்சாந்துங் குழாயில்புனுகணிந்து
தேவியையலங்கரித்து கசம்பொன்மணிமுடியான்
தாமுமணிந்துகொண்டு ஜனந்தவாழ்மார்பன்

வாய்த்தயிலைசுருளும் வர்னப்பழக்காயும்
பண்டுபலாதிகளும் பழங்கள்ரசக்னியும்
மடித்தயிலைசுருளும் மரகருக்குதான்கொடுத்தாள்
தாமுமிலையடக்காய் தின்றுதனஞ்செயனார்
மாதுமுகம் நோக்கி மன்னனெடுத்துரைப்பான்
மங்கையரேமீறி வளந்து சமைத்திருக்க
திங்களொருக்கால் தேன்மொழியேமுழுகிறையோ
மங்கையரேநீருமிங்கே வாழ்ந்திருந்ததெல்லாம்
அந்தப்பாவங்களெல்லாம் அம்மான்மார்தன்னுடே

புலந்திரனும் பெண்சாதியுங்கூடினது.

வெற்றிலைதின்று விரும்பிவிளையாடி
தென்மதுரைராமருக்குச் சீதைவந்துவாய்த்ததுபோல்
கந்தருடன்வள்ளியம்மன் கைகலந்தபாவனைபோல
தேவியுடனேயிருந் தடைக்காய்தின்றிருந்தான்
பூவணைவிட்டுப் பொற்கிளியுந்தானிறங்கி
கவரிகொண்டு வீசலுமேகளைதெளிந்து கண்விழித்தான்
பலகாலுந்தானே பழகினவள்போலே
அருகாகவெண்கவரி ஆரணங்குவீசுகிறாள்
இளவாழைத்கண்டொடித்த இணைக்கைகள்நோகாதோ
அநேகநெடுநேரம் அறிந்துவிளையாடி
கார்குழையாள்மாது கலந்தாரிநாயகியாள்
மல்லிகைமெத்தையை மயிலிணையாள்விட்டிறங்கி
காலோடுகைகழுவி கனிவாயுங்கொப்பளித்து
வாயோடும்பல்லுசளும் மதிமுகமுஞ்சுத்திசெய்து
மைத்துனரைப்பார்த்து மாதுஎடுத்துரைப்பாள்
தக்கப்புகழுடைய தருமர்பெயராலே
நானுமொருபொருளாய் நாயகமேவந்தீரே
பசிக்கவமுதுண்ணவென்று பாலித்தாள்பைங்கொடியும்
பொற்றளிகையிட்டு பொற்கிளியேமுன்வந்தாள்
பொற்றளிகைதானும் புசித்துமேஅப்போது

இருவருக்கும் வாது.

போரஞ்சாவீரனவர் புலந்திரனுங்கூறுகிறார்
சோதையுடன்குந்தி கொற்றவரேதுசொல்வார்
மாதேயிளங்கொடியே மயிலிணையேகேளாய்
சகுணபடுபாவி சண்டாளன்வாசலிலே
மாதைதுகிலுரிந்தமாபாவி வாசலிலே
கச்சாயந்தின்பதில்லை கன்னியிளமயிலே
வெற்றிமதயானை வீமரதுசெண்டாலே
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்பூமுடியை

வெட்டிபலியிடுவோர் வீமரதுதெண்டாலே
பாராதுமுடிந்துவுங்கள் பார்வேந்தர்மாண்டாக்கால்
ஆரணங்கேயுன்னுடைய அம்மான்மார்கண்டாக்கால்
மாமியாாவீட்டிலே வரப்போகவிருக்கிறது
மாமியார்வீட்டிலே மருவுண்டிருக்கிறது
பாண்டவர்கள்நாடுபெற்று நாமும்பயந்தெளிந்து
கொற்றவர்கள்நாடுபெற்று நாமும்முறைநீங்கி
மாலைமுடிபாண்டவர்கள் வந்தபிறகாக
வண்டார்குழலாள் மயிர்முடித்தபின்பாக
கச்சாயந்தின்று கலந்துறவாடுவதும்
என்றுரைக்கமன்னர் ஏந்திழைதானழுதாள்
தேவியழும்போது தேர்விஜயன்புத்திரனார்
மாமன்மார்மாண்டாரென்று மங்கையரேயேழுதாய்
உன்-அம்மான்மாா்செய்த அக்கிரமம்நீகேளாய்
உருவமதயானை உத்தமர்களைவரையும்
விருந்தமருமென்றுசொல்லி வேந்தரைதானழைத்து
வலுவிலேதானழைத்து மாயத்தால்சூதாடி
சகுனியாலேசூதாடி தருமர் புரந்தோற்று
எத்தேர்புரந்தோற்று இருப்பிடமுந்தோற்று
யானைகளும்தேருகளும் அணிமணிச்சிங்காதனமும்
முத்துமுடியு முருதுவளச்செவ்வாயும்
நாடுமிகத்தோற்று நல்வரையுந்தான்தோற்றும்
வித்தகனார்பாஞ்சாலன் பெற்றவிளக்கொளியை
கொற்றவர்கள்பாண்டவர்கள் கொண்டகுலவிளக்கை
மாதாவையும்வைத்து மன்னவர்கள்தோற்றார்கள்
தாமக்குழலாளை தள்ளிவந்தானம்பலத்தில்
வேல்பொருந்துங்கண்ணாளை வீதிநடக்கவைத்தான்
ஐவர்மனையாளை அங்காடிநடக்கவைத்தான்
அன்னநடையாளை அம்பலத்திலேற்றிவைத்தான்
சொல்லாதுஞ்சொல்லி துகிலிமுறியவைத்தான்
பாஞ்சாலன்புண்ணியத்தால் பாண்டவர்கள்புண்ணியத்தால்
மாளாதேவளர்ந்தது மாதுதுகிலாடையது
சற்றேநழுவியே உடைதுயில்தளருமாகில்
வெற்றிமதயானை வீரமதுதெண்டாலே
மாள்கிறது அன்றல்லவோ மாமன்மார்நூற்றொருவர்
சாகிறது அன்றல்லவோ தனஞ்செயன்கையம்பாலே
மாமன்மார்பட்டாலே மங்கையரேயேழுவாய்
ஏலங்குழலாளே எனக்குதுக்கம்வாராதோ
அம்மானையென்றானே தருமமுடியழகன்
தையலவள்கேட்டு தரியாளேபூமியிலே

பூவணையைவிட்டிறங்கிப் புணர்கிளியுமப்போது
இதுவுமொருகாரியம்போல் இவ்வாணைவந்ததென்ன
ஆணைவிடுமென்று அடிவணங்கித்தெண்டனிட்டாள்
வந்துவிழவொட்டாதே மன்னரெடுத்தணைத்து
விட்டேனேயாணையெல்லாம் வேல்பொருதுங்கண்ணாளே
ஆரமுலையாட்கு அடைக்கால்சுருள்கொடுத்து
பொற்கொடியேயெந்தனுக்குப் போகவிடைதாரும்
விடையென்றுகேட்கையிலே வேந்தன்மனையாட்டி
போகவேவந்தீரோ புதுமைகளைக்காட்டவந்தீர்
காவலழிக்கவந்தீர் கட்டழகாமன்னவரே
காரியங்கள்பார்ப்பதற்குக் காவலரேவந்தீரோ
மதுரையைநானறியேன் வைகைவளநாடறியேன்
வாழுமதுரையென்று திசைகளுநானறியேன்
சீரானமதுரையென்று சீமைகளும்நானறியேன்
முத்துப்படுந்துறையும் முடியரசிபட்டணமும்
பட்டுப்படுந்துறையும் பட்டணமுநானறியேன்
சத்திரஞ்சாலைகளுந் தாமரைப்பொய்கைகளும
சித்திரசோலைகளுந் திருவாலவாயறியேன்
பெண்ணாய்ப்பிறந்து பெருமாள்முடிசூட்டி
அன்னமபோலாண்டாளே ஐம்பத்தாறுகாதம்
என்றுசொல்லக்கேட்டிருப்பேன் என்கணவாநானறியேன்
பாக்கவேநான்வருவேன் பாண்டிவளநாட்டை
இருவரையுமொன்றாய் எடுக்காதோயிப்புரவி
வருகிறேநானுமுங்கள் வைகைவளநாட்டுக்கு
நானும்வருகிறேன் நாயகரேகூடவென்றாள்
போரஞ்சாமன்னர் புலந்திரருமேதுசொல்வார்
ஆரென்றெனையறிவாய் அரிவையிளமயிலே
மதுரைதுரையாளுகிற மாதுமையாள்புத்திரற்கு
போரஞ்சாமன்னன் புலந்திரவீரியற்கு
ஆனந்தமார்பருக்கு அடப்பம்பிடிக்கிறவன்
அந்தவடையாளஞ்சொல்லி அணைந்தேனேயிப்போது
மெய்யாய்நீரென்பிறகே மெல்லியரேபின்தொடர்ந்தால்
தருமோடிதங்கையரே தாரரர்கருங்குழலாய்
அவ்வசனங்கேட்டு அரிவையெடுத்துரைப்பாள்
மைத்துனரைததானபார்த்து மாதுமெடுத்துரைப்பாள்
வந்தவொருபூவணைக்கு மருவியுறவாடி
வந்தபொழுதே மணவாளர்நீர்காணும்
நகைநகைததாரிந்திரும் நாயகியாளசொல்லுகையில்
போர்க்கஞ்சாவீரன புலந்திரனுங்கூறுகிறான்
கற்கோட்டைமுததிரையும் கர்ணனதுகாவய்களும்

இத்தனையுங்கடந்து இங்கேவருவாருமுண்டோ
மதுரைவிட்டுவந்த மணவாளர்நான் தாண்டி
காரிழையேயுன்னை களவாகக்கொண்டுசென்றால்
தேடித்திரியாரே சேனைகளத்தனையும்
மாலையிட்டுக்கொண்ட மணவாளனானல்லோ
தாலிதரித்ததொரு தருமர்மகன்யானல்லோ
களவாகக்கொண்டுசெல்ல காரியமேன்நாயகியே
மாளைபாரதமுடித்து படுகளமுஞ்சென்றாக்கால்
நங்கையரேவுன்னுடைய மாமன்மார்மாண்டாக்கால்
பாண்டவர்கள்நாடுபெற்று பதியமர்ந்தபிற்பாடு
மன்னவர்கள்நாடுபெற்று வந்துபிறகாகாதோ
வண்டார்குழலாளு மயிர்முடித்தபிற்பாடு
அப்போதுதண்டிகையும் ஆளும்வரவிடுவேன்
உன்மைந்தனுநீயுமாய் வாருமென்று தானுரைத்தார்
காரிழையாள்மாது கலந்தாரிதான்கேட்டு
எனக்கு-மைந்தனுமுண்டாச்சோ மன்னர்பெருமானே
பிள்ளையுமுண்டாச்சோ பேர்பெரியமன்னவரே
போர்க்கஞ்சாவீரனவர் புலந்திரருமேதுசொல்வார்
உங்கள்குலம்போலேயல்லோ கூடமலர்க்கண்ணாளே
ஆண்மலடுபெண்மலடு அடங்கலுந்தான்மலடு
கண்ணிலான்பெற்றெடுத்த கபடரெல்லாந்தான்மலடு
எங்கள்குலங்கேளாய் இளங்கொடியேசொல்லுகிறேன்
தேர்விசையனர்ச்சுனனார் தெருவழியேவரும்போது
முன்னழகுகண்டு மொய்குழல்மார்சேர்ந்திடுவார்
அப்போதேகெற்பம் அடையுங்காணாரணங்கே
வந்ததொருபூவணையில் மருவிவிளையாட
உனக்குமைந்தனில்லையென்றால் வையகங்களேசாதோ
பிள்ளையில்லையென்றால பூதலத்தாரேசாரோ
பேடைமலர்கண்ணாள் பெறுவது ஆண்பிள்ளை
உன்-அம்மான்மார்பெயரை ஆரணங்கேவையாதே
எங்கள்ஐவரதுபெயரை இடவேண்டுமாரிழையே
ஆணழகர்ஐவரிலே அர்ச்சுனனாரென்றழையும்
சித்திரவில்பேரனவன் சின்னஅர்ச்சுனனார்
அப்படியேயாகுதுகாண் ஆணழகாமன்னவனே
விடிந்துவருகுதடி மெல்லியிளங்குயிலே
பொறகொடியேயெந்தனுக்குப் போகவிடந்தாருமென்றார்
விடையென்றுகேட்கையிலே வேல்பொருதுங்கண்ணாளும்
மைத்துனரைத்தான்பார்த்து மாறுமெடுத்துரைப்பாள்
தாதியர்களறியாமல் தார்வேந்தர்வந்தீரோ
பிஞ்சுமணிமுடியாள் புத்திரரேயுண்டானால்

181986

பொல்லாமசக்கையது பொருந்திற்றேயாமாகில்
அம்பலத்தாரெல்லாம் அறிந்துவிட்டாராமாகில்
என்னசொல்வேனானு என்மாமர் நூற்றுவர்க்கும்
மாமியடையாளம் மன்னவரேநீர்கொடுத்தீர்
உம்முடையயடையாளம் உத்தமரேதாருமென்றார்
தருவீரெனமறுத்தாள் தாமக்குழலாளும்
போரஞ்சாமன்னர் புலந்திரருந்தான்பார்த்து
எண்பத்தெண்ணாயிரம்பேர் இளங்கொடிமார்தானுமுண்டு
கொம்பனைமார்தங்களுடன் கூடக்கொலுவிருப்பேன்
சல்லாபம்பேசியேதான் சரசங்கள்செய்யவந்தால்
தங்கைதமக்கையென்பேன் தையலர்கள்யாவரையும்
பாண்டவர்கள்நாடுபெற்ற பதியமர்ந்தபிற்பாடு
வண்டணியுங்குழலாள் மயிர்முடித்தபிற்பாடு
உண்பதுந்தின்பதுவுந் உன்மாளிகையிலேறுவதும்
அன்றுகாண்மாதரசே ஆரணங்குயென்றுரைத்தார்
விடிந்துவருவது விஜயன்மருமகளே
போகவிடைதாருமென்றார் புலந்திரனாரப்போது
விடையென்றுகேட்கையிலே வேல்புருவங்கண்ணாளும்
மாதமொருபயணம் வருவீரோமன்னவரே
சொல்லுமென்றுகேட்டாள் சொர்னப்பசுங்கிளியே
ஒருநாளும்பொய்வார்த்தை உரையாதவுத்தமனும்
எங்கள்-ஆச்சிக்குச்சொல்லி அறிக்கையிட்டுஅப்படியே
மாதமொருமுறைதான் வருகிறேன்தப்பாமல்
விடையென்றுகேட்கையிலே மெல்லிகருங்குழலாள்
பூவணையைவிட்டிறங்கி பொற்கொடியாள்நாயகமே
வாய்த்தவிலைச்சுருளும் வர்ணத்துவர்பாக்கும்
காவலனார்வீரியற்கு கைநிறைய அள்ளியிட்டாள்
வேசியரல்லவோ கொடுப்பாளிலையமிர்தம்
ஏலங்கருங்குழலே இதுகளொன்றும்யானறியேன்
கொம்பனையேநீருங் குடியிருந்துகாத்தீரோ
இந்நாட்டுவாசனைகள் எந்திழையேயல்லவிது
இந்திரலோகத்தில் இருந்துவந்தவாசனைகள்
ஆகையினாலே அரசியேநான்கொடுத்தேன்
பொற்கொடியேநீஎனக்குப் போகவிடைதாருமென்றார்
தாரார்கருங்குழலாள் சரணமென்றடிபணிந்து
ஆறாயிரவருக்கும் அவருடையதேவியற்கும்
பொன்னின்மலைநாடாளும் பேரெழுதிஐவருக்கும்
வையமுழுதாளுகின்ற மாமியார்தங்களுக்கும்
தெண்டனிட்டவிண்ணப்பஞ்செப்புவீரவர்களுக்கும்

புலந்திரன் மதுரைக்குப்பயணப்பட்டது.

என்றுசொல்லமாதுநல்லாள் இந்திரருமனமகிழ்ந்து
சிங்காதனத்தைவிட்டுத் திகழக்குதித்திறங்கி
மன்னருமுன்னடக்க மாதரும்பின்னடக்க
ஆகாயவான்புரவி அலைதாரன்முன்புவர
வானப்புரவியது வந்ததுமன்னவன்முன்
புராரியழகனவன் புகழ்வீரன்பேரழகன்
மதுரைமணவாளன் வந்தபடிவாராதே
என்றுமவள்கூறி இறங்கியேதெண்டனிட்டாள்
தேவியின்றன்முகத்தைத் திரும்பியவர்பார்த்து
அங்குபடிகாலைவைத்து ஆனந்தவாழ்மார்பன்
ஏறினாரப்பொழுது இளவிஜயன்புத்திரனும்
உத்தமர்கள்புத்திரனும் உதாறிச்சுஏறினானே
ஏறினதுகண்டாளே இந்திரரைத்தான்காணாள்
மைத்துனரைப்போகவிட்டு வாடிமனந்தளர்ந்தாள்
வாடிமனந்தளர்ந்து வானமுகம்வேறுபட்டு
பள்ளிகொள்ளுமண்டபத்தில் பைங்கிளியுந்தான்புகுந்து
கூடியிருந்தோமே குரங்குமக்காட்டிலே
ஏறியிருநதோமே யெழில்பெரியமண்டபத்தில்
இன்னமொருமுறை இனிக்காணப்போவதுண்டோ
என்று-செம்பொன்கதவடைத்துச் சிக்கெனவேதாள்பூட்டி
பூவணைமேலேறி பொற்கொடியும்தெண்டனிட்டு
தாமக்குழலாளும் தழுவணையிற்பள்ளிகொண்டாள்

புலந்திரன் மதுரைக்குவருகிறது.

பொன்னுமணியழகன் புலந்திரனார்தன்புரவி
ஆகாயமாயெழுப்பி அந்தரத்தில்தான்பறந்து
தாமரைசூழ்நாடுகளும் தருமாபுரங்கடந்து
வாழ்மதுரைநாட்டில் வந்ததுஅப்புரவி
சிங்காரத்தோப்பிலே சென்றதுஅப்புரவி
சந்தனவாழ்மரத்தில தனஞ்சயரைதானிறக்கி
கொண்டுவந்துவிட்டது கொற்றவனார்தனபிறவி
செம்பொன்கடிவாளஞ் சிக்கனவேதான்பிடித்து
வைகைக்கரையிலே மன்னவனார்வந்திறங்கி
மஞ்சள்நீர்தோட்டத்தில் மன்னவனார்வந்திறங்கி
ஆடைகளைந்து ஆபரணந்தான்களைந்து
நன்றாய்ப்பணிதிகளை நாயகருந்தான்கழட்டி
பச்சைவடங்களைந்து பாண்டிப்பெருமானும்
கட்டழகியிதழுங் கண்டானேபுடவையிலே
இனிக்காணவகையில்லையே கட்டழகிசீர்வடிவை

பார்க்கவகையிலேயே பாவையழகியரை
சாந்துக்கழித்தியரை சந்தனப்பூமேனியரை
குங்குமமொத்தவொரு கொம்பேரிடையாளை
அவள்-கட்டாணிவார்த்தைகளுங் கைநீட்டிபேசுவதும்
பார்க்கவகையிலேயே பாவையழகியரை
இன்னமொருக்காலும் இனிகாணப்போறேனே
எத்தனைநாள்செல்லுமோ இளங்கொடியைநான்காண
மாதரையான்பிரிய வைத்ததீர்மகாதேவா
கோதையரையான்பிரிய கொடுமைவைத்தீர்ஈஸ்பரரே
இவளைப்பிரிந்திருக்க என்னகுறைசெய்தேனே
தேவியரைத்தானினைந்து சிந்தைமிகக்கலங்கி
ஆனந்தவாழ்மார்பன் அழச்சுனையிறங்கி
கொற்றவர்கள்கோமான குளித்துக்கரையேறி
ஈரங்களைந்து இரைசேர்ந்தபட்டுடுத்தி
துவட்டங்கொண்டு துவட்டியந்தஇந்திரனும்
அணந்தம்பணிபூண்டு ஆனந்தவாழ்மார்பன்
நாணயப்பணிதிகளை நாய்கருந்தான்பூட்டி
தென்மதுரைநாட்டான் திருநீற்றுக்காப்பணிந்து
சிந்தித்துமின்று சிவனையடிபணிந்து
சந்தனங்கொண்டணிந்து தங்கத்திருமேனியெல்லாம்
குங்குமங்கொண்டணிந்து கொற்றவருந்தான்திமிறி
மாணிக்கப்பச்சைவடம் மன்னவன்வரிந்துடுத்தி
மாதாவின்பாதத்தை வணங்கவேவேண்டுமென்று

புலந்திரன் தாயாரிடம் வந்துசேர்ந்தது

சிங்காரத்தோட்டம்விட்டுத் தென்னரசுநாட்டானும்
சித்திரவீதிகளும் தெருவும்பலகடந்து
மாதாகொலுவுக்கு மண்டபத்தின்முன்னேவந்து
மாதாவின்கொலுவை வலமாகச்சுற்றிவந்து
மூக்கால்வலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டு
மாணிக்கப்பொற்பீடம் மன்னவனும்வீற்றிருந்தான்
அமர்ந்தார்கொலுவில் லல்லித்திருமகனும்
அப்போ-சோலைமலருடைய சொக்கநாதர்கோவிலிலே
என்னுயிர்ச்சின்ன மெங்குமேதான்முழங்க
நாகசுரம்பதினெட்டும் கவுரிகளும்மின்றாத
ஊதினசின்னங்க ளுத்தமியாள்தொனிகேட்டு
வடியநேரமாச்சுதே வேந்தர்வரக்காணேமே
கர்ணரறிந்தாரோ காவலாக்கண்டாரோ
லாலல்கடுந்திரளால் நூற்றொருவர்கண்டாரோ
மாலைமுடியானை வதைசெய்தாராமாகில்

நான்மாளும்படியொழிய மண்ணிலிருப்பதில்லை
பஞ்சவர்க்கென்னசெல்வேன் அருச்சுனருக்கென்னசொல்வேன்
அங்கவருக்கென்னசொல்வேன் அர்ச்சுனருக்கென்னசொல்வேன்
சிந்தையிலேயெண்ணிச் செங்கண்ணுள்முத்துதிர்த்தாள்

புலந்திரனைத் தாயார் கண்டது.

தட்சணமேகெவுளியது சாற்றிட்டுத்தேன்மொழிக்கு
பூவணையைவிட்டிறங்கி பொன்மதுரைநாடாளும்
செம்பொன்கதவைத் திறந்தந்தப்பொற்கொடியும்
மைந்தன்கொலுவிருக்கு மண்டபத்திற்போய்ப்புகுந்தாள்
மைந்தன்புலந்திரனை வளநாடிதான்பார்த்தாள்
அரைத்திருந்தசந்தனத்தை யள்ளியறைந்ததுபோல்
வற்றிக்கிடந்ததொரு வருள்பெரியகாவேரி
முட்டப்பெருகி கரைபுரண்டுவந்தாப்போல்
பூரித்திருதோளும் பொன்னுபரணமின்ன
சந்தோஷங்கொண்டு தையல்வருகையிலே
மாதாவரவுகண்டு மன்னன்புலந்திரனும்
சிங்காதனத்தைவிட்டுகீழேகுதித்திறங்கி
இந்திருமப்போது எதிரேநயந்துவந்து
பூவும்புதுமலரும் பொன்னருகுமட்சதையும்
மாதாவின்பாதம் மலர்தூவிதெண்டனிட்டார்
வந்துபணிந்தவரை வாழ்த்தியெடுத்தணைத்து
வாழ்வீர்வடத்திடுவீர் மண்ணூழிகாலமட்டும்
கிற்பீரனிலேதரிப்பீர் நீராசையாண்டிடுவீர்
கற்பதித்ததூணதுபோல் கலங்காதரசாள்வீர்
எனனைப்பெறுவீர் எதித்தார்முடிபெறுவீர்
பிள்ளைபெறுவீர் பெருமாள்பதம்பெறுவீர்
அத்திபுரமாள அரசுதனைப்பெற்றிடுவீர்
மதுரைநகராளுதற்கு மைந்தரைப்பெற்றிடுவீர்
காரிலழயாள்மாது கலந்தாரிகோட்டையிலே
மைந்தரைப்பெறுவதற்கு மனங்குளிரவாழ்த்தினள்
ஆசனம்போட்டார்கள் அங்கிருக்கும்தாதியர்கள்
இட்டதொருஆசனத்தி லிந்திரும்வீற்றிருந்தார்
மைந்தர்புலந்திரரே வளநாடிதான்பார்த்து
உச்சியிலேதானிருந்து உள்ளங்கால்பரியந்தம்
பார்த்தாள்பலகாலும பார்த்திபன்தன்மகனை
போனபுதுமைகளைப் புகழ்வீர்திருமகனே
தேவிதன்னரண்மனைக்கு சென்றமொழியுமில்லை
குங்குமங்கதம்பம குலைந்துகருக்கவில்லை
போய்வந்தேனென்று பொய்யுரைத்தீர்கோமானே
எங்கிருந்துவந்தீர் இளையதுகோமானே

எத்தூரஞ்சென்று எவ்விடத்தில்பள்ளிகொண்டீர்
என்னஅவர்கேட்க எடுத்துரைப்பார்இந்திரனார்
போய்வந்தேனென்னாச்சி பொய்கைதனில்நீராடி
புட்பமலரெடுத்துப் போற்றியடிபணியவந்தேன்
உள்ளத்தைத்தானுரைத்தான் உத்தமசிகாமணியும்
மலர்குழலாள்மாது மயிலணையாளேதுரைப்பாள்
நீர்போனபுதுமைகளும் பொற்கொடியைக்கண்டதுவும்
ஆனந்தவாழ்மார்பன் அரசாளும்தன்மகளும்
வாசற்புதுமைகளும் வைத்திருக்குங்காவல்களும்
எதுரொருவரில்லாம லிராச்சியத்தையாள்கிறதும்
உத்தமர்கள்பாண்டவரை ஒட்டியரசாள்கிறதும்
கட்டழகிதம்முடனே கைகலந்தபாவனைப்போல்
ஒன்றுமொளியாம லுத்தமனேசொல்லுமென்றாள்
என்னாணைதம்பி எனக்கறியச்சொல்லுமென்றாள்
ஆனாலொளியாமல் ஆச்சியரேசொல்லுகிறேன்
ஆணைவிடுவென்று ஆச்சியரைதெண்டனிட்டான்
ஆணைவிடுவதில்லை அருளாளாசொல்லுமென்றாள்
தென்றடியாதினத்தில் சிறுவனும்வீற்றிருந்து
மாதாவின்முன்னாக மன்னவனுமேதுசொல்வான்
உங்களை-ஆருயிரவரென்னு மனுதிரளாம்பாண்டியற்கு
பொன்னின்மலைநாடாளும் பேரெழுதியைவருக்கும
வையகமுழுதாளுகிற மாமிமார்தங்க தலைக்கும்
தெண்டனிட்ட விண்ணப்பம் தெரிவிப்பீர்மன்னவனே
என்று-தென்னார்கருங்குழாள் தெரிவித்தாள்யாவருக்கும்
அந்த-மாதுவிடைகொடுக்க வநதேன்காணாச்சியரே
ஆகாயவான்புரவி யலர்தாளாயெங்கேயென்றாள்
பொன்னுமணியழகன் புலந்திரனுமேதுசொல்வான்
பூங்காவனந்தனிலே புரவியைவிட்டேனென்றான்
அரசாளும்நாயகியா ளல்லியருந்தான்கேட்டு
மாதுகருங்குழலாள் மலர்க்காவில்போய்ப்புகுந்து
வான்புரவிகைபிடித்து வைகைவளநாடியரும்
கடிவாளங்கைபிடித்து கட்டழகியல்லியம்மாள்
தேவேந்திரனாரைத் தெரிசித்துபெண்மயிலும்
நீர்-வரவிட்டகாரியங்கள் நிறைவேற்றித்தீர்ந்ததுகாண்
புரவிவருகுதுகாண் புண்ணியரேயென்றுசொல்லி
கண்டுகொள்ளுமென்றுசொலலி கயற்கண்ணாள்தெண்டனிட்டாள்
ஆகாயமாயெழும்பி பறந்ததுகாணப்புரவி
வணங்கியெழுந்திருந்து வண்டார்குழலாளும
மைந்தனிருக்கிறதோர் மண்டபத்துட்போய்ப்புகுந்து
பொற்றளிகையிட்டுப் பறந்ததுகாணப்புரவி

இணைப்பாருமண்டபத்தில் இருந்தாரிருவருமாய்
ஆணையெல்லாம்விட்டேன்காண் ஆணந்தவாழ்மார்பா
என்றுமிகக்குளிர்ந்து இருந்தார்கள்மதுரையிலே

கலந்தாரியைத் தாதிமார்கண்டது.

அப்படியாயிருந்த ஆனதொருநாளையிலே
மற்றுநாளானபின்பு மாதுகருங்குழலாள்
கருநீலப்பூங்குழலாள் கலந்தாரிநாயகமும்
தாமக்கருங்குழலாள் தன்னுடையதாதியரை
பேர்சொல்லித்தானழைத்தாள் பேடைமலர்க்கண்ணாளும்
அசந்துநித்திரைபோய்விட்டாளவர்மருமகளும்
அத்தைமகன்மேல்நினைவாய் அசந்துநித்திரைபோகிறாளாம்
அந்நேரந்தாதியர்கள் அலண்டுமெழுந்திருந்தார்
தங்களுக்குள்ளாகத் தையலர்களவிசாரமிட்டு
முந்தியெழுந்திருந்து முருகுழல்மாரோடிவந்தார்
நம்மையெல்லாந்தட்டி நாயகியாளெழுப்பிடுவாள்
மாதுக்குநித்திரைகள் வந்தவாறெவ்வாறு
என்றுமனந்தளர்ந்து ஏந்திழைமார்வந்துநின்று
செம்பொன்கதவருகில் தேன்மொழிமார்வந்துநின்று
வாளேந்திகைதனிலே மயிலனைமார்யாவர்களும்
பாவையருகில்வந்து பள்ளியறைபோய்ப்புகுந்து
எறிட்டுபார்த்தார்க ளிளங்கொடியாள்சீர்வடிவை
ஆடையவிழ்ந்தது அறியாள்பெண்கொடியும்
ஆபரணங்கலைந்ததுவும் ஆரணங்குதானறியாள்
உற்றுப்பார்த்தார்கள் ஒளிவுடையாள்தன்வடிவை
சந்தனங்கள்பூசித் சரிந்துஇருந்ததுகாண்
வகைவகையாய்ப்பூச்சரங்கள் வந்தவாறெவ்வாறு
இருவர்பள்ளிகொண்டதுபோ லிருக்குதுகாணமைந்தர்களே
இறைத்துமிருக்குதுகா ணெங்கொடியும்பூச்சரங்கள்
அடைக்காய்களித்தனைறு லரைப்பிடிக்கமாயிருக்கும்
முழுபடிக்கமாய்நிறைந்து முழுதலைக்குவழிந்தோட
வண்டார்குழலாட்கு வாசனைகள்மிஞ்சுதுகாண்
இந்நாட்டுவாசனைக ளேந்திழையேயில்லையது
இந்திரலோகத்திற்கு எட்டுதேவாசனைகள்
மன்னா திருமகனார் வநதாரோவிஜையனுமே
அரசாளுமநாயகியா ளல்லிவரவிட்டாளோ
ஆகாயநதானிருந்து அநதரமாய்க்குதித்தாரோ
கற்கோட்டைமுதத்திரையுங கர்ணனதுகாவலிலே
எப்படிக்குவநதாரோ வென்றுவிசாரமிட்டு
தங்களுக்குள்ளாகத தையலமார்விசனமிட்டு

தாமக்குழலாளைத் தட்டியெழுப்பவென்றாள்
இந்திரன்மேற்சிந்தையினா லெழுந்திருக்கப்போவதில்லை
இதுவேயல்லாம லியாதொன்றுந்தானறியாள்
தாதியர்களெல்லாரும் தையலரைப்பார்த்திருந்தார்
குளிர்சந்துசாந்தனமுங் குளிக்கவரியிற்றெளித்து
ஈரெட்டுவெண்கவரி யிசைந்தவெண்சாமரங்கள்
காரிழைமார்தன்கரத்தால் கவரிபரிமாறினார்கள்
மெல்லிநல்லாள்மதிமுகத்தில் களைதெளிந்துகண்விழித்தாள்
சுற்றிநிறைந்திருக்குஞ் தோழிமார்தாதியர்கள்
அத்தனைபேரையு மரிவையர்கள்கண்காட்ட
மெல்லியர்களெல்லாம் வெளியேமறைந்தார்கள்
தாய்போல்வளர்த்தெடுத்த தாதிதனித்திருந்தாள்
தனித்திருந்ததாதியவள் தனியாகவந்துநின்று
மாதுதனையெடுத்து மடிமேலேதான்வளர்த்தி
ஆரங்கள்தான்திருத்தி அழகுபணிதான்பூட்டி
கோவைகள்தான்திருத்தி குழற்கோதிக்கொம்பனைக்கு
வாளிகள்தான்திருத்தி மயிற்கோதிக்கொம்பனைக்கு
மெத்தனவேகோபமதாய் மெல்லியரைத்தான்பார்த்து
கண்கள்சிவப்புடனே கன்னியவளேதுசொல்வாள்
வர்னப்பசுங்கிளியே வாடாதசெண்பகமே
வாடியிருப்பதென்ன மாதுதிருமுகங்கள்
சீரிருப்பதென்ன சின்னத்திருமுகங்கள்
அலர்ந்தசெந்தாமரைப்போ லரிவையரேயுன்முகங்கள்
மலர்ந்திருககுநெடுநாள் வாடியிருக்கக்காரணமேன்
குங்குமம்பூசிக் குலைந்துமிருக்குதுகாண்
வகைவகையாய்பூச்சரங்கள் வந்தவாரெவ்வாறு
பங்கிட்டுக்கொளளுவோம் பாங்கிமாரெலலவரும்
மெத்தநலங்கியே மெல்லியரேயிருப்பதென்ன
அடைக்காய்தின்றால் அரைப்படிக்கமாயிருக்கும்
மேலாய்வழிந்ததுகாண் மெலலியரேதம்பலங்கள்
வண்டார்கருங்குழலே வாசனைகள்மிஞ்சுகுது
இந்தநாட்டுவாசனைக ளிளங்கோடியேயலலவிது
வானவர்லோகத்தில் வந்ததொருவாசனைகள்
காரிழையுனனைக கலியாணம்பண்ணுகையில்
தாலியுடன்மாலையுஞ் சந்தனமுங்குங்குமமும்
மந்தாரக்கூறையும மைகளுடனருணசிவப்பும்
வரவிட்டார்கண்டீரோ வணடார்குழலாளே
அந்தப்பரிமளங்கள் ஆரணங்கேவந்ததுகாண்
மனனர்திருமகனா வந்தவுரவாக
அரசாளும்நாயகியா ளலலிவ்வேகியல்லோ

பூதம்பணிசெய்யும் பொற்கொடியாள்வாசலிலே
மேகத்திலேற்றி மெல்லிவரவிட்டாளோ
ஆருமறியாம லருச்சுனனார்புத்திரரும்
மாலைமுடியாளே மைத்துனனும்வந்தாரோ
மைத்துனனார்வந்த வரலாற்றைச்சொல்லுமென்றாள்
கட்டார்கருங்குழலாள் கலந்தாரிதான்கேட்டு
கண்கள்சிவந்து காந்தாளந்தானாகி
அவ்வலரிக்கண்கள்ரெண்டுஞ் செவ்வலரிபூத்ததுபோல்

கலந்தாரி தாதிகளுக்குச் சொல்லுதல்.

தாமக்குழலாள் தாதிமுகம்பார்த்து
ஏண்டிநீதாதிகளே யிடும்புகளைப்பேசவந்தாய்
மதுரைஅரசாளும் மன்னவரிருக்கையிலே
என்மைத்துனனாரிங்கே வருவதுமெவ்வாறு
கற்கோட்டைமுத்திரையும் கர்ணரதுகாவல்களும்
ஆணையுந்தான்கடந்து இவ்விடம்வருவதுண்டோ
ஐயாயிரம்தோழி யருகிலிருந்தீர்கள்
காரிழையாள்தாதிகளே கண்கெட்டுப்போனீரோ
இச்சிறையில்யான்காக்க எல்லோருஞ்சொலவீரோ
வன்சிறையில்காக்கவைத்தால் மாதரசேசொல்வீரோ
தாதியர்க்கெளிதாகத் தையலரும்நானிருந்தேன்
வேண்டேனினிச்சென்மம் வெறுத்தேன்காண்மங்கையரே
மாண்டாலுஞ்சேதமில்லை வண்டார்குழலியரே
ஆரவிளமுலையா ளறைந்துகொண்டுதானழுதாள்
தாமக்கருங்குழலை தாதியருஞ்தோழியரும
செங்கமலநாயகியாள் சேரவேயோடிவந்து
காசிவளகர்ணர் கட்டழகர்தான்கேட்டால்
ஆக்கினைகள்வந்துவிடு மரிவையிளமயிலே
அறியாமற்சொன்னோ மரசேபொருத்தருள்வீர்
மாதின்திருவடிக்கே வந்துமிகத்தெண்டனிட்டார்
தாதியவள்தணிக்கத் தணித்திருந்தாள்தையலரும்
கொமபேரிடையாளுங் கோபந்தணிந்தபின்பு
போனகத்தாதியரும பொற்கொடியுமோடிவந்து
போசனங்களாசுதென்று பொற்கொடியுந்தானழைத்தாள்
பூவணையைவிட்டிறங்கிப் புட்பமலரணையாள்
வாசமுமீந்து மலர்க்குழலாள்பூவுதற
வாவையருமப்போது பற்கொம்புதானெடுத்து
பல்விளக்கிநாவழித்துப் பவளவாய்கொப்பளித்து
ஸ்நானங்களசெய்து சந்திசெபந்தானமுடித்து
மாணிக்கமண்டபத்தில் மங்கையருமவீற்றிருந்தாள்
தாதியர்களெல்லாந் தையலற்குமுன்னேவந்து

பொன் துகிலுடுத்திப் பின்புறமாய்வந்துநின்று
மாணிக்கச்சீப்பாலே வாரிமயிர்கொண்டையிட்டு
பரிமளப்புட்பங்கள் பைங்கிளியாள்பூங்குழலில்
மருக்கொழுந்துமாலைகள் வைத்துமுடித்தார்கள்
புட்பமலராட்குப் பூமுடித்தானபின்பு
புலிகள்முக்காலிவைத்துப் பொற்றளிகைதானும்வைத்து
மற்றுமுள்ளகாய்கறிகள் வரிசையுடனேவைத்து
பொறித்தபொரிக்கறியும் பொனபோல்சிறுபருப்பும்
பத்துவகைக்கறியும் பதினெட்டுப்பச்சடியும்
அன்பானபச்சடியும் அடைவாய்ப்பரிமாறி
புத்துருக்குநெய்யும் புதுமையுடனுனவார்த்து
பொனபோன்றசெம்பிலே வெநீருந்தான்வார்த்து
உண்ணுமென்றுசொல்லி உபசரணைசெய்யலுற்றார்
அந்தவடிசல் அமுதுண்டபிற்பாடு
முடிபூவுசந்தனமும் மிகவாரிவெள்ளிலையும்
அடைக்காயுந்தின்று ஆனந்தவாழ்மாரி
பூசித்துத்தானிருந்தாள் புருடனைத்தினந்தோறும்

கலந்தாரிக்கு கெற்பமுண்டானது.

பொன்னுமணியழகர் புலந்திரனார்தேவியரும்
மூனைவீரர்தேவியர்க்கு மூன்றுதிங்களாச்சுது
வண்டார்குழலார்க்கு மைந்தனைத்தோன்றிற்று
இட்டபடுக்கையிலே எழுந்திருக்கத்தள்ளாது
உற்றுற்றுப்பார்த்து ஒருபோதுஉண்டிருந்தாள்
தின்றுளிலையடைக்காய் தேனார்குழலாளும்
அம்மானாராடளாம் அருங்குழல்பந்தாடள்
பந்துபிடித்தறியாள் பள்ளாங்குழியாடல்
காரிழையாள்மாதுக்கு கழுத்துகள்சேர்ந்ததுகாண்
குழிசாலுகள்போலே குலைவயிறுபெருத்தது
திருவயிறுமேனியுஞ் சீர்பெறவேதான்செழிக்க

கலந்தாரி கெற்பமடைந்ததைத் தாதிமார் காண்கிறது.

தாய்போல்வளர்த்தெடுத்த தாதியவள்பார்த்து
மாதுமுகம்நோக்கி மங்கையெடுத்துரைப்பாள்
வண்டார்குழலியரே மைந்தனைத்தோன்றுதுகாண்
மாலைக்குழலாளே மைந்தன்வந்தவாரேது
கழுத்தடிகள்நேர்ந்து கன்னிமுகம்மாறுபட்டு
இளைப்புந்தளிப்புமாக ஏந்திழையேதோன்றுவதேன்
மன்னன்திருமகனார் வந்தாரோவுன்னிடத்தில்
அரசாளும்பூமுடியா ளல்லிவரவிட்டாளோ
மெத்தவறிவுடையாள் மெல்லிவரவிட்டாளோ

மாலையணிமார்பன் மைத்துனனார்வந்தாரோ
வேறுபட்டமாதரசே மெல்லியரேயுரையுமென்றாள்

கலந்தாரி தாதிகளைத் தூறுகிறது.

அவ்வசனங்கேட்டு ஆரவிளமுலையாள்
ஆறுதகோபமது ஆற்றமுடிபோகாமல்
இந்தஇடும்புகளை என்னுடனே சொல்லவந்தீர்
முன்னொருவம்புதனை மொய்குழலேசொன்னீர்கள்
இன்னம்இடும்புகளை என்னுடனேசொல்லுகிறீர்
காசிவளர்பூமுடியார் கர்ணருக்கறிக்கையிட்டு
ஆக்கினைசெய்யாமல் ஆரணங்கேநானிருந்தேன்
ஒருவரறிந்தால் உலகமெல்லாந்தானறியும
இந்தநாள்வரையில் இருந்துவளர்ந்தோமே
கூடியிருந்தீரே கொம்பனைமாரெல்லோரும்
இதுநடுவில்வந்து எவரழித்தாரெந்தனையும்
கொல்லவினைசெய்கிறாய் கொம்மேரிடையாளே
இந்தச்சிறைவைத்ததினால் எல்லோருஞ்சொல்லீரோ
தாதியற்குமேளிதமாய்த் தையலரேதானானேன்
என்றுமிகத்துக்கிது ஏந்திழையாள்சொல்லுகையில்
தாதியர்களெல்லோரும் தையலண்டைஓடிவந்து
சுத்திநிற்கும்பெண்களுக்குஞ் சூழ்ந்திருக்குந்தாதிகட்கும்
செங்கமலநாயகியாள் சேரவேஓடிவந்து
காசினியோர்புகழும் கர்ணர்வரும்வேளையிலே
ஆரவிளமுலையாள் அழுதகுரல்கேட்டால்
நாக்கோடுமூக்கறுப்பார் நல்லசெவிதானறுப்பார்
என்று-மாதுதிருவடிக்கு வந்திறங்கித்தெண்டனிட்டு
தாமக்கருங்குழலாள் தாதியருங்கூறுவாள்
மாதேசமறைத்தாலும் மைந்தனொளித்திடுமோ
சூதொளிக்கப்போகாது துன்னுங்கருங்குழலே
இன்னமொருதினங்கள் ஏந்திழையேசென்றாக்கால்
தானேவெளியாகும் தங்கக்குழலாளே
நாங்கள்-அறியாமறசொன்னோமே அரசேபொருத்தருள்வீர்
என்று-மாதுதிருவடிககு மனதிறங்கித்தெண்டனிட்டாள்
தாதியவளதணிக்கத் தனித்திருந்தாள்தையலரும்

கர்ணன் வேட்டைக்குப் போய்வருவது.

காசிவளநாடாளும் கர்ணனதிகாரன்
வேட்டைக்குத்தான்போய் மீண்டுவருகையிலே
விடாய்த்துவெருமண்டபத்தில் வீற்றிருந்தார்கர்ணரவர்
சிந்துகவிகேட்டிருந்தார் சீர்கர்ணவீரியரும்
அந்தவழிதனிலே புல்லியம்மாள்தூதுவனும்

ஓலைகொண்டுபோகிறான் உத்தமியாள் தூதுவனும்
ஆனந்தமாகவே ஆசாரச்சாவடியில்
மேளங்கள் தாளங்கள் விருதுபலமுழங்கப்
அன்னவரும்வழிதனிலே அதிகர்ணர்வீற்றிருந்தார்
மண்டபத்தின்னருகாக மதுரைநகர் தூதனவன்

அல்லியுடையதூதன் கர்ணரைக்காண்கிறது.

வந்தங்கேநின்று மன்னவனைத்தான்பார்த்து
ஆரோதெரியாது ஆதித்தன்சந்திரன்போல்
ஆரென்றுபார்ப்போமென்று அருகினில்வந்துநின்று
கர்ணரென்றுதானறிந்து கையெடுத்துத்தெண்டனிட்டான்
அடிபணிந்ததூதுவனை யாரென்றுகேட்கலுற்றார்
ஆறாயிரவரென்னும் அதிவீரபாண்டியர்கள்
அணிமதுரைநாட்டுக்கு அரசமன்னர்தூதுவன்யான்
பொன்னுமணியழகன் புலந்திரற்குதூதுவன்யான்
அவருக்குநீலைரயரல்லோ அதனாலேகுற்றமுண்டோ
மன்னர்திருவடிக்கு மறுபடியுந்தெண்டனிட்டான்
மாணிக்கத்தூண்மறைவில் மன்னனும்போயொளித்தான்

கர்னர்தூதனைக்கண்டு புலந்திரன் செய்திகேட்பது.

காசிவளநாடாளும் கர்ணருந்தான்வாழ்த்தி
தூதன்றனைப்பார்த்து சொல்லுவாரொருவசனம்
என்னைப்போல்மீறியே இந்திரனும்வளர்ந்தானே
நாடாளக்கற்றானே நாமக்குலவிளக்கு
செம்பொன்மணிமுடியான் செங்கோல்பிடித்தானே
இப்படிக்குமீறியே இந்திரனும்வளர்ந்திருக்க
வண்டார்குழலாளும் வளர்ந்திருந்துசமைந்திருக்க
திங்களொருமுறைதான் தேன்மொழியாள்முழுகுகிறாள்
பேடைமலர்க்கண்ணாள் பிள்ளைபெருங்காலம
சாவலிலேவைத்துயான் கார்க்கிறேன்கண்மணியை
மாலைமுடியாளும வரவிட்டாலாகாதோ

கர்ணருக்குத் தூதன்சொல்வது.

என்றுரைக்கக்கர்ணர் எடுத்துரைப்பான்தூதனவன்
மதுரையறுகாதம் மன்னவனுமாளுகிறான்
மற்றுமுள்ளநாடனைத்தும் மன்னனரசாளுகிறான்
அரசாளும்நாயகியாள் அல்லிப்பெருமாளும்
காவலர்கள்பாண்டவர்கள் காடுறைந்தநாள்முதலாய்
மாலைமுடிபாண்டவர்கள் வனவாசம்போனமுதல்
வண்டார்குழலாளும் மயிர்விரித்தநாள்முதலாய்
மாதமொருமுறைதான் வருவானகொலுமுகத்தில்

என்றுரைக்கதூதனவன் எடுத்துரைப்பார்கர்ணரவர்
நல்லதுதூதுவனே நான்றங்குமண்டபத்தில்
போஜனமாகுதுகாண் பொருந்தியமுதுண்டு
நடவுங்காண்தூதாவென்று ராஜமன்னர்சொல்லுகையில்
அவ்வசனங்கேட்டு அத்தூதனேதுசொல்வான்
உண்டுபசியாறிவந்தேன் உங்கள்கிருபையினல்
வெகுநேரஞ்சென்றாலே மெல்லியருங்கோபிப்பாள்
மாதினிடகோபமதை மன்னவரேநீரறிவீர்
போகவிடைதாருமென்று புகழ்வீரனதெண்டனிட்டான்

கர்ணர் தூதனுக்கு வெகுமதிசெய்தனுப்பியது.

வந்துபணிந்ததொரு மாதினதுதூதனுக்கு
உத்தரீயப்பட்டுகளும் உடுக்கநல்லஆடைதந்தார்
போஜனங்கள்தேவையில்லை புகழ்வீராவெந்தனுக்கு
வாய்த்தயிலைச்சுருளும் வர்னப்பழக்காயும்
காவலனுமவீரியனும் கைநிறையஅள்ளியிட்டான்
போகவிடைபெற்றுப் போய்விட்டான்தூதனவன்

கர்ணன் கலந்தாரி கோட்டைக்கு வருகிறது.

அப்போதுகரணர் ஆலோசனைபுரிந்து
காரிழையாள்மாதுநல்லாள் கலந்தாரிநாயகிக்கு
அவர்மைத்துனனார்மீறி வளர்ந்தவருமைகளும்
அறிவையற்குசொல்லி அறிக்கையிடவேண்டுமென்று
தன்மனதுக்குள்ளே தார்வேந்தர்தானினைத்து
மேளவகைகளும் விருதுகள்கையமர்த்தி
விருதுபலமுழங்க வீதிபுலபட்டார்
மாதினதுகோட்டைக்கு மன்னவரும்போய்ப்புகுந்தார்
வாசற்பதினெட்டும் வைத்திருக்குமுத்திரையும்
சோரவேதானறிந்து செம்பொன்மணிமுடியான்
உத்தமனும்வீரியனும் உட்கட்டிற்போய்புகுந்தான்
காலுக்குநீர்வார்த்தார் காரிழைமார்தாதிமார்கள்
பாவையழகியரும் பட்டாலடிதுவட்டி
மாணிக்கஆசனங்கள் மன்னருக்குத்தான்போட்டார்
இட்டதொருஆசனததில் இன்பமுடன்வீற்றிருந்தார்
வந்தஇளைப்பாற மன்னவர்திருமுகமும்
கவரிபணிமாறினர் கட்டழகிதாதியர்கள்

கர்ணர் கலநதாரியைத தாதிகளைவிட்டழைப்பது

தமக்குகவறியிட்ட தாதிமுகம்நோக்கி
அரசாளும்நாயகியாள் அலலிதிருமகனர்
போர்க்கஞ்சாவீரன் புலந்திரனர்தேவியரை

காரிழையாள்மாது கலந்தாரிநாயகத்தை
ஆரமுல்லையாள்மாதை அழைத்தோடிவாருமென்று
தன்கையாள்கவுரியை தானொருத்திகைகொடுத்து
மங்கையாள்பள்ளிகொண்ட மண்டபத்திற்போய்புகுந்தான்
திருவேவுருவழகே செல்வப்பெருந்தேவி
அத்திநகருடைய அலங்காரப்பூஷணமே
அன்னமேயும்முடைய அம்மானும்வந்தார்காண்
மங்கையரேயும்முடைய மாமனும்வந்தார்காண்
காசிநகராளும் கர்ணரிங்கேவந்தார்காண்
மாலைமுடிமார்பன மண்டபத்தில்வந்துசென்று
உம்மையழைத்துவர உத்திரவுசொன்னார்காண

கலந்தாரி கர்ணரைக் காண்கிறது.

அவ்வசனங்கேட்டு அலங்காரப்பூஷணியாள்
தாமக்கருங்குழலாள் தாதிகளைதோளூன்றி
காரிழையாள்மாது கைலாகுதான்கொடுக்க
மெத்தெனவேதானடந்து வேல்புருவங்கண்ணாளும்
தன்மாமன்வந்திருக்கும் மண்டலஞ்சென்றேறினார்
மாமனார்பாதமது வணங்கியேதெண்டனிட்டாள்
வந்துபணிந்ததொரு மருமகளைத்தான்பார்த்து
வாழ்வாய்வளருவாய் மாயனடிபெறுவாய்
மகாலட்சுமிபோல மங்கிலியம்முண்டாக
மதுரையெல்லாமாள்வதற்கு மைந்தனைப்பெற்றிடுவாய்
வாழ்த்திவிடைகொடுக்க மாதுகருங்குழலாள்

கர்ணர் கலந்தாரியைக்கேட்டது.

காசிவளநாடாளும் கர்ணரவர்தான்பார்த்து
மாதுமையாள்தானௌிக்க மன்னவருமேதுரைப்பார்
நாணயமறிந்தாயோ நாமக்குலவிளக்கே
வெட்கமறிந்தாயோ வேல்புருவங்கண்ணாளே
நாணயமும்வெட்கமும் நாயகமேகற்றாயோ
நீயேயறிந்தாயோ நேரிழையேபுத்திகளை
காரிழையேயுந்தனுக்கு கறபித்தாயாரோதான்
உன்மைதுனனார்மீறி வளர்ந்துஇருக்கிறார்
நாடாளக்கற்றானம நமதுபுலந்திரனும
செம்பொன்மணிமுடித்து செங்கோல்பிடித்தானும்
என்னைபோலமீறி இந்திரனுமவளர்ந்தானும
வாராதிருந்தானே வளவிலொருபயணம்
வண்டார்குழலாளை வாழாபெண்ணாக்கிவைத்தான்
ஆனந்தமார்பனை ஆள்விட்டுவரவழைத்து
விஜையன்திருமகனை விலங்குகள்போடவைப்பேன்

என்றுமிவருரைக்க எந்திழையாள் தான்பேசாள்
எறிட்டுப்பார்த்தாரா மிந்திரனார்தேவியரை
காலைத்தொடங்கியே கரியகுழலழகை
பார்த்தார்பலகாலும் பார்த்தான்திருமகளை
தருமமுடியழகன் றாதியரைத்தானழைத்து
இவள்-மையெழுதுங்கண்ணாள் மலர்சொரியுஞ்செவ்வாயாள்
சந்திரன்உதயம்போல் தளும்புகிறதிருமுகங்கள
சிறியிருப்பதென்ன சென்பகபூமேனியெல்லாம்
அலர்தாமரைபோல் ஆரணங்குதிருமுகங்கள்
மலர்ந்ததிருமுகங்கள் வாடியிருப்பதென்ள
தாமக்குழலாரே தாதிகளேசொல்லுமென்றாள்
ஆடைகுறைவாச்சோ ஐயர்மருமகட்கு
ஆரமுலையாட்கு ஆபரணங்குறைச்சலுண்டோ
எதனாலேவாடினாள் எங்கள்குலவிளக்கு
மதுரைக்குப்போக மங்கையரும்நினைத்தாலே
மைத்துனரைத்தானும் மாதுநினைத்ததுண்டோ
வண்டணியுங்குழலாள் வாடியிருப்பதென்ன
இதுவென்னகருமம் எனக்கரியக்கூறுமென்றார்
தாமக்கருங்குழலாள் தாதியவளேதுசொல்வாள்
வேறொன்றுமில்லைஐயா வேந்தன்பெருமாளே
தாரார்குழலுடையாள் தலைநோகுதென்றுசொல்லி
உண்ணாதிருந்தாள்காண் ஒன்றிரண்டுநாளாச்சு
கர்ணரதுகேட்டு காரிழையேதாதிகளே
எந்தனுக்குச்சொல்லாமல!இருந்தகருமமென்ன
உங்களை-சிறையிலேவைத்திடுவேன் சீர்பாதமாற்றிவைப்பேன்
தலையைச்சிறைத்துநான் தாள்விலங்குபோட்டுவைப்பேன
என்றுஎறிட்டுப்பார்த்தாராம இந்திரனார்தேவியை
காலைதொடங்கியே கரிகுழலாளவாய்திறந்து
பார்த்துபலகாலும் பார்த்தனமருமகளை
தாய்போல்வளர்தெடுத்த தாதியரைத்தானழைத்து
வண்டார்குழலாட்கு மைந்தனராய்த்தோன்றுதுகாண்
பேடைமலாகணாட்கு புத்திரராய்த்தோன்றுதுகாண
மன்னர்தருமகனும வந்தானோஇவ்விடத்தில்
வாள்விஜயன்புத்திரனும வந்தானோவுறமாக
கற்கோட்டைமுத்திரையும காவலர்கள்விழித்திருக்க
ஆகாயமார்க்கத்தில அந்தரமாய்வந்தானோ
மாதுமணவாளன வந்தாரேசொல்லுமென
கர்ணரவர்கேட்கையிலே காரிழைமார்கூறுமார்
நூலார்கடுந்திரளார் நூற்றுவர்க்கும்பிள்ளையில்லை

மகாராசராசருக்கு மைந்தன்முதலில்லையே
ஆரைநீர்கண்டீர் அடையாளம்தான்பார்த்தீர்

கர்ணன் தாதிகளைக்கேட்டது.

நீர்கண்டகுறிப்பை கருத்துடனேசொல்லுமென்றார்
காசிலிவர்னன் கர்ணரவரேசொல்வார்
வண்டார்குழலாட்கு மைந்தனேதப்பாது
மாதுமணவாளன் வந்தகுறிகாணோமே
மதுரைதுரைமகனும் வந்ததுமில்லையென்று
ஏந்திழையேநீங்கள் என்மேலே ஆணையிட்டு
தாமக்கருங்குழல்மார் தாதியருமூப்பிகளும்
சேரவேவோடிவந்து சேயிழைமாரெல்லாம்
காசிலிவர்னர் கர்ணரேயும்மாணை
என்மேலேயாணை ஒருகுறியும்நாமறியோம்

கர்ணர் தாதிகள்மேற் கோபித்தது.

காசிலிவர்னர் கர்ணருங்கண்சிவந்து
ஒற்றைப்பணிதந்திடும் உத்தரியப்பட்டுடுத்தி
ஆபரணமிட்டு அழகாகப்பட்டுடுத்தி
வைத்தேனேஉங்களை மங்கையற்குகாவலாய்
கொல்லுதற்குவைத்தேனோ கோதையிளங்கொடியே
ஆடையுங்களையுமென்றார் ஆபரணம்வாங்குமென்றார்
திரளானஆபரணஞ் சேரக்கழட்டுமென்றார்
பாவாடையோடே பைங்கிளிமார்நீங்கிருங்கள்
மாணிக்கப்பேழையிலே வைத்தேனேயுங்களைநான்
ஆக்கினைகளில்லையே அலங்காரன்பட்டணத்தில்
வாசல்பேரத்தனையும் வகையுரவேவெட்டிடுவேன்
சிந்துநாடாளுகிற தேத்தரசன்மன்மவனை
தோரணக்கழுவுதனில் சுந்தரனைப்போட்டிடுவேன்
உத்தமிமாருங்களை உடுதூண்டிபோட்டிடுவேன்
என்றுமிககோபித்து எறிபறந்துகண்சிவந்து
வாளையுருவிக்கொண்டு மன்னவர்புறப்பட்டார்
வாசற்படிகடந்து மன்னன்பெருமாளும்
மற்றொருநினைவால் மன்னவனுந்தானினைந்து
அவள்-ஆச்சியரைக்கேட்டு அறிந்துமேநாம்வருவோம்
என்றுவாளையுறையிலிட்டு மன்னரதிகர்ணர்

கர்ணர் கலந்தாரியின தாயாரைக்கேட்க வருகிறது.

கருணன்வருகையிலே காளையந்தபுத்திரன
அவன்சேனைபரிகலமுந் திரளுமணியுடனே

வந்துபணிந்ததொரு மகனையும்பாராமல்
கோபமுடனேயந்தக் கொற்றவனுந்தானடந்தார்
மாதினதுகோட்டையை மன்னவனுங்கிட்டிவந்தான்
துன்னுங்கருங்குழலாள் துற்சடையாளப்போது
மேளவகையும் விருந்துடனேமெல்லியரும்
கேளிக்கைபார்த்திருந்தாள் கிளிமொழியாள்தங்களுடன்
மாதின்கோட்டையை மன்னவருங்கிட்டிவந்தார்
தண்டிகையைவிட்டிறங்கித் தருமமுடியானும்
உத்தமனூர்வீரியனும் உட்கட்டிற்போய்புகுந்தார்
தாமக்கருங்குழலாள் தாதியெதிர்கண்டு
இவர்வந்ததொருகாரியம் யாதோதெரியாது
ஆலாத்திகாட்டாமல் அறிவையரேநாமிருந்தோம்
கானுக்குநீர்வார்த்துக் கட்டழகிதாதியர்கள்
பாவையழகியர்கள் பட்டாலடிதுவட்டி
கவரிபரிமாறினர் காரிழையாரப்போது
தனக்குக்கவுரியிட்ட தாதிமுகம்நோக்கி
துன்னுங்கருங்குழலாள் துற்சடையண்டைவந்து
அவ்வார்த்தைதான்கேட்டு அரிவையர்களோடிவந்து
துன்னங்கருங்குழலாள் துற்சடையண்டைவந்து
தெண்டனிட்டார்தாதிகள் தேனார்குழலாட்கு
எங்குவந்தாய்தாதி எனக்கறியக்கூறுமென்றாள்
கர்ணன்வந்தானென்று காரிழைமார்சொல்லுகையில்

கர்ணரைக்காண துற்சடைவருகிறது.

கர்ணன்வந்தாரென்றவுடன் கடுகிஎழுந்திருந்து
பட்டுபளபளென்ன பாடகக்கால்சோதிமின்ன
முத்துமிலுமினென்ன மோதிரக்கால்சோதிமின்ன
மாதுநடையசைந்து வந்தாளேமயில்போல
கர்ணரதுபாதமிதில் கட்டழகிதெண்டனிட்டாள்
வந்துபணிந்தவளை வாழ்த்தியந்தமன்னவனும்
ஆசனம்போட்டார்கள் அங்கிருந்ததாதியர்கள்
இட்டதொருஆசனத்தில் இருந்தாளிளங்கொடியும்
அங்கவளநட்டார் அதிகருணர்திருமுகத்தை
வாடியிருப்பதென்ன மன்னர்திருமுகங்கள்
சீறியிருப்பானேன் செண்பகப்பூமேனியெல்லாம்
அலர்ந்தசெந்தாமரைபோல் அணுணுவேவுந்திருமுகங்கள்
கருகியிருப்பதென்ன கர்ணர்பெருமானே
மானங்கொண்ட மன்னன்திரியோதிரன்
ஆடரவங்கொண்ட அரசன்திரியோதிரன்
இடும்பவனவனுன்னை யேடாகூடஞ்சொன்னானோ

என்னகருமமிது எனக்கரியச்சொல்லுமென்றாள்
என்றுமவள்கேட்க எடுத்துரைப்பார்மன்னவரும்

கர்ணர் துற்சடைக்குச் சொல்வது

எனக்கு-பத்தினியாள்சாபம் பலிப்பதற்குமுன்னாக
அரசாளும்நாயகியாள் அல்லித்திருமகனார்
போரஞ்சாமன்னன் புலந்திரவீரியனும்
இந்திரனார்தேவி என்னகதிபோனாளோ
தாமக்குழலாளென் தலைக்குவினைசெய்தாளோ
வேல்பொருந்தும்அல்லியம்மாள் வெட்டவினைசெய்தாளோ
என்றுஉரைக்ககர்ணர் எதுரைப்பாள்துற்சடையும்
மாதுநல்லாளிப்பொழுது வன்கொடுமைசெய்தாக்கால்
வேல்பொருந்தும்அல்லியம்மாள் வெட்டவினைசெய்தாளோ
நீர்-அத்திபுரத்தை அரசாண்டிருக்காமல்
நீர்-மாளுகிறகாரியமேன் மன்னன்பெருமாளே
என்னகாரியம் எனக்கரியச்சொல்லுமென்றாள்
காசிவளநாட்டார் கர்ணரவரேதுசொல்வார்
காரிழையாள்மாது கலந்தாரிநாயகிக்கு
பொல்லாதமசக்கைகள் பொருந்திற்றுபொற்கொடிக்கு
ஆகாதமசக்கை ஆரிழைக்குண்டாச்சு
வண்டார்குழலாட்கு மைந்தனைத்தோற்றுதுகாண்
மதுரைபெருமாளும் வந்ததுகாணேமே
என்னகருமமோ என்றாரேகர்ணரவர்
துன்னங்கருங்குழலாள் துற்சடையாள்கூறுவாள்
மாதுமணவாளன் வந்தால்வரவேணும்
உமதுமைந்தன்புலந்திரனார் மன்னவன்தான்வரவேணும்
மற்றுமொருமன்னவர் வருவாரோகாவலிலே
வாசப்படிதாண்டி வருவாரொருவருண்டோ
தாதியர்மாருங்களுக்கு தையலர்கள்சொல்லலையோ
தாதியரைக்கேட்கிலையோ தார்வேந்தாவென்றுரைத்தாள்
தங்கையவள்சொல்லுகையில் தனஞ்செயனார்கூறலுற்றார்
தாதியரையெல்லாம தனித்தனியேகேட்டுவிட்டேன
தாங்களொன்றுமறியோமென்று தன்மேலேயாணையிட்டார்
துன்னுங்கருங்குழலாள் துற்சடையுந்தான்கேட்டு
மாதுதிடுக்கிட்டு வயறுமொருகைபிசைந்து
இழந்தோமேநாமும் யிளங்கொடியையின்றேடே
ஆர்சொல்லுங்கேளானே அரவக்கொடிவேந்தன்
என்றுஆரவிளமுலையாள் அறைந்துகொண்டுதானழுதாள்

துற்சடையாள் கலந்தாரியைக்காணவருதல்

ஆரணங்குமவள்சேதி அறிந்துநான்வருவேனென்று
வேல்பொருவங்கண்ணாளும் வேந்தரைக்கையமர்த்தி
மன்னரைக்கையமர்த்தி மாதுவெளியில்வந்தாள்
தண்டிகைகொண்டுவந்தார் தாமக்குழலாட்கு
தாமக்குழலாளும் தண்டிகைமேலேறினாள்
வண்டார்குழலாளை மறைத்தார்கள்குடையதினால்
சுற்றிபிரம்படிக்க தோழியர்சூழ்ந்துவர
மாதினதுகோட்டையண்டை மங்கையரும்வந்துவிட்டாள்
வாசற்பதினெட்டு வைத்திருக்குமுத்திரையும்
சேரவேதான்திறந்து தேனார்குழலாளும்
தண்டிகைவிட்டிறங்கித் தையலந்ததுற்சடையாள்
ஓடமலர்க்கண்ணாளும் உட்கட்டிற்போய்புகுந்தாள்
தாமக்குழலியர்கள் தாதிகளெதிர்கண்டு
காலுக்குநீர்வார்த்துக் காரிகைமார்த்தாதியர்கள்
பாவையழகியரும் பட்டாலடிதுவட்டி
வந்துஇளைப்பாற வான்கவிரிவீசினார்கள்
மாணிக்கஆசனத்திலே மங்கையருமவீற்றிருந்தாள்
தாதிமுகம்நோக்கி தையலருமேதுசொல்வாள்
காரிகையாள்மாது கலந்தாரிநாயகத்தை
ஆரமுல்லையாளை அழைத்துவாவிங்கேயென்றாள்
தன்கையில்கவுரியைத் தானொருத்திகைகொடுத்து
வீசுங்கவுரிதனை வேறொருத்திகைகொடுத்து
மங்கையரும்பள்ளிகொண்ட மண்டபமேபோய்புகுந்து
அழகேதிருவுருவே அலங்காரப்பூஷணமே
அன்னமேசொர்னமே அமிர்தமடமானே
சாந்துகழுத்தியரே சந்தனபூமேனியரே
ஆரணங்கேஉமமுடைய ஆச்சியழைக்கிறாள்காண்
ஆச்சியென்றுசொல்லுகையில் அதிகமனமகிழ்ந்து
பூவணைவிட்டிறங்கிப் பொற்கொடியாள்நாயகமும்
மாதாவின்பாதமது வணங்கியேதெண்டனிட
வண்டார்குழலாள் மலரணையில்பூவெடுத்தாள்
தாமக்குழலாளும தையலரைத்தோளூன்றி
காரிகைமாதருக்குக் கைலகுதான்கொடுத்து
மெத்தனவேதானடந்து வேல்பொருதுங்கண்ணாளும்

துற்சடையாள் புத்திரியைக் கண்டது.

மாதாவும்வீற்றிருக்கும் மண்டபஞ்சென்றேறினாள்
வந்துபணிந்ததொரு மகளாரைவாழ்த்துகிறாள்

வாழ்வீர்வளர்ந்திடுவீர் மாயனடிபெறுவீர்
அத்திபுரமாள அரசுகளைப்பெற்றிடுவீர்
கண்களிலேயொத்திக் கனிவாயைமுத்தமிட்டு
வண்டார்குழலாளை வாயைநெருடிமுத்தமிட்டு
ஏறிட்டுப்பார்த்தாள் இளங்கொடியாள்சீர்வடிவை
பார்த்தாள்பலகாலும் பார்த்தன்மருமகளை
காசிலிவர்னர் கர்ணருரைத்ததெல்லாம்
பொய்யென்றிருந்தேன் புகழ்வீரன்சொன்னதெல்லாம்
மெய்யாகத்தோன்றுதே வேல்புருவங்கண்ணாட்கு
சுத்திநிற்கும்பெண்கள் சூழ்ந்திருக்குமதாதியர்கள்
அங்கவரைகண்காட்டி ஆரமுலையாளும்
கூறுவாள்வாய்த்திறந்து கொம்பனையைத்தான்பார்த்து
வண்டார்குழலாளே மைந்தராய்தோன்றுதுகாண்
பேடைமலர்க்கண்ணாளே பிள்ளையாய்த்தோன்றுதுகாண்
மன்னர்திருமகனார் வந்தாரோஇவ்விடத்தில்
வாள்விசயன்புத்திரனார் வந்தாரோவுளவாக
கற்கோட்டைமுத்திரையுங் கர்ணரதுவாசலிலே
அரசாளும்பூமுடியாள் அல்லிவரவிட்டாரோ
ஆகாயவான்புரவி அவரேறிவந்தாரோ
உனதுமைத்துனனார்வந்த வாறெனக்குசொல்லுமென்றாள்
என்கண்ணாட்டிநாயகரைக் கண்ணாலேபாரேனோ
மாதுமணவாளருக்கு மருவிட்டுப்பாரேனோ
மாலைமுடியாளை மறையவைத்துப்பாரேனோ
ஏகாந்தமாக எனக்கொருசொல்சொல்லாயோ
மைத்துனனார்வந்த வகைஎனக்குச்சொல்லுமென்றாள்
அவள்வார்த்தைகள்பேசாள் மறுவார்த்தைதானுரையாள்
பூஞ்சிலம்பைப்பார்த்துப் புனக்கிளியுந்தானிருப்பாள்
கண்டாளேமவுனத்தை காரிழையுமப்போது
காசிலிவர்னர் கர்ணப்பெருமாளும்
மாளுகிறேனென்று வாளுருவிகைபிடித்து
ஆயுதமநாட்டி அலைதாரன்மாளுகிறார்
காசிலிவர்னர் கர்ணரேமாண்டாக்கால்
மகாராஜராஜர் மன்னவர்கள்நூற்றுவரும்
சேரவேமாளுவார் செம்பொனமுடியரசர்
உங்களையர்தனமுதலாய் என்தாயார்தன்முதலாய்
நாங்கள் அத்தனைபேரும் அழியததிருவுளமோ
மாளத்திருவுளமோ வண்டார்குழலாளே
மைத்துனனார்வந்த வாறெனக்குச்சொல்லுமென்றாள்
இவள்-வார்த்தையுரையாள் மறுவார்த்தைதான்பேசாள்
தன-பூஞ்சிலம்பைப்பார்த்துப் புனக்கிளியுந்தானிருப்பாள்

துன்னுங்குழலாள் துற்சடையாள்கூறுவாள்
மகாராஜராஜாக்கள் மன்னவர்கள்தம்மாணை
அரசாளும்நாயகியாள் அல்லிதிருவாணை
வனவாசங்காடுறையும் வன்னர்திருவாணை
மாதுகுழல்விரித்த மயிலணையாள்திருவாணை
உன்-மைத்துனர்மேலாணைகண்டீர் மாதரசேசொல்லுமென்றாள்
என்னாணைமாதரசே எனக்கறியச்சொல்லுமென்றாள்
மைத்துனர்மேலாணையிட மாதருங்கோபித்து
வண்டார்குழலாளும் மலரணையைவிட்டிறங்கி
பள்ளிகொள்ளுமண்டபத்தில் பைங்கிளியுமுட்புகுந்தாள்
தழுவணையில்கைகொடுத்துத் தையலருஞ்சாய்ந்திருந்தாள்
துன்னுங்கருங்குழலாள் துற்சடையுந்தான்பார்த்து
மாதுதிடுக்கிட்டு வயிற்றைப்பிசைந்துகொண்டாள்
இழந்தோமேநாமும் இளங்கொடியையிந்நேரம்
ஆரமுலையாளும் அழகியகண்முத்துதிர்த்தாள்
தாமக்குழல்மங்கையர் தாதியர்கள்வந்துநின்று
மாதிருக்குமண்டபத்தில் மங்கையர்கள்போய்ப்புகுந்து
இத்தனை ஆணைக்கும் இருந்தீர்தாய்மடிமேலே
மைத்துனர்மேலாணையிட வந்துவிட்டீர்கோபித்து
உன்-மைத்துனரிங்கே வந்தபடிதப்பாது
ஆணழகரிந்திரனார் வந்ததாய்த்தோன்றுகுது
காசிலிவர்னர் கர்ணர்பெருமாளும்
மாளுவேனென்றுசொல்லி வாளுருவிக்கைப்பிடித்து
ஆயுதம்நாட்டி அவரிருக்கப்பூங்கொடியே
அங்கவளநாட்டான் அவர்மாண்டாராமானால்
மகாராஜராஜாக்கள் மன்னவர்கள்நூற்றுவரும்
சேரவேமாளுவார் செம்பொன்மணிமுடியார்
உங்கள்ஐயர்முதலாக ஆச்சியருந்தான்கூட
ஆரணங்கேநாங்கள் ஆயிரம்பேர்தாதியரும்
இத்தனைபேர்மாள இழக்கத்திருவுளமோ
மாளத்திருவுளமோ வண்டார்குழலாளே
மைத்துனனார்வந்த வகைபிரிதுச்சொல்லுமென்றாள்
அதற்குக்கலந்தாரி அல்லிமருமகளும்
வாயைத்திறவாமல் மங்கையருந்தானிருந்தாள்
பார்த்தார்கள்தாதியர்கள் பைங்கிளிமாரெல்லோரும்
உன்-மைத்துனர்மேலாணை மாதரசேசொல்லுமென்றாள்
தாய்போல்வளர்த்தெடுத்த தாதியவள்சொல்லுகையில்
ஆரணங்கேநீரும் ஆணைவிடுஞ்சொல்லுகிறேன்
நீ-சொன்னபிறகலவோ தோகையாணைவிடுவதுகாண்

கலந்தாரி தாதிகட்குச் சொன்னது.

காரிழையாள்மாது கலந்தாரியே துரைப்பாள்
முழுகியநாலானாள் முருகுகுழலேயெல்லோரும்
உடனுகைப்பள்ளிகொள்ளும் உண்டானப்பெண்களெல்லாம்
பாதியிரவுசென்று பதினாறுநாழிகையில்
வீசுதுகாண்மேனிகியல்லாம் வெகுநெருப்பாயெங்களுக்கு
மண்டபத்தின்கூடத்தில் மாதர்களேபள்ளிகொண்டீர்
அன்றையராத்திரியில் அருச்சுனனார்புத்திரரும்
ஆகாயவான்புரவி அவரேறிவந்தார்காண்
ஆருமறியாமல் அங்கொருவர்காணுமல்
சந்தனமுங்குங்குமமுஞ் சவ்வாதுபரிமளமும்
வகைவகையாய்பூஷணங்கள் வகையுடனேதான்கொடுத்து
அன்றையராத்திரியில் அவர்வந்துபோனார்காண்
அடையாளந்தான்கொடுத்து அவர்போனார்தென்மதுரை
எங்கேயடையாளம் என்றுளேதாதியவள்
மாணிக்கப்பேழையிலே மாதரசேகட்டிவைத்தேன்
இத்தனை ஆணைக்கு இருந்தீர்காண் தாய்மடிமேல்
மைத்துனர்மேலாணையிட மாதரசேகோபித்தீர்
மகாராஜராஜாக்கள் மன்னாமேலாணைவிட்டேன்
ஆரண்ணியம்போனதொரு ஐவர்மேலாணைவிட்டேன்
மாமியார்பாஞ்சாலி மயிலணைமேலாணைவிட்டேன்
அரசாளும்நாயகியாள் அல்லிமேலாணைவிட்டேன்
உம்மைத்துனர்மேலாலாணையிட மாதரசேகோபித்தீர்
ஏலங்குழலாளே இருமென்றெழுந்திருந்தாள்
துன்னுங்கருங்குழலாள் துற்சவைசடையாள்தானிருக்க
ஆருமறியாமல் அருச்சுனனார்புத்திரரும்
அடையாளந்தானகொடுத்து ஆணழகர்போனாராம்
முத்திரைமோதிரத்தை முருகுகுழலாள்தானெடுத்து
கட்டழகன்மோதிரத்தைக் கனகளிலேதானுமொத்தி
பவுத்திரமோதிரத்தைப் பைங்கிளியாளதானெடுத்து
கண்மணிநாயகரைக் காணேமெருக்காலம்
மாதுமணவாளன் வந்ததைப்பாரேனே
நூலார்கடுந்திரளார் நூற்றொருவர்காணுமல்
போதவருந்தடங்கள் பொனனுருவிப்பாளயத்தில்
பாராமற்போனேனே பாவினாலானேனே
காணுதிருந்தேன் கண்ணற்றுளானேனே
கண்டோமேநாமுமிந்தக் கட்டழகினனயத்தை
ஒருதாதிவந்தாளோ தையலதுதவனடததை
என் றுதிரேகங்குளிர்ந்து இருதோளுமபூரித்து
பூட்டுமிகவிட்டுத்தான் பொனனாபரணமெல்லாம்

எங்கள் அண்ணருக்குச்சொல்லி அறிக்கையிடவேண்டுமென்று
தண்டிகைமேலேறித் தாமக்குழலாளும்

துற்சடையாள் கர்ணருக்குச்சொல்லுகிறது.

சுற்றிப்பிறம்படிக்க சூழ்ந்துவர அறிவையற்கு
ஆயிரம்பேர்தாதியர்கள் அருகினிலேதான்சூழ
ஏறிப்பிறம்படிக்க யேந்திழைமாரெச்சரிக்க
மாறிப்பிரம்படிக்க மண்டபஞ்சென்றேறினாள்
தண்டிகைவிட்டிறங்கித் தாமக்குழலாளும்
ஆரவிளமுலையாள் அரண்மனையில்போய்புகுந்தாள்
அங்குதேசாதிபரும் அதிகர்ணபெருமானும்
ஏறிட்டுப்பார்த்தார் இளங்கொடியாள்சீர்வடிவை
அலர்ந்தசெந்தாமரைபோல் ஆரணங்குதிருமுகங்கள்
தாமமுடியாளும் தலைதப்பிவிட்டாளோ
என்னகருமந்தங்கை எனக்கரியச்சொல்லுமென்றார்
அஞ்சாதேயஞ்சாதே யண்ணாவேயஞ்சாதே
மதுரைதிருமகனும் வந்தார்மறைவாக
உன்-மைந்தர்புலந்திரரும் மாதினிடம்வந்தார்கள்
ஆருமறியாமல் அலைதாரணங்குவந்து
அடையாளந்தான்கொடுத்து அல்லிமகன்போனானும்
அரசமன்னர்வைத்த அடையாளமென்றுசொல்லி
மாணிக்கப்பேழையே வைத்தாரேமுன்னிலையாய்
ஆணிப்பொன்னாலே அழுத்தியேகோபமிட்ட
பத்தாயிரம்பொன்பெற்ற மாணிக்கவர்ணமூக்கித்தி
கண்டாரடையாளம் கர்ணர்பெருமானும்
இப்படியாய்மீறியே இந்திரனும்வந்தானே
நாடாளக்கற்றானே இராசகுலவிளக்கு
ஊராளக்கற்றானே உத்தமசிகாமணியே
செம்பொன்மணிமுடியான் செந்நாடுபூண்டானே
தென்னன்முடிவேந்தன் செங்கோல்பிடித்தானே
மன்னர்திருமகனு மண்டலத்தையாள்கிறானே
முத்திரைமோதிரத்தை முடிமன்னர்தானெடுத்து
கட்டழகனமோதிரத்தைக் கைதனிலேதானணிந்து
சரியாயிருந்ததுவே தருமமுடியார்க்கு
பவுத்திரமோதிரத்தை பார்வேந்தன் தான்பார்த்து
மாதுமணவாளன் வந்தபடிதப்பாது
மகாராஜராஜாவை வைத்திருந்துபாரேனே
மைந்தன்புலந்திரன் வடிவழகைப்பாரேனே
மாதுமணவாளனுக்கு மருவிட்டுப்பாரேனே
காணுதிருந்தேன் கண்ணைமறுனேனே

பாராதிருந்தேனே பாவிஞனானேனே
முத்திரைமோதிரத்தை முடிமன்னர்கையிலிட்டு
மற்றுமடையாளம் மருமகனேகாட்டுமென்றார்
காட்டினுளடையாளம் கர்ணர்மனமகிழ
அடிசில்வரும்வேளை ஆச்சிதுகாணண்ணுவே
உண்டுபசியாறி வுத்தமனேநடவுமென்றார்

கர்ணர் புறப்பட்டுவருகிறது.

அங்குதேசாதிபதி அதிகர்ணரென்னசொல்லுவார்
மகாராஜராஜாக்கள் மன்னவர்கள் நூற்றுவரும்
சும்மாவிருப்பார்கள் தன்னுங்கருங்குழலே
ஏலங்குழலியரே இருமென்றெழுந்திருந்தார்
வேந்தரதிகர்ணர் வெளியேபுறப்பட்டார்
வேட்டைபரிவாரம் வேங்கைநாசேனைகளும்
காட்டில்வாழ்மானுகளும் கானமயிலுகளும்
யானைமுயலுகளும் அன்பானஉடும்புகளும்
சிட்டுக்குருவிகளும் சிறுகுருவிபூங்குருவி
மன்னர்கொண்டிருக்கும் வல்லூர்க்குருவிகளும்
சேரவந்துகூடிற்று சேனைகளத்தனையும்
வேட்டைப்புறவிமேல் வேந்தனும்தானேறி
ஒக்கப்புறவிவிட்டார் உண்டானதோழரெல்லாம்
சேனைமனுவுகளுந் திரளும்பரிகளமும்
மகாசேனைதன்னுடனே மாலைநெடுமுடியார்

அம்பலத்தில் இரகசியம்.

கூடினவணுகையிலே கும்பல்சூழ்ந்துபேசுகிறார்
காரிழையாள்மாது கலந்தாரிசெய்திகளை
தங்களுக்குள்ளாதான் தனித்தனியேபேசலுற்றார்
மாணிக்கப்பேழை மாதரதுமுன்னேவைத்தாள்
சிறுவுங்கச்சைதிரு முடியுந்தானெடுத்து
ஆரணங்குராஜாத்தி அல்லியடையாளந்தான்
ஆணிப்பொன்னாலே அழுத்திட்ட அடையாளம்
சபதமுடித்தாரே தருமமுடியாரும்
இப்படிக்குமீறி இந்திரரும்வளர்ந்தாரோ
ராமக்குளவிளக்கு நாயகாவீரியமும்
செம்பொன்முடியாருஞ் செங்கோல்பிடித்தாரோ
இரகசியங்கள்மிஞ்சுகுது இராசாக்களம்பலத்தில்
அந்தரகசியம் அம்பலத்தில்பொங்கினதே
எழுதரியவம்பலத்தில் ஏகாந்தமிஞ்சினதே
தேசத்தழகனவன் திரியோதிரன்கேட்டு

தனக்குக்கவரியிடுந் தாதிமுகம்நோக்கி
ஏதடிபூந்தாதி ஏகாந்தரகசியங்கள்
இரகசியங்கள்பெருகுது நலமானதாதியரே
பாண்டவர்களைவரும் படைகூட்டிவாராரோ
ஆணழகர்பாண்டவர்கள் ஐவர்வெளிப்பட்டாரோ
கட்டழகர்பாண்டவரின் காலாள்வருகிறதோ
தருமராதம்பியர்கள் தனஞ்சியர்களவாராரோ
அம்பலத்துரகசியங்கள் அறிந்துவாதாதியரே
வீசுங்கவரிகளை வேறொருத்திக்கைகொடுத்து
படிக்குப்படிகடந்து பாவையிளந்தாதி
மாணகனம்பலத்தில் வந்தாளேதாதியவள்
உற்றிருந்துகேட்கிறாள் ஒருவருஞ்சொல்லார்கள்
கோணதமாதவத்துக் குருக்களடிபணிந்தாள்
ஆர்பணிதாதிநீ அறியவுரையுமென்றார்
ஆர்பணியுமல்லநான் ஐயாவேயுன்பணிநான்
தேசத்தழகுமன்னன் திரியோதிரன்பணிநான்
என்னகருமமிது எனக்கறியச்சொல்லுமென்றாள்
அம்பலமெல்லாம் அடைவானரகசியங்கள்
எழுதரியஅம்பலத்தில் ஏகாந்தமிஞ்சுகுது
பாண்டவர்களைவரும் படைகூட்டிவாராரோ
ஆணழகர்பஞ்சவர்கள் ஐவர்வெளிப்பட்டாரோ
காவலர்கள்பாண்டவரின் காலாள்வருகிறதோ
அம்பலத்துரகசியங்கள் அறிந்துவரச்சொன்னார்கள்
என்னகருமமையா எனக்கறியச்சொல்லுமென்றாள்
அவ்வார்த்தைதத்தான்கேட்டு அன்பாய்க்குருக்களுந்தான்
சொல்லப்பயப்படுவோஞ் சுந்தரதாதியரே
பயப்படுவாருமுண்டோ பார்வேந்தரன்னமுண்டு
அரசன்சோறுண்டிருந்து அஞ்சிநடுங்குவதேன்
சொல்லுமையாவென்று நோகையிவள்கேட்கையிலே
வேறொன்றுமில்லைகாண் வேல்புருவக்கண்ணாளே
அரசாளும்நாயகியாள் அல்லித்திருமகனார்
பொன்னுமணியழகர் புலந்திரனார்தேவியற்கு
காரிழைமாதுநல்லாள் கலந்தாரிநாயகிக்கு
வண்டார்குழலாட்கு மைந்தராய்த்தோணுகுது
மதுரைத்துரைமன்னன் வந்ததுங்காணுமே
அதனாலேகாணுத்து அடர்ந்தரகசியங்கள்
தங்களிலேகூடித் தனித்தனியேபேசுகிறார்
அவ்வார்த்தைகேட்டு அடிபணிந்துதாதியர்கள்
மீளத்திரும்பிவந்தாள் வேல்புருவக்கண்ணாளும்
தேசத்தழகுமன்னன் திரியனடிபணிந்து

ஆசனத்தின்கீழே அடிபணிந்துதெண்டனிட்டாள்
என்னகருமமடி எனக்கரியச்சொல்லுமென்றான்
சொல்லப்பயப்படுவேன் சுந்தரப்பூமுடியே
பாவையழகியர்க்குப் பாலன்வந்தகாரணமேன்
அரசாளும்நாயகியாள் அல்லித்திருமகனார்
அருச்சுனனாரீன்றெடுத்த அழகுபுலந்திரனும்
போருக்கஞ்சாமன்னன் புலந்திரனார்தேவியற்கு
ஆகாமசக்கை அருமசக்கையாரிழைக்கு
கட்டப்படுக்கையிலே எழுந்திருக்கத்தள்ளாது
உண்ணாள்குளியாளாம் ஒருநேரமுண்பாளாம்
பந்துபிடித்தரியாள் பள்ளாங்குழியாடாள்
சிந்துகவிகேளாமல் தேனார்குழலாளும்
வேல்புருவங்கண்ணாள் விளையாடச்சம்மதியாள்
வண்டார்குழலாட்கு மைந்தராய்த்தோன்றுதுகாண்
பேடைமலர்க்கண்ணாட்குப் பிள்ளையாய்த்தோன்றுதுகாண்
மதுரைவளநாட்டான வந்ததுவுங்காணேமே
அதனாலேகாணுதையா அம்பலரகசியங்கள்
தங்களிலேகூறித் தனித்தனியேபேசுகிறார்

திரியோதிரன் தாதிகளுக்குச் சொல்வது.

என்றுரைக்கத்தாதி இருசெவியில்தான்கேட்டு
தேசத்தழகுமன்னன் திரியோதனப்பெருமான்
கண்டீரோதாதியர்கள் கர்ணர்செய்தகாரியத்தை
ஆற்றிலேதான்மிதந்து அலைந்தொதுங்கிப்போகாமல்
தேர்ப்பாகனென்று சிலபேர்கள்சொல்லாமல்
பிள்ளைக்குப்பிள்ளையாய் பெரியபிள்ளையாகவேதான்
பொன்னால்மகுடமது பிரபலமாய்த்தான்கொடுத்து
மாற்றிவளர்த்துநான் மகுடமுடிதரித்து
உத்தமனைநாளுமிப்போ வுள்ளுறவாய்வைத்தேனே
செகத்திற்புதையாதே சிறுமணல்பாயாதே
உத்தமனுமெந்தனுக்கு உபகாரஞ்செய்தானே
தேர்ப்பாகனென்றுமிங்கே தெரியவேவேண்டுமோ
சமயமுதவிகளைச் சாமர்த்தியமந்திரிகளை
அங்கவரையெல்லாம் அனுப்பிவிடைகொடுத்து
சேரவிடைகொடுத்துச் செம்பொன்முடியானும்
சிங்காதனத்தைவிட்டுக் கீழேகுதித்திறங்கி
அருந்தடிகாகுணதே அரண்மனைபோய்புகுந்தார்
தாமக்கருங்குழாள் தாதியர்கள்மூப்பியரும்
காலுக்குநீர்கொண்டு காரிழைமார்வந்தார்கள்
சிங்காதனமிட்டார் தேனார்குழலார்கள்

இட்டதொருஆசனத்தில் இருந்தானேதார்வேந்தன்
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாளெங்கேயென்றார்
நீலக்கருங்குழலாள் நீலமுத்துமண்டபத்தில்
கிளிமொழியாள்தங்களுடன் கேளிக்கைபார்க்கிறாள்
மாதுமிருக்குமந்த மண்டபத்திற்போய்புகுந்து
நூலார்கடுந்திரளார் நூற்றொருவர்தேவியற்கு
மைத்துனனார்வார வரவுகண்டுமங்கையர்கள்

பெருந்திருவாள் துரியோதனனைக் கண்டது.

சிங்காதனத்தைவிட்டுக் கீழேகுதித்திறங்கி
மாதர்களெல்லோரும் மறைவாகப்போனார்கள்
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாள்தான்பார்த்து
எதிரேநடந்துவந்து ஏலக்குழலாளும்
மானாகங்கொண்டீரோ மதியற்றுப்போனீரோ
ஆடரவங்கொண்டீரோ அறிவழிந்துபோனீரோ
தம்பிமார்தேவியென்று சற்றுமதியாமல்
வாருமென்றுசொல்லி மணிக்கையைத்தான்பிடித்து
பள்ளியறையில் பைங்கிளியுமகொண்டுசென்று
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவுங்கூறுவாள்
தருமமுடியாரே தனித்துவரக்காரியமேன்
என்னகருமமிது எனக்கறியச்சொல்லுமென்றாள்
அடி-கண்டாயோமாதேநீ கர்ணர்செய்தகாரியத்தை
அவர் ஆற்றிலேமிதந்து அலைந்துநழுகாமல்
தேர்ப்பாகனென்று சிலபேர்நகையாமல்
பிள்ளைக்குபிள்ளையாய் பெரியபிள்ளையாகவே
மாற்றிவளர்த்தேனே மகுடமுடிதரித்து
உத்தமனென்றே உலகமெல்லாம்பெயருமிட்டு
என்றுமிவனுரைக்க யேந்திழையுங்கூறுவாள்
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவுங்கூறுவாள்
இந்நாளுரையா யிருந்தரசாண்டோமே
சுந்தரப்பூமுடியார் துரோகமென்றுஞ்செய்ததில்லை
என்னவினைசெய்தார் எனக்கறியச்சொல்லுமென்றாள்
அந்தமொழிகேட்டு அரசன்விளம்பலுற்றான்
சுந்தரப்பூமுடியான சொல்லுவான்வார்த்தையொன்று
கேளாய்மயிலே கிரீட்டிபயினறெடுத்து
போர்க்கஞ்சாமன்னன் புலந்திரவீரியனார்
ஆனந்தவாழ்மார்பன் அவருடையதேவியரை
காரிழையாளமாது கலந்தாரிநாயகத்தை
என்னுடையகோட்டையில யிளங்கொடியைவையாமல்
அவன-ஆச்சியரணமனையில ஆரணங்கைவையாமல்
தன்னுடையகோயிலிலே தையலரைவையாமல

வேறேயொருகோட்டைக்கு வேறாகவீடுகட்டி
மாதினதுகோட்டைக்கு மறுபடியும்போனதில்லை
நூலால்கடுந்திரலார் நூற்றுவரும்போனதில்லை
கற்கோட்டைமுத்திரையாங் காவலுந்தன்னதென்று
வாசலுக்குக்காவல்; வாள்வீரர்சூழ்ந்திருக்க
இரவும்பகலுமா யிளங்கொடியாள்தன்னுடனே
மருவியுறவாடியே மைந்தனுக்குக்கெர்ப்பமாச்சுது
பிள்ளைகெர்ப்பமானாள் பெருந்திருவாளாகாயகியும்
என்றுமிகவரசன் ஏந்திழைக்குச்சொல்லுகையில்

பெருந்திருவாள் சொல்லுகிறது.

பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவுகூறுவாள்
சிவசிவாவென்று திருச்செவியில்கையைவைத்தாள்
அரகராவென்றுசொல்லி ஆரணங்குமுதறிர்த்தாள்
நம்முடையகர்ணரை நாம்சொல்லக்காரணமேன்
இந்நாளுமுதியுடன் இருந்துவரக்கண்டோமே
சுந்தரப்பூமுடியான் துரோகமொன்றுஞ்செய்ததில்லை
அவனை-தாயார்முலைகொத்துத் தந்தையார்சீராட்டி
மாரணைமேலே வளர்க்கவைத்தார்தாயாரே
ஏறிட்டும்பாராரே என்னுளுமிராசமன்னன்
நாடகசாலையிலும் நாயகமாராடிவந்தால்
தங்கைதமக்கையென்பார் தையலர்களியாவரையும்
தன்பாதமேகண்ணாகப் பார்த்திருப்பான்புகழ்வீரன்
கர்ணரைச்சொல்லுகிற காரியமோவித்தனையும்
அங்கவளநாட்டார் அவர்முன்னேசொன்னாக்கால்
ஆயுதத்தால்தன்னுயிரை அழித்துக்கொள்ளவாராணழகர்
மெல்லியருந்தானுமாய் விசாரித்துவருகிறோம்
என்னாணையென்று இளங்கொடியாளாணையிட்டாள்

கர்ணர் வருகிறது.

காகிலிவர்னர் கர்ணரவர்வாராராம்
ஆதித்தன்புத்திரனார் அங்கவளநாட்டழகன்
கெங்கையிலேவந்த கீர்த்திப்பிரதாபன்
வைகைபெருகிவர வந்தவனகாண்கர்ணரவர்
வெள்ளித்தடிக்காரர் வீரியமாய்ச்சூழ்ந்துவர
துள்ளும்படைவீரர் துடிப்புடனேசூழ்ந்துவர
கண்டாயோதாதேசீ கர்ணர்செய்தகாரியத்தை
நர்கசுரமேளம் நற்கவரிகினறாத
கோணக்கொம்பூதுவார்கள் கொற்றவனார்வீரியற்கு
ஊதினார்சின்னம உலகேழுந்தானதிர

விருதிக்குமாலை மெல்லியருங்கேட்டிருந்தான்
வந்துகுறுகினார் மாணாகனம்பலத்தில்
ஏறிட்டுப்பார்த்தார்கள் இராசாவினம்பலத்தில்
நான்வந்துகொலுகலைப்பேன் நாடோறும்பலத்தில்
இன்றுகொலுகலைந்த தேதோகருமமிது
மாணாகனம்பலத்தில் வந்துகுறுகினார்
வேட்டைபரிசனமும் வேந்தனதுசேனைகளும்
சேரவந்துகூடிற்று சேனைகளத்தனையும்
அங்கவளநாடாளும் அதிகர்ணர்வீரியனும்
பங்கிட்டுக்கொண்டார்கள் படைமன்னர்சேனையெல்லாம்
சமயமுதவிகளைச் சாமர்த்தியமந்திரியை
அங்கவரையெல்லாம் அனுப்பிவிடைகொடுத்து
பாடும்புலவருக்கும் பட்டருக்குஞ்சித்தருக்கும்
தேனல்லோதாரனவன் தியாகங்கள்தான்கொடுத்து
அங்கவரையெல்லா மனுப்பிவிடைகொடுத்து
சிங்காதனத்தைவிட்டுக் கீழேகுதித்திறங்கி
ஆலாத்திக்கொண்டுவந்தார் ஐயாயிரந்தாதியர்கள்
முத்தாலேஆலாத்தி மூன்றாலேசுத்திவிட்டார்
பவளத்தாலாத்தி பத்துநூறாயிரம்பேர்
புரவிவிட்டுத்தானிறங்கிப் பொற்கருணர்தானடந்தார்
ஒத்தத்துரைகளுடன் உண்டானதோழருமாய்
கைகட்டித்தானடந்தார் காவலர்களெல்லோரும்
தருமமுடியான் தலைகட்டிற்போய்புகுந்தான்
தாமக்குழலார்கள் தாதிமாரெதிரில்கண்டு
காலுக்குநீர்வார்த்தார் மாமலைவீரியற்கு
பாவையழகியரும் பட்டாலடிதுவட்டி
ஆசனம்போட்டார்கள் அங்கிருக்கும்தாதியர்கள்
இட்டதோராசனத்தில் ஏறுமல்மன்னவனார்
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாளெங்கேயென்றார்
ஏகாந்தம்பேசுகிறார் இருவரும்பள்ளியறை
நான்வாரேனென்று நாயகரேசொல்லுமென்றார்
பெருந்திருவாளண்டையிலே பொற்கொடியுமோடிவந்து
ஆசனத்தின்கீழே யடிவணங்கிதெண்டனிட்டாள்
வந்துபணிந்தவளை வாழ்த்தியந்தமன்னவனும்
கருணர்வந்தாரென்று கட்டழகிசொல்லுகையில்
வரச்சொல்லுமென்றழைத்தாள் மாதுபெருந்திருவாள்
தாதியவளோடிவந்து தையல்வரச்சொன்னாள்காண்
அவ்வசனங்கேட்டு ஆணழகர்நுழைந்தார்

கர்ணர் பெருந்திருவாளைக் கண்டது

பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாள் தன்னடிக்கே
ஆசனத்தின்கீழே அடிவணங்கித்தெண்டனிட்டார்
வந்துபணிந்தவனை வாழ்த்தினாள் மன்னவரை
வாழ்வீர்வளருவீர் மண்ணூழிகாலமட்டும்
நிற்பீர்நிலைதரிப்பீர் நீராசையாண்டிடுவீர்
நீரேயரசாள்வீர் நீடூழிகாலமெல்லாம்
இருவர்நடுவாக இருத்தியந்தராஜாவை
நீறிட்டுப்பார்த்தார்கள் இவருடையதிருமேனி
வாடியிருப்பானேன் மன்னருடையதிருமேனி
விடாய்பட்டிருக்குது வேந்தன்திருமேனி
கட்டிதயிருகளும் காவடியிலன்னமும்
பாணக்கம்நீர்மோரும் வரவிட்டேன்பார்வேந்தா
விடாய்த்துநீமண்டபத்தில் வேந்தனேவரவில்லையோ
எந்தவழிவந்தீர் என்றாள்பெருந்திருவாள்
ஆச்சிநானந்த அவ்வழியில்வந்ததில்லை
மற்றுமொருவழியை வந்தேனுனச்சியரே
மாலைமுடியானே நீவருவதற்குமுன்பாக
ஆரப்பசித்ததென்று அரவக்கொடியாரும்
ஆனந்தவாழ்மார்பா அடிசலுக்குத்தான்வந்தார்
மாலைமுடியாரே நீர்வந்தசெய்திகண்டு
தாமிஷமாய்நின்றார்கள தனஞ்செயர்களிருவருமாய்
மஞ்சணீராடியே மன்னனாரிருவருமாய்
ஆனந்தமாய்நீங்கள் அசனுககுவாருமென்றார்
சிங்காதனத்தைவிட்டுக் கீழேகுதித்திறங்கி
சுந்தரப்பூமுடியார் தோழனையுங்கைகோர்த்து
மஞ்சநீர்ச்சாலையிலே மன்னவரும்போய்புகுந்தார்

துரியோதனனுங் கர்ணருங்கூடினது.

ஆனபணிகழட்டி ஆனந்தவாழ்மார்பன்
நனையாப்பணிதிகளை நாயகிமார்தான்கழட்டி
மாலைமுடியாரும் மஞ்சள்நீர்தானாடி
ஈரத்துயில்களைந்து இழைசேர்ந்தபட்டுமிட்டு
தூவட்டங்கொண்டு துவட்டியந்தசுந்தரர்க்கு
ஆள்பணிபூட்டி ஆனந்தவாழ்மார்பர்
தேனல்லோதாரா திருநீற்றுக்காப்பணிந்து
செந்தூரப்பொட்டுமிட்டுச் சிவனையடிபணிந்து
பூசைபண்ணுமண்டபத்திற் போனாரிருவருமாய்
நித்தியப்படிதாங்கள் நிறையவேதான்கொடுத்து
செம்பொன்முடியாருஞ் செபதபந்தான்முடித்து

சுந்தரப்பூமுடியான் தோழனையுங்கைகோர்த்து
அமுதுண்ணுமண்டபத்தை அலகிட்டுநீர்தெளித்து
எங்குமலங்கரித்து எத்திசையும்நீர்தெளித்து
பூமியோடொத்ததொரு பொற்றடுக்குதான்போட்டார்
பொற்றடுக்குமேலே புகழ்வீரர்வீற்றிருந்தார்
சிங்கமுகக்காலிவைத்து செம்பொன்றளிகைவைத்தாள்
பொறித்தபொறிக்கறியும் பொன்போல்சிறுபருப்பும்
கூட்டிப்படைத்தாள் கொம்பேரிடையாளும்
அந்தஅடிசில் அமுதுண்டபிற்பாடு
அத்தளிகையுண்டபின்பு மறுதளிகையுண்டார்கள்
கையலம்பிக்கொண்டு கனகமணிமண்டபத்தில்
தாமக்கருங்குழலாள் தாதியரும்மூப்பியரும்
வாய்த்தவிலைச்சுருளும் வர்னப்பழக்காயும்
வாங்கியமுதுசெய்து மன்னரிருவருமாய்
ஆர்த்தகொலுச்சாமும் ஆச்சுதுகாணந்நேரம்
ஆபரணந்தான்பூண்டு அழகியபட்டுடுத்தி
சுந்தரப்பூமுடியார் தோழனையுங்கைகோர்த்தார்
ஆனந்தவாழ்மார்பர் அம்பலத்தில்தான்போனார்
சேரக்கொலுவில் சிங்காதனமிருந்து
வந்தெதிரேகண்டார்கள் மாலைமுடியாரை
காசிலிவர்னர் கர்ணர்பெருமானும்
இருமிருமென்று இணைகடக்கையமர்த்தி
சிங்காதனத்தில் சேரவிருந்தார்கள்
ஏறவிருந்தார்கள் எழில்மணிசிங்காதனத்தில்

துரியோதிரன் கர்ணரைக்கேட்கிறது

தேசத்தழகுமன்னன் திரியோதிரப்பெருமான்
கர்ணரைத்தான்பார்த்துக் கபடனெடுத்துரைப்பான்
மானாகக்கொடிவேந்தன் மன்னன்முகம்பார்த்து
நீர்பெருகியஆற்றிலே போற்றியேபோகாமல்
சேற்றிலழுந்தாதே சிறுமணல்பாயாதே
தேற்பாகனென்று தெரிந்துமிகச்சொல்லாதே
பிள்ளைக்குப்பிள்ளையாய் பெரியபிள்ளையாகவுன்னை
மாற்றிவளர்த்தேனே மகுடமுடிசூட்டியுன்னை
மன்னனென்றுபெயருமிட்டு மணவாளனைவைத்தேனே
உத்தமனாகச்செய்து ஊராளவைத்தேனே
உபகாரச்மெத்தசெய்தாய் உற்றதொருதேர்ப்பாகா
என்றுமிவனுரைக்க எடுத்துமிகவுரைத்தார்
காசிலிவர்னா கர்ணரவரேதுசொல்வார்
தேர்ப்பாகன்கையிலே சிக்கியுடைபட்டதுவல்

என்னைமாற்றிவளர்த்து மண்ணாளவைத்ததுவும்
அறியாதோவின்னாட்டு அம்பலத்துச்சேனையெல்லாம்
இதுபேச்சுசொல்லியா இந்தச்சபைநடுவே
சொல்லவேவேணுமோ சுந்தரப்பூமுடியார்
இந்நாளுறுதியா யிருந்தோமரசாண்டோம்
சுந்தரப்பூமுடியார் துரோகமொன்றும்செய்ததில்லை
இந்நாளுமில்லாதிப்போ தென்னவினைசெய்தேன்
சுந்தரரேசொல்லாமல் சொன்னால்தெரிவதுண்டோ
தீயினிற்சுட்டபுண்ணு சீக்கிரத்திலாறிவிடும்
நாவினாற்சுட்டபுண்ணு நாயகனேயாறாது
இப்போ-என்னவினைசெய்தேன் எனக்கறியச்சொல்லும்
தேசத்தழகுமன்னன் அரியோதனன்கேட்டு
அரசாளும்நாயகியாள் அல்லித்திருமகளார்
போரஞ்சாமன்னன் புலந்திரன்தேவியரை
காரிழையாள்மாது கலந்தாரிநாயகத்தை
அவ்ள்-ஆச்சிஅரண்மனையில் ஆரணங்கைவையாமல்
என்னுடையகோட்டையிலே இளங்கொடியைவையாமல்
வேறேயொருகோட்டைகட்டி வீணாகவீடுகட்டி
அன்றழித்துக்கட்டி ஆரணங்குதான்கொடியை
மன்னரதுகோட்டைக்கு மறுபடியும்போனதில்லை
நூலார்கடுந்திரளார் நூற்றுவரும்போனதில்லை
கற்கோட்டைமுத்திரையுங் காவலனேயும்முடிதென்று
வாசலுக்குக்காவலாயுன் மைந்தனைக்காவல்வைத்து
இரவுபகலுமா யிளங்கொடியாள்தன்னுடனே
மருவிநீயுறவாடி மைந்தனுண்டாக்கிவைத்தாய்
என்றுமன்னன்தானுரைக்க இதைக்கேட்டுக்கர்ணரவர்
அரகராவென்றுசொல்லி அரசனுங்கண்சிவந்து
சிவசிவாவென்று திருச்செவியிற்கையைவைத்து
காசிலிவர்னர் கர்ணருங்கண்சிவந்து
சீறியேகண்சிவந்து செங்கோன்முகந்ததம்பி
உருக்கியசெம்பொன்னது உதிரம்போற்கண்சிவந்து
உன்சோற்றையுண்டதுவும் உன்னரசையாண்டதுவும்
பிஞ்சுமணிமுடியாகப் புனலடையவேண்டுமென்று
வேண்டேனினிச்சென்மம வேறுநினைப்பதில்லை
மாண்டுமடிந்திடுவேன் வைகுந்தஞ்சேர்ந்திடுவேன்
செத்துமடிந்திடுவேன் சிவனபாதம்சேர்ந்திடுவேன்
மாளுகிறேனென்றுசொல்லி வாளுருவிக்கைப்பிடித்தான்
கொற்றவர்கள்கோமான குலையிலேவாளைவைக்க
அம்பலத்துச்சேனை அயைகலகாலுகலைந்து

சேனைகளத்தனையுஞ் சேரவந்துபணிந்தார்கள்
ஆனந்தமார்பன் அரும்வாளால்வீசினார்

துரியோதனன் கர்ணனுக்குச் சமாதானஞ் சொல்லியது.

தேசத்தழகன் திரியோதிரன்பார்த்து
கண்டோமேயின்று கர்ணரிடகோபத்தை
இந்நாளுங்கண்டதில்லை இவருடையகோபத்தை
ஆருக்குமண்டவொட்டான அங்கவளநாட்டான்
என்று-சிங்காதனத்தைவிட்டுக் கீழேகுதித்திறங்கி
பின்னுகவந்து பெருமானைச்சேர்த்தணைத்தான்
இணையில்லாஎன்தோழா என்னுயிர்க்காவலனே
காலங்களீரேழும் கண்டுணரவைத்தவனே
என்-தந்தைப்புழுநீக்கும் தர்மர்பெருமானே
என்னைக்கண்டுண்ணவைத்த கர்ணர்பெருமானே
தணியாயோதணியாயோ தார்வேந்தாவுன்கோபம்
கைபதைக்கவாய்துடிக்கக் கண்ணைத்துடைத்துக்கொண்டார்
கண்டார்கணையாழி கட்டழகன்கைதனிலே

கர்ணர் புலந்திரன் கணையாழி காட்டினது.

இந்நாட்டுவேலையல்ல இந்தக்கணையாழி
மதுரையின்வேலைகண்டீர் மன்னரசுகோமானே
ஆருடையஆழியிது அடையாளஞ்சொல்லுமென்றார்
ஆழியெடுத்து அலர்தாரன்வாசித்தான்
அரசாளும்நாயகியாள் அல்லிதிருமகனார்
உன்-மைந்தர்புலந்திரனார் வந்ததுநானறியேன்
அறியாமல்சொன்னேனே அரசேபொறுத்தருள்வீர்
என்று-வாய்த்தயிலைச்சுருளும வர்ணப்பழக்காயும்
காவலர்வீரியற்குக் கைநிறையஅள்ளியிட்டார்
என்னுணைநீரும் இலையமிர்தந்தினலுமென்றான்
மன்னுடிவாசகங்கள் மன்னர்கையில்தான்கொடுத்தான்
வாசங்கள்சாப்பிட்டு மன்னன்தனித்திருந்தான்
தேசத்தழகுமன்னன் திரியோதனன்கூறுவான்
பருவமதயானை பஞ்சவர்களைவரையும்
நாடுநகரமும் நல்லதொருராச்சியமும்
அடங்கலுந்தோற்று அனைவரும்போனாரே
முத்திரிக்கையிட்டுப்போனீர் முடிமன்னர்கோவிலெல்லாம்
அன்றுவெடுத்துவந்த ஆழியிதுகாணும்
அடையாளமல்லவென்று அலைதாரன்கூறினான்
இப்பெரியவடையாளம் எடுத்துவந்துகாட்டுமென்று
எங்கேயடையாளம் எடுத்துவந்துகாட்டுமென்றான்

உத்தமனார்கர்ணர் ஊழியரைத்தான்பார்த்து
துன்னுங்கருங்குழலாள் துற்சடையாளரண்மனைக்கு
மதுரையடைபாளம் மாணிக்கப்பேழையிலே
இருக்கின்றதென்றுசொல்லி எடுத்தோடிவாருமென்றார்
உத்தமர்கள்வீரியரும் ஊழியப்பேர்தான்கேட்டு
துன்னுங்கருங்குழலாள் துற்சடையாள்தானிருக்கும்
மாதிருக்குமண்டபத்தில் மந்துமிகத்தெண்டனிட்டான்
துன்னுங்கருங்குழலாள் துற்சடையாள்தான்பார்த்து
ஆர்பணிதூதரே அறியவுரையுமென்றாள்
யார்பணியுமல்லநான் அடியேனுமுன்பணிதான்
காசிலிவர்னர் கர்ணர்பணிதானுமென்றான்
ஆரணங்கேயும்முடைய அண்ணர்பணிதானுமென்றான்
மதுரைபுலந்திரரும் வந்ததுமில்லையென்று
மாதுமணவாளர் வந்தபடியில்லையென்று
காசிலிவர்னர் கர்ணர்மேல்சந்தேகமாய்
கூறினார்கண்டீரோ கொடிநாகங்கொண்டவரும்
மதுரையடையாளம் மாணிக்கப்பேழையிலே
இருக்குதுயென்றுசொல்லி எடுத்துவரச்சொன்னார்காண்
எங்கேயடையாளம் எடுத்துவந்துதாருமென்றான்
துன்னுங்கருங்குழலாள் துற்சடையுந்தான்கேட்டு
அவர்-யார்சொல்லுங்களோர் அரவக்கொடிவேந்தன்
இழந்தோமேநாமும் இளங்கொடியையின்றேடே
ஆரமுலையாளும் அழகியகண்முத்துதிர்த்தாள்
மாணிக்கப்பேழையை மாதருங்கைகொடுத்தாள்
வாங்கிதான்கையமர்த்தி மாலைமுடியானும்
கொண்டுவந்துமுன்னேவைத்தான் கொற்றவனார்தூதவனும்
காசிலிவர்னர் கர்ணர்திருமுடிக்கு
கொண்டுவந்துவைத்து கொற்றவனுந்தெண்டனிட
மாணிக்கப்பேழையை மன்னவனுந்தான்திறந்து
ஆணிப்பொன்னாலே அழுத்தியேகுப்பியிட்டு
ஆயிரம்பொன்பெற்ற அபரஞ்சிவர்னமாம்
மன்னவனுங்கைகொடுத்தான மாணிக்கமோதிரத்தை
பார்வேந்தன்கைகொடுக்கப் பதினகங்கோண்டோனும்
ஐவரிடதேவியவள் அரிவையிடம்போனயே
முத்தரிகைபோடப்போனீர் முடிமன்னர்வீடணைத்தும்
அன்றுயெடுத்துவந்த அடையாளப்பேழையிது
அடையாளமல்லவென்று அரசனுமேதுசொல்வான்
அந்தப்படிசொன்னாலும் அரிவையரைவைப்பதில்லை
தேனார்குழலியரைத் தீவளர்த்தித்தள்ளிவிடு
அங்கதேசாதிபதி அதிகர்ணர்கூறுகிறார்

அல்லிமலர்நாயகிக்கு ஆளனுப்பிப்போகவிட்டு
வண்டார்குழலாள் மறுவோலைவந்தபின்பு
தேனார்குழலாளைத் தீவளர்த்தித்தள்ளிடுவோம்
தேசத்தழகுமன்னன் திரியோதனன்கேட்டு

துரியன்கோபித்து அக்கினியை வளர்க்கச்சொன்னது.

செம்பொன்மணியோரைத் தீக்குழிவெட்டுமென்றார்
அக்கினியில்தள்ளிவிட்டு அரிவையிளமாதரசை
அத்திநகர்பட்டணத்தை ஆளாமல்விடுவதில்லை
வீண்வார்த்தைபேசாதே வேணமட்டுஞ்சொன்னாலும்
இளங்கொடியைவைப்பதில்லை என்னதான்சொன்னாலும்
தேனார்குழாளைத் தீவளர்த்தித்தள்ளிடுவேன்
உத்தமர்வீரியனும் ஊழியரைத்தானழைத்து
நித்திலங்குபூமுடியாள் நியமித்தபேரெல்லோரும்
அத்தனடைபேரையும் அழைத்தோடிவாருமென்றாள்
அத்தனைபேருகளும் அம்பலத்தில்வந்தார்கள்
எங்களையழைத்தது ஏதுவகைசொல்லுமென்றாள்
அல்லிமருமகளை அக்கினியிற்றள்ளுவதற்கு
அதனாலழைத்தேனென்று அரசனுக்குத்தெண்டனிட
அத்தனை பேருமாய் அப்பலத்தில்வந்துநின்று
எங்கேயையாத்தீக்குழிகள் எவ்விடத்தில்வெட்டுவது
அல்லிமருமகளை அக்கினியில்தானேற்ற
தேனார்குழலாளைத் தீயெரிக்கநாள்பார்க்க
நான்-ஆசாரவாசல்முன்னே அடரவேவெட்டுமென்றாள்
வெட்டிக்குழிபரித்தார் வேந்தரங்நாழிகையில்
தீக்குழிகளாச்சுதென்று தெண்டனிட்டாரூழியர்கள்
தீயைவளர்த்துமென்றான் திரியோதிரப்பெருமான்
நித்திலங்குபூமுடியார் நிமித்தங்கர்ணர்தான்கேட்டு
காவலர்வீரியர்கள் காட்டகத்தில்வந்துநின்று
பட்டவிறம்பார்த்து பரிவுடனேயெல்லோரும்
ஆச்சாவுந்தேக்கு மழகாய்பிடித்தடுக்கி
சந்தனத்தேக்குஞ் சதுராய்ப்பிளந்தடுக்கி
மூட்டினார்தீயை முடிமன்னர்சொற்படிக்கு
வானமட்டுந்தீயை வளர்ந்ததேயந்நேரம்
ஆகயாமட்டும் அக்கினிகளை தான்வளர்த்தி
தீக்குழிவளர்ந்ததென்று தெண்டனிட்டார்சேவகரும்
தேசததழகுமன்னன் திரியோதிரன்கேட்டு
காசிலிவர்னர் கர்ணர்முகம்நோக்கி
அல்லிமருமகளை அக்கினிற்றள்ளுதற்கு
அந்திப்பொழுதிலே அக்கினியிற்றள்ளுதற்கு
ஆரமுலையாளை அழைத்தோடிவாருமென்றான்

அக்கினியில் கர்ணர் விழப்போனது.

காசிலிவர்னர் கர்ணரதுகேட்டு
என்னமோசக்தேகம் எழில்வீராகண்டாயோ
வாசலுக்குகாவலாய் மைத்துனரேநீரிருந்தீர்
அக்கினியிநாளுமிப்போ ஐயாகுதிக்கிறேன்
என்று-வரிந்துகட்டிபச்சைவடம் மன்னரதிகர்ணர்
தீக்குழியைச்சுற்றிவந்தான் தென்னன்பெருமாளும்
அம்பலத்துச்சேனையெல்லாம் அடாக்கொளுக்கலைந்து
கட்டிப்பிடித்தார்கள் கர்ணர்பெருமாளை
கொற்றவனர்வீரியனும் கோபந்தணிந்தபின்பு
காசிலிவர்னர் கர்ணர்திருமகனும்
சிந்துநாடாளுகின்ற செல்வப்பெருமானை
அல்லிமருமகனே அக்கினிற்றள்ளுதற்கு
அந்திப்பொழுதிலே அக்கினிற்றள்ளுதற்கு
ஆரணங்கையிப்போ அழைத்துவரச்சொல்லுமென்றார்

தூதர்கள் கர்ணர் புத்திரனுக்குச் சொல்வது.

உத்தமர்கள்வீரியனும் ஊழியப்பேர்தான்கேட்டு
சிந்துநாடாளுகின்ற செல்வப்பெருமானே
அவர்-ஆசனத்தின்கீழே யடிவணங்கிதெண்டனிட்டார்
நீர்ப்பார்பணிதூதா-அரியருளாயுமென்றான்
தேசத்தழகனவன் திரியோதனன்பணிதான்
வேறொன்றுமில்லையையா வேந்தர்பெருமானே
உங்கள்-ஐயர்சந்தேகமாய் அரவக்கொடிவேந்தன்
கூறினார்கண்டீரோ கொற்றம்பூமன்னவனே
அல்லிமருமகனே அக்கினியிற்றள்ளுதற்கு
வானத்தளவுந்தீயும் வளர்ந்ததுமன்னவனே
காரிழையாள்யாது கலந்தாரிநாயகத்தை
அக்கினியிற்றள்ள அழைத்துவரச்சொன்னார்காண்

கர்ணர் புத்திரன் சொல்வது.

ஊழியர்தானுரைக்க உத்தமனுந்தான்கேட்டு
அல்லிமருமகனே அக்கினிற்றள்ளிவிட்டு
ஆள்வானேபின்னிருந்து அத்திநகர்பட்டணத்தை
அறியாரோதானும் அல்லியுடசேவகத்தை
மதுரைதுரைச்சியரை மணமாலைசூட்டவென்று
கர்சொன்றுநேராத காளையந்த அருச்சுனனார்
முந்தியேவந்துமுடிமன்னர்மாலையிட்டார்
மதுராபுரியாளை மணமாலைதான்சூட்டி

தேவேந்திரலோகம் சென்றாரே அருச்சனரும்
அப்படியல்லவோ ஐவருடசேவகங்கள்
ஏழாம்வயதினிலே எதிர்த்துவந்தகின்முகனை
எட்டிமயிர்பிடித்து எடுத்துடல்பிளந்து
கோமானுதிரங் குடித்துக்கரையேறி
மன்னன்குடல்பிடுங்கி மணமாலைபூண்டுகொண்டாள்
இவன்-அக்கினியில்தள்ளி அரசாளப்போகிறானே
அன்று-பத்தினியைக்கொண்டுவந்து பராச்சபைநடுவே
மாதினதுதுகிலாடை மா கன்தானுரிந்தான்
தக்கப்புகழுடைய தரும பொறுத்திருந்தார்
அன்று-பொருத்ததுபோல ஐவரின்றுபொறுப்பாரோ
நாலால்கடுந்திரளார் நூற்றொருவர்சேனையெல்லாம்
சேரக்கருவறுப்பார் சேனைகளத்தனையும்
அத்திபுரபட்டணத்தை அடங்கலையுந்தானிடித்து
பருத்தியும்ஆமணக்கும் பஞ்சவர்களிரைத்திடுவார்
பொறும்பொறுமென்று பொற்கருணர்புத்திரரும்

கர்ணர் புத்திரன் கலந்தாரியைக்கண்டது

ஆரணங்குசேதி அறிந்துநான்வந்தேனென்று
உத்தமன்வீரியனும் உட்கட்டைபோய்ப்புகுந்தான்
தாமக்கருங்குழலாள் தாதியெதிர்கண்டு
ஆதீனம்போட்டார்கள் அங்கிருக்குந்தாதியர்கள்
வந்தேயிளைப்பாரி மன்னன்திருமுகத்தை
தாதியர்கள்பார்த்திருந்து தார்வேந்தனேதுசொல்வான்
மாலைகுழள்மாரேயெங்கள் மதனியரைநீரழையும்
ஆரணங்குமப்போது அழைத்தோடிவாருமென்றார்
தன்கைகவுரி தானொருத்திகைகொடுத்து
மங்கையரும்பள்ளிகொண்ட மண்டபம்போய்ப்புகுந்து
காரிழையாள்மாது கலந்தாரிநாயகமே
அத்திபுரம்நகருக் காதீனத்துக்குடையவளே
தான்பிறந்தநாட்டுக்கு தானேயதிபதியாய்
முத்துஞ்சுடுகாடு முழுதுமுடையவளே
தான்பிறந்தநாட்டுக்குத் தானேயதிபதியாய்
முத்துஞ்சுடுகாடு முழுதுமுடையவளே
மங்கையரேயும்முடைய மைத்துனனார்வந்ததுகாண்
காசிவிவர்னா கர்னர்திருமகனார்
மாலைமுடியழகர் மண்டபத்தில்வந்திறங்கி
அழைத்துவரச்சொன்னா ரன்பானமைத்துனனார்
சொலலுதற்குமுன்னே தோகையெழுந்திருந்து
பூவணையைவிட்டு பூங்கிளியுந்தானிறங்கி

தாரார்குழலுடைய தாதிகள்தோளூன்றி
காரிழைமார் தாதியர்கள் கைலாகுதான்கொடுக்க
மெத்தனவே நடந்து வேல்புருவக்கண்ணாளும்
மைத்துனனுர் வீற்றிருக்கும் மண்டபம்போய்புகுந்தாள்
மாலைமுடியானும் மதனிவரவுகண்டு
சிங்காதனத்தைவிட்டுக் கீழேகுதித்திறங்கி
மதனியார்பாத மலர்தூவிதெண்டனிட்டான்
வந்துபணிந்தவரை வாழ்த்தியேமங்கையரும்
கன்னியர்கள்மாலை கடுகிமணம்பெறுவீர்
வாழ்ந்திடுவீரென்று மனங்குளிரவாழ்த்தினுள்
இட்டதோராசனத்தில் ஏறுமல்தானிருந்தான்

கலந்தாரி சொல்வது.

அப்போது-காரிழையாள்மாது கலந்தாரியே துரைப்பாள்
மைத்துனருநீருமிங்கே வந்தகருமமென்ன
மாலைகுழலியரே மதனியரேநீர்கேளீர்
மதுரைப்பெருமானும் வந்ததுமில்லையென்று
தீயைவளத்தினுர் தேசத்தழகுமன்னன்
வானமட்டுந்தீக்கள் வளர்ந்ததுகாணுந்நேரம்
ஆனைகுழியகலம் அக்கினியும்வளருகுது
அக்கினியில்தள்ளவும் அழைத்துவரச்சொன்னுரே
ஆதலாலிங்குவந்தேன் அன்னக்கிளிமதனியென்றுன்
அவ்வசனங்கேட்டு அல்லிமருமகளும்
கட்டார்கருங்குழலாள் கலந்தாரியேதுசொல்வாள்
சீறியெறிபறந்து கங்கைபோல்முத்தரும்பி
ஆள்வனேபின்னிருந்து அத்திநகர்பட்டணத்தை
அறியானோதானும ஐவரதுசேவகத்தை
ஆளழகுமன்னன் அருச்சுனராஜதுரை
மதுரைதுரைராச்சியுரை மணமாலைசூட்டவென்று
பூமியைவளமாக வருகின்றவேளையிலே
காசொன்றும்நேராதே காளையந்தவருச்சுனனுர்
தாலியும்நேராதே தார்வேந்தரந்நேரம்
மாதுகருங்குழலை மன்னவர்மாலையிட்டு
தேவேந்திரன்பட்டம் தேர்விசையராண்டவரே
அப்படியல்லவோ ஐவரதிசேகவங்கள்
கலகங்கள்பின்பல்லவோ கபடர்கள்நூற்றுவர்க்கும்
ஏதுக்குத்தள்ளுகிறுன் என்னைப்பெருந்தீயில்
என்னையிவன்தள்ள இவன்யாருநானுரு
யார்காணுமென்னை அக்கினியிற்றளளுறவன்
காவலர்கள்பாண்டவர்கள் காடுறைந்தபோனவர்கள்

என்மாமன்மாரெல்லோரும் வனவாசம்போனாரே
என்மாமிகுழல்விரித்து வனவாசம்போனாளே
நான்ஏற்றகுறைச்சல் இளப்பமாய்த்தானடந்தால்
அவர்தள்ளவறியாரோ ஐவர்சிகாமணிகள்
எனக்கு-நித்தியமொருபட்டுடுத்தி நேரமொருபூச்சாத்தி
போதவொருபட்டுடுத்திப் பொற்சரிகைபணிபூண்டு
அரவணையின்மேலே வளர்த்தாரேமன்னவனார்
அவன்ஏற்றகுறைச்சல் இருந்ததேயாமானால்
தாதிமார்களறியாரோ அதிகர்ணவீரியனே
இருந்துமில்லாதிருந்தால் ஆனந்தவாழ்மார்பா
என்னையிவன்தள்ள இவனாலேதானாமோ
தக்கப்புகழுடைய தருமராஜதம்பிமார்கள்
பதினெட்டுநாள்பாரதம் படையெடுத்துவந்தாக்கால்
நூலால்கடுந்திரனார் நூற்றுவர்கள்பூமுடியும்
வீமர்கைதெண்டாலும் விசையர்கையம்பாலும்
நாமகுலவிளக்கு நகுலர்கைபாங்கினாலும்
சகாதேவர்கையிருக்கும் சக்கரத்துவாளினாலும்
துண்டுதுண்டாகவே துணிக்கின்றபோதினிலே
கூறுகூறாகவே குவிக்கின்றபோதையிலே
பிணத்தின்மேல்தானடந்து பெண்கள்மாரெல்லோரும்
நாளை-தலைமேலேகையைவைத்துத் தானழுதமாதர்களை
தம்பிமார்பெண்டுகளைத் தள்ளவேசொல்லுமென்றாள்

கர்ணர் புத்திரன் சொல்வது.

அவ்வார்த்தைதான்கேட்டு அங்கராயன்புத்திரனும்
நாளை-துண்டுதுண்டாகத் துணிக்கின்றபேரானாலும்
அரவக்கொடிவேந்தன் அஞ்சானொருநாளும்
மாலைக்குழலியரே மதனியரேநீர்கேளீர்
எங்களையுமலலாமல் எழில்நாகங்கொண்டோனும்
உம்மைத்-தள்ளுகைக்குவந்தாலே தருமமுடியானும்
என்னசொல்வீர்மதனி என்றாரேமன்னவனும்
நான-சொல்லவறியேனே சுந்தரப்பூமுடியே
எதிரேயுத்தாரஞ்சொல்லி எடுத்துரைக்கமாட்டேனே
அஞ்சுவேனேசொல்லுதற்கு ஆனந்தவாழ்மார்பா
ஆர்காணுமென்னை அக்கினியில்தள்ளுதற்கு
தமபிமார்பெண்டுகளைத் தள்ளுமெனறுசொல்லுதற்கு
அதற்குநானஞ்சுவேனே ஆணழகாவீரியனே
அவ்வார்ததைகேட்டு அங்கராயன்புததிரனும்
மாலைகுழலேயுன மனதையானசோதித்தேன
எதுக்குமஞ்சாதே இருமென்றுதானுரைத்தார்

அஞ்சுவகையேன்காணும் ஆனந்தவாழ்மார்பா
ஒன்றாரண்டல்ல உத்தமர்கள்வீரியரே
ஐந்து அடையாளம் ஆணழகர்தான்கொடுத்து
வாசலுக்குக்காவலாய் மைத்துனரேநீரிருக்க
அஞ்சேனொருநாளும் ஆணழகாவென்றுரைத்தாள்

கர்ணர்புத்திரன் தூதனுக்குச் சொல்வது.

ஏலங்குழலியரே இருமென்றுதானுரைத்து
அப்போதுதூதவனும் அவ்விதத்திலின்றிருந்தான்
வந்தவொருதூதவனை மன்னவனுந்தானழைத்து
அஞ்சிக்கையாகவிங்கே அல்லோருந்தாமிருக்க
அவளஞ்சவில்லைகாணும் அதிசயம்பேசுகிறாள்
அவ்வார்த்தைசொல்லி அறிக்கையிடவந்தேனென்றார்
அவ்வார்த்தைசொல்லி அனுப்பிவிட்டுத்தூதவனை
காவலிலேதானிருந்தான் கட்டழகனப்போது
அப்போதுதூதவனும் அட்சணமேவந்துவிட்டான்

துரியோதனன் வேதியரை அழையுமென்றது.

தேசத்தழகுமன்னன் திரியோதிரன்கேட்டு
கண்கள்சிவந்து கடுங்கோபந்தானாகி
காசிலிவர்னர் கர்ணரைத்தானழைத்து
வேதியர்கள்பெரியோரை வேந்தனேயழையுமென்றார்
சாஸ்திரத்தாதிகளைச் சகலரையுமழையுமென்றான்
வேதந்தெரிந்தவரை வேதியரையழையமென்றான்
அவ்வசனங்கேட்டு அதிகர்னர்தானெழுந்து
அரசன்சொல்கடவாமல் அந்தணரைத்தேடுகிறார்

பெருமாள் வருகிறது.

அந்தவொருவேளையிலே ஆயரவாறிந்தார்
அண்டமளந்தவொரு ஆதிநாராயணரும்
இதுதான்சமயமென்று எமபெருமாளேதுசெய்தார்
நல்லசகுனமென்று நாராயணரெழுந்து
சாஸ்திரந்தான்தெரிந்த சதுர்மறையோர்போலாக
அறுபத்துநான்குகலை யாவுமுணர்ந்தவர்போல்
வேதங்கரைகண்ட வேதியர்போல்வடிவெடுத்து
மெத்தப்பெரியவராய் மேலநாட்டுவேதியராய்
விருத்தக்கிழவராய் வெகுநாளாய்வாழ்பவராய்
தீரப்படித்தவராய் தெளிவறிந்தவேதியர்போல்
முற்றுமேகற்றவராய் மூழுதுமறிந்தவராய்
தெண்டுபவித்திரமும் திருமார்பில்பூணூலும்

தள்ளாதவேதியர்போல் தடியூன்றிவாராராம்
வாரதொருவேதியரை மன்னவனுந்தான்பார்த்தான்
எதிர்கண்டுதெண்டனிட்டார் இயலானசீர்கர்ணர்
தெண்டனிட்டகர்ணரை சீர்பெறவேதான்வாழ்த்தி
வாழ்த்திவிடைகொடுத்துச் மறையவனேதுரைப்பான்
அஞ்சாதேகர்ணரே ஆதிமூலமாயவனார்
இவ்வேஷங்கொண்டு இவ்விடத்தில்வந்தேன்காண்
கலக்கமனமுடைய கபடன்துரியனுக்கு
ஆரூடஞ்சொல்லவந்தேன் அறிவழிந்தமன்னனுக்கு
ஆனதினால்நீரும் அஞ்சவேண்டாம்ராஜமன்னா
மதுரைத்துரைச்சியவள் வளநாடிபுத்திரனும்
தன்தேவியண்டைவந்து தான்மருவியவன்போனான்
அடையாளமுங்கொடுத்து ஆணழகன்தான்போனான்
உன்மீதுசிந்தனைகள் உண்மைகொள்மன்னனுக்கு
சிந்தைகலங்கவே தெரிவிப்பேன்கபடனுக்கு
அஞ்சாதேவாருமென்று அந்தணர்சொல்லுகையில்
கர்ணரதுகேட்டு கண்கள்களிகூர்ந்து
ஆனந்தங்கொண்டு அடிவணங்கித்தெண்டனிட்டு
கைலாகுதான்கொடுத்துக் கர்ணரவர்கூட்டிவந்தார்

துரியோதிரன் வேதியரைக்கண்டு மரியாதைசெய்தது.

மானாகங்கொண்ட மன்னன்கொலுமுகத்தில்
அந்தணர்வருகையிலே அரவக்கொடிவேந்தன்
அப்போதுவேதியரும் அரசன்முகம்பார்த்து
குந்தினார்வேதியரும் கொலுமகாமண்டபத்தில்
மற்றதொர்மன்னவர்கள் மகுடமுடிராஜாக்கள்
தெண்டனிட்டுவேதியர்க்குச் சிங்காதனங்கொடுத்தான்
ஏகமாய்நிறைந்தார்கள் எங்குமிடமில்லாமல்
எம்மையழைத்தது ஏதுவகைசொல்லுமென்றார்
உம்மையழைத்தவகை ஒன்றுற்குறைவுமில்லை
அல்லிமருமகனை அக்கினியிற்றள்ளுதற்கு
நாளுமதுநல்லதாய் நாயகரேசொல்லுமென்றார்

வேதியர் ஆரூடஞ் சொல்வது.

கண்டாரேவேதியரும் கபடனதுதன்னினைவை
கூறுவார்வேதியரும் கொடிநாகமன்னனுக்கு
அரசர்க்குத்தக்கபடி ஆயசருளலுற்றார்
அஸ்தநட்சதிரம ஆகாதநாளாச்சே
கேட்டையும்மூலம் கெடுதிநாள்வந்ததுவே
ஐந்தா அநாளைக்கு ஆகாதநாளாச்சே

இன்றெட்டாநாளையிலே ஏந்திழையைத்தள்ளிடலாம்
ஊருக்குமொன்றுமில்லை உமக்குமொருகுறைவில்லை
அக்கினியிற்றள்ளவென்றால் அதுக்குஇடமுமில்லை
ஆற்றங்கரையோரம் அக்கினியைத்தான்வளர்த்தி
எட்டுநாளொருவாரம் எரிநெருப்புஆறாமல்
ஆகாசமட்டும் அடர்ந்துஎரியவிட்டு
பசுவினதுநெய்யாலே படரவெரியவிட்டு
தணியாமலக்கினியை தார்வேந்தேகாத்திருந்து
அன்றுடம்பிராமணர்க்கு அளவிருந்ததானஞ்செய்து
கோதானம்பூதானம் கொடுத்துமேவேதியற்கு
யானைகுதிரைபசு அபாரியாயத்தான்கொடுத்து
எட்டுநாள்சென்றபின்பு ஏந்திழையைத்தள்ளிவிடும்
அதனுடனேதோஷம் அபகரித்துப்போய்விடும்
எட்டாநாளின்நேரம இவ்விடத்திலநான்வருவேன்
கூடிருந்துதள்ளிடுவோம கொற்றவனேயென்றாராம்
அவ்வார்த்தைதான்கேட்டு அரவக்கொடிவேந்தன்
பூரித்திருதோளும் பொன்னங்கிதான்சுழலச்
சந்தோஷங்கொண்டு சரீரங்கள்பூரித்தான்
வேதியரைப்பார்த்து வேந்தனெடுத்துரைப்பான்
இன்றெட்டாநாளையிலே இங்குவாரும்வேதியரே
என்றுமிவருரைக்க ஏதுசொல்வார்மாயவனார்
அப்படியேயாகுமென்று ஆயரவர்தானடந்தார்

பெருமாள் அல்லியிடம் வருகிறது.

காடுசெடிகடந்து கரியமலைதான்கடந்து
ஆறுசுனைதாண்டி அதிநவனந்தாண்டி
வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கோங்குபெருத்தவனம் கொன்றைகளாப்பூத்தவனம்
சந்திரசூரியர் காணாவனங்கடந்தார்
மாணுமதுரையது வடமதுரைதாண்டிவந்தார்
தேனுமதுரையது தென்மதுரையுள்ளேவந்தார்
அல்லியரசாணிவள் அரண்மனையில்வந்துவிட்டார்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்நாயகியும்
கண்டாளேவேதியரைக் கன்னியிளமயிலாள்
வேதியரைக்கண்டவுடன் மெல்லியருந்தெண்டனிட்டு
தெண்டனிட்டேயல்லி செப்புவாளொருவார்த்தை
ஐயாபெரியவரே அறிவுள்ளவேதியரே
தீரப்படித்தவரே தெளிவறிந்தவேதியரே
எந்தவூரெந்ததேசம் எங்கிருந்திங்குவந்தீர்
சொலலுமையாவேதியரே என்றாளேதோகையரும்

தூரம்வடக்கேயம்மா அவாரகாபுரிதேசம்
அத்திபுரத்திற்கு ஆரணங்கேயான்போவதற்கு
வழிகள்தெரியவில்லை மாதாவேயெந்தனுக்கு
வீஷ்மர்துரோணர் விதுரனஸ்வத்தாமன்
கர்ணரும்காங்கையரும் கனத்ததொருமன்னவரும்
சிந்துபதிராசரவர் துற்சாசதனன்முதலாய்
தம்பிமார்தொண்ணூற்று ஒன்பதுபேர்ராசாவாம்
அவர்கள் ஏகாந்தமாய்க்கூடி இராசமன்னரெல்லோரும்
ஆரோஒருகன்னியாம் அவள்பேர்கலந்தாரி
தேன்மொழியாள்வயிற்றில் திருட்டுப்பிள்ளையுண்டாச்சு
ஆகையால்கன்னியரை அக்கினியிற்றள்ளுதற்கு
கோதானம்பூதானம் கொடுக்கிறார்வேதியற்கு
வழிகேட்டுப்போக வந்தேன்கா ணுத்தமியே
என்றுமிவருரைக்க ஏந்திழையுங்கண்சிவந்து
சீறியெறிபறந்து தேன்மொழியுங்கோபமதாய்
ஆராடாகாவலரே அகங்காமல்லர்களே
அந்தணர்பிராமணரை அறையிலடையுமென்றாள்
கேட்டார்பெருமாளும் கிளிமொழிவார்த்தைகளை
அகங்காரநீலியென்று ஆயர்மனமகிழ்ந்து
எடுத்தார்சுரூபம் எம்பெருமாளாண்டவரும்
கண்டவர்கள்தானடுங்க கரியமால்ரூபமானார்
பார்த்தாளேயல்லியம்மாள் பாரளந்தார்வடிவமதை
மெத்தநடுநடுங்கி மேனியெல்லாம்வேர்வையிட
வந்துபணிந்தாளாம் மாயவனார்தன்பாதம்
பணிந்துஎழுந்திருந்து பாவையருமேதுசொல்வாள்
என்சாமிஎன்திருவே என்னுடையகர்த்தாவே
ஆண்டவரேநீரிருக்க அடியாட்குஎன்னகுறை
ஆறுதப்புதாறுபிழை அடியாள்யான்செய்ததெல்லாம்
அத்தனையும்நீர்பொறுப்பீர் ஆயர்பெருமாளே

பெருமாள் சொல்வது.

அப்போதுபெருமாளும் அருளாளரேதுசொல்வார்
மலரிற்பிறந்ததொரு வாழ்வரசியல்லியரே
போரஞ்சாவீரன் புலந்திரனார்தேவியரே
காரிழையாள்மாது கலந்தாரிநாயகியை
தீயிலேதள்ளுதற்குத் துரியோதனன்நினைத்தான்
வேதியரையழையுமென்றான் வேந்தன்கபடனவன்
அப்போதுவேதியர்போல அவ்விடம்யான்போனேன்
கலக்கமனமுடைய கபடன்துரியனுக்கு
ஆருடமொன்றுசொன்னேன் அறிவழிந்தமன்னனுக்கு

அஸ்தநட்சத்திரம் ஆகாதநாளென்றுசொன்னேன்
கேட்டையும்மூலமும் கெடுதிநாளென்றுசொன்னேன்
இன்றெட்டாநாளையி லிசைந்தநாளென்றுசொன்னேன்
திங்கட்கிழமையிது தசமிபுணர்பூசம்
அன்றையதினத்திலே அக்கினியைமூட்டுமென்றேன்
அப்படியேசெய்வதற்கு அரசனிருக்கிறானே
நீ-என்னசொல்லுமென்றார் நிகரிலாதெம்பெருமாள்
என்னாலேஎன்னவாகும் எம்பெருமாள்நீரேசொல்லும்
ஆனாலொருவயணம் அல்லியரேசொல்லுகிறேன்
உன்னைப்போல்பத்துப்பேரை உத்தமியைசோடித்து
நீபிடித்தசெங்கோலை நேரிழையாள்கைகொடுத்து
செங்கோலமர்த்திவிடு தேன்மொழியாள்நாயகியே
புளியாறுவரவிடுவாய் பொற்கொடியாள்நாயகியே
அதுசமயம்நான்பார்த்து ஆகாயமார்க்கத்திலே
ஊசிபோல்மின்னல்மின்னி ஒருநொடியிற்மழைசொரிவேன்
குமுரியேபெய்யவைப்பேன் கொடிதாகஅக்கினிமுன்
அம்மையாறுநீர்சொருகி அணைத்துவிடுமக்கினியை
அரசனதுசேனையெல்லாம் ஆற்றில்மிதப்பார்கள்
அதுசமயம்நீர்பார்த்து அனுப்பிவிடுதாதிகளை
ஆயுதங்களைக்கொடுத்து அனுப்பிவிடுந்தாதிகளை
சேனைகளையெல்லாஞ் சிதரவடித்துவிடு
என்றுசொல்லிமாயவனு மெழுந்திருந்தாரப்பொழுது
அப்படியேநல்லதென்று அல்லியருந்தானிருந்தாள்

வேதியர் அத்திபுரம்வந்தது.

அடியளந்தவெம்பெருமாள் ஆதிமூலமாயவரும்
மதுராபுரிகடந்து வைகைவளநாடுவிட்டு
காடுசெடிகடந்து கானாறுதான்சூழ்ந்து
பொல்லாவனங்கடந்து போய்ச்சேர்ந்தாரத்திபுரம்
தேசத்தழகுமன்னன் துரியோதனனிடத்தில்
வந்துவிட்டார்வேதியரும் மாபாவியம்பலத்தில்

துரியோதிரன் சொல்வது.

கண்டானேவேதியனைக் கபடன் துரியோதனன்
ஐயாபெரியவரே அன்பானவேதியரே
யானைகுதிரை அபாரியாய்நான்கொடுத்தேன்
கோதானம்பூதானம் கொடுத்தேனகாண்வேதியரே
ஆற்றங்கரையோரமது அக்கினியைவளர்த்திவிட்டேன்
எட்டுநாளாகவே எரிகிறதேஅக்கினிதான்
இன்றோடேகெடுவாச்சு எழிலானவேதியரே

ஆச்சுதுகாணென்றான் அரவக்கொடிவேந்தன்
அட்சணமாயவரும் அவன்சேதிதான்கேட்டு
சரியாச்சுமன்னவனே தனஞ்செயனேராஜேந்திரா
உன்-மனதுப்படிசெய்ய மறையவனாரிருக்கையிலே

துரியோதனன் கர்ணரை அழைத்துச்சொல்வது.

தேசத்தழகுமன்னன் திரியோதிரப்பெருமான்
ஆரடாதூதுவரே அழையடாகர்ணரைத்தான்
அவ்வசனங்கேட்டு அத்தூதனோடிவந்து
காசிலிவர்னர் கர்ணரைத்தானழைக்க
அம்பலக்கச்சேரி அதிகர்ணர்வந்துநின்றார்
கர்ணரைத்தான்பார்த்துக் கபடனுமேதுசொல்வான்
கேளுங்காண்கர்ணரே கெடுவுஞ்சரியாச்சு
தாரார்குழலாளைத் தானழையுமென்றானே
கடுகவரவழையும் கலந்தாரிநாயகத்தை
என்றுமவனுரைக்க ஏங்கிமனந்தளர்ந்தான்
வேதியனைக்கண்டார் வேந்தனதிகர்ணர்
கண்சைகைகாட்டினார் கரியமாலெம்பெருமாள்

கர்ணர் கலந்தாரியிடம் வருகிறது.

அந்தவொருகண்சிமிட்டை அதிகர்ணர்தான்பார்த்து
கடுகியெழுந்தார் கன்னியின்றன்கோட்டைக்கு
மாதரதுகோட்டைக்கு மன்னவனும்வந்துவிட்டான்
கலந்தாரியரண்மனைக்குக் கட்டழகருட்புகுந்தான்
தாதிமார்கண்டு தையர்களோடிவந்து
காலுக்குநீர்வார்த்தார் கலையாறவீசினார்
பாதத்தில்தான்பணிந்தார் பாவையழகிற்கு
தன்னைப்பணிந்த தாதிமுகம்நோக்கி
மாதுகருங்குழலே வரவழையுமென்றாராம்
கலந்தாரிநாயகத்தை கடுகவழையுமென்றார்
ஓடிவந்தாளுட்புகுந்தா ளுத்தமிக்குத்தெண்டனிட்டு
ஆச்சியரேயுன்னை யருமையாய்த்தானவளர்த்த
ஊட்டிவளர்த்தெடுத்த உன்னமாதிகருணர்
அழைத்துவரச்சொன்னார் அம்மானதிகருணர்
அவ்வசனங்கேட்டு அரிவையெழுந்திருந்தாள்
பூஞ்சிலம்புதண்டை பொன்னாபரணமின்ன
காரிழையாள்மாது கலந்தாரிநாயகமும்
மாயனார்சீர்பாத வணங்கியேநமஸ்கரித்தாள்
வாழ்வீர்வளருவீர் மண்ணூழிகாலமட்டும்
கற்பதித்ததூணதுபோல கலங்காதராசாள்வீர்

எழுந்திருமென்று இன்பமுடன்தான்வாழ்த்த
எங்கேவந்தீர்எங்கேவந்தி ரெனைவளர்க்குமாமாவே
வந்தவிபரமதை மாமாவேசொல்லுமென்றாள்

கர்ணர் சொல்வது

தேசத்தழகுமன்னன் துரியோதனப்பெருமாள்
அக்கினிவளர்த்தி அனல்பாயவுங்களம்மான்
வரவழைத்தாரும்மை மாதுகருங்குழலே
வெகுகோடிமன்னன் வேந்தர்படைநெருங்கி
சகலோருங்காணச் சந்தடிநெருங்குது
வேதப்பிராமணனும் விளங்குகிறாரிவ்விடத்தில்
சீக்கிரமாய்வாருமென்று சீரானயடையாளம்
கொடுத்தாரேகருணர் கோதையாள்கைதனிலே
வாங்கினாளடையாளம் மலர்கரத்தைதானீட்டி
அரண்மனை தாதியர்கள் அனைவோருந்தான்பார்த்து
ஏங்கியழுதார்கள் எல்லோருங்கூட்டமிட்டு
ஆச்சியரேயுமக்கு ஆபத்துநீங்கவென்பார்
தீக்கோநீதான்பிறந்தாய் தேனார்கருங்குழலே
அக்கினிக்கோநீபிறந்தாய் ஆரமுலையாளே
கொழுந்துவிட்டெரியும் கொம்பனைக்குபெருந்தணலாய்
செந்தணலுக்கென்று செறிந்துநீதான்வளர்ந்தீர்
இதுதானோகண்டபலன் என்றழுதார்தாதியர்கள்
காரிழையாள்மாது கலந்தாரியேதுசொல்வாள்
அழுததொருபெண்டுகளை ஆரணங்குகைமர்த்தி
கேளுங்கள்தாதிகளே கிளிமொழியாளொருவசனம்
கணவன்றனைச்சேர்ந்த கன்னியருமெய்யானால்
சோரத்தனமில்லாமல் சுந்தரனேநிஜமானால்
தீக்குழிக்குத்தப்புவேன் திசையெட்டுந்தானறிய
அக்கினிக்குப்தப்புவேன் அஷ்டதிசைதானறிய
இதுதானேயென்னுடைய இருதயத்தின்னினயங்கள்
எல்லோருமறியட்டும் ஏந்திழையாள்செய்தகுற்றம்
ஆற்றினாள்தாதியரை அல்லிமருமகளும்
ஸ்நானங்கள்செய்து செபதபங்கள்தான்முடித்து
சொக்கரைத்தானினைத்து திருநீறுதானணிந்து
மஞ்சள்துயிலுடுத்தி மடியில்வைததாளடையாளம்
கோடாலிமுடிச்சிட்டுக் குடமல்லிதானணிந்து
சீரானநெற்றியிலே திலதங்கள்தானுமிட்டு
பட்டுடுத்திபணி பூண்டு பதுமைபோலலங்கரித்து
தோழிமார்கூட்டஞ் சுற்றிலும்நெருங்கிவர
மன்னன்திருக்கருணர் மன்னன்படைநெருங்க

காவலர்படைகளது கன்னியரைநெருங்கிவர
படைகளிருபுறமும் பாவையரைநெருங்கிவர
பலவர்படைபெண்கள் பைங்கிளியைநெருங்கிவர

தீக்குழிக்கு வருவது.

கோட்டையைவிட்டுக் கொம்பனையாள்வெளியானாள்
சந்திரனைக்காணாத தையல்வெளிப்பட்டாளாம்
சூரியனைக்காணாத தோகைவெளிப்பட்டாளாம்
கால்பீலிகலகலென்ன கைவளையல்பளபளென்ன
நெற்றிசுற்றிநின் றிலங்க நீலவிழிமைதுலங்க
கோட்டைகடந்து கொத்தளமுந்தாண்டி
அம்மைகரையோரம் ஆரணங்குவருகையிலே
ஏறிட்டுப்பார்த்தார்கள் எங்கும்மகாசனங்கள்
கங்கைகரைகொள்ளாத கனமானசேனைத்திரள்
எங்கெங்குமிறைந்திருப்பார் எள்ளுவிழவிடமுமில்லை
அக்கினிப்பெருந்தணலும் ஆவிகளபொறுக்கவில்லை
மெத்தப்பயந்தாள் மேனிகருகிட
புகைபோலகப்புகுது பூமிகள்தெரியவில்லை
அக்கினிச்சுடராலே ஆற்றமுடிகூடவில்லை
தவித்துமிகபோகுது தணலெனறபெருஞ்சுடரால்
அக்கினிசுடராலே அருந்தாகந்தானெடுத்து
நாவுவரண்டது நடுநாவுநீரற்று
ஆவலாய்வந்துநின்றாள் ஆற்றுநீர்தான்குடிக்க
அந்தவொருவேளையிலே ஆயனுந்தான்பார்த்து
மாய்கையொன்றுசெய்தார் மாயன்பெருமாளும்
ஊசிபோல்மின்னி வுரிபோல்சாலிறங்கி
இருண்டுதுமேகம் எங்குங்கருக்கிறது
ஆனைதும்பிபோலே அமர்ந்துவருஞ்சலம்போல்
சேரானமழைமாரி சொரியுதுஅவந்நேரம்
வானமலர்மாரி வருஷிக்குமன்னேரம்

அல்லி புளியாறு அனுப்புதல்

ஆறுஜலமோட அணிமதுரைநாயகியாள்
எம்பெருமாள்சேதி இதுதானதருணமென்று
மதுரைப்பெருமாளும வைகையிலேவந்துநின்று
தவனப்புளிகளைத் தையல்கரைத்துவிட்டாள்
இச்சையாய்புளிப்பு இனிபுளிப்புதோன்றயிலே
அள்ளிக்குடித்தாளாம அங்கமதுதானகுளிர
தேகம்குளிர்ந்தது தேன்மொழிக்குஅந்நேரம்
தெளிந்தமுகமானாள திருவழகிபூமாது
காணத்திருமுகங்கள் களையழகுதானபூண்டாள்

இந்தரகசியங்கள் [illegible]ருக்குந்தெரியாது
அந்தச்சமயத்தில் அமர்ந்துமழைபொழிகையிலே
தேசத்தழகனவன் திரியோகிரலைபார்த்து
கடுகவரச்சொல்லுமென்றான் கலந்தாரிநாயகத்தை
அப்போதிளம்பிறையா ளதுக்கொன்றுமஞ்சாமல்
அச்சுதரைத்தானினைத்து அரிவையவள்முகமலர்ந்து
அன்னநீர்தான்பொசித்து அருந்தாகந்தானறிந்து
அக்கினிகுழியருகே அரிவையரைக்கொண்டுவந்தார்
தீக்குழியைத்தேடித் தேன்மொழியாள்வந்துநின்றாள்
கண்டாரகளெல்லோரும கன்னியவள்நிற்கையிலே
அந்தச்சமயத்தில் ஆயர்கிருபையினால்
பெரியாறுபெருகிற்று பெருவெள்ளமோடுகுது
அம்மைப்பெருக்கி அலைமோதுமவேளையிலே

அல்லி பெண்களையனுப்புதல்.

மதுரைவளநாடியவள் மயிலிணையாளல்லியரும்
எம்பெருமாள்சொன்ன எண்ணத்தைத்தானினைந்து
இதுதான்சமயம் இப்போதேதள்ளிடுவார்
ஆரடிதாதியரே அதிகாரிசெங்கமலம
இதுதான்சமயம் ஏந்திழையேவாடியென்றாள்
அவள்-பொல்லாதநீலி வலலாண்மைக்காரியவள்
ஏனம்மாவென்று ஏந்திழையாள்வந்துநின்றாள்
சிங்காரஞ்செய்தாள் செங்கதிரைபோல
மகுடமுடிசூட்டி மாதணிபதக்கமிட்டு
வச்சிரக்கபாயணிந்து மாணிக்கமாலையிட்டு
காலிலேவிருதுகட்டிக் கண்டாமணிதரித்து
ஆழியுஞ்செங்கோலும அவள்கையில்தான்கொடுத்து
பாண்டியவள்வாளும் பரிசைகளுந்தான்கொடுத்து
மூகாரிகைகையிலிட்டு முதுகிலேடாலணிந்து
அல்லியரைப்போல அவளையலங்கரித்து
அஞ்சாதேபெண்ணரசே அல்லியரும்நானென்று
எனபெயரைநீதரித்து தட்சணமேநீபோயி
ஆரடாயென மருமகளை அக்கினியிற்றள்ளுபவன்
எவரடாமருமகளை இத்தீயிற்றள்ளுபவன
கொடுக்கிறேனபூசை கும்பிமலையுருள
அதிகாரிநானிருக்க ஆரடாதள்ளுபவன்
இந்தப்படியாக எச்சரித்துநீபோய்
இந்தப்படியா அவன்படையில்போய்விழுந்தாள்
அசட்டையாய்நிற்பாள் அல்லியிவளன்று
அடையாளந்தானகொடுத்தது அல்லித்திருமகனார்

SA
987-94

புலந்திரன் கள

சேர்ந்ததுமிருந்ததுவும் திருவாழிகொடுத்துவும்
வந்ததும்போனதும் வயனமாய்யுரைத்து
காரிழையாள்மாது கலந்தாரிநாயகிக்கு
கைதாங்கியழைத்துப்போய் கன்னியிடகோட்டையில்
அரண்மனையிற்கொண்டுபோய் ஆரணங்குபெண்மயிலை
மசங்கைகள்தீர்த்து மனதைமகிழவைத்து
இன்னுஞ்சிலநாளேந்திழையேசென்றபின்பு
பாண்டியர்கள்வந்து பசியமர்ந்தபிற்பாடு
வெற்றிமதயானை வீமராதுதெண்டாலே
நூற்றுவர்பூமுடியை நொடியில்துணித்தபின்பு
அழைத்துக்கொண்டுபோரோ மஞ்சாதேஎன்றுசொல்லி
தேறுதலைசொல்லி செங்கமலம்வாருமென்றாள்

செங்கமலம் வருகிறது.

அப்படியேநல்லதென்று அரிவையிவள்சொல்லையிலே
பயணங்களானாள் பைங்கிளியாள்செங்கமலம்
கூட்டியிருப்பதுபோல் கொம்பனைமார்சேர்ந்தார்கள்
ஆயுதவரிசையுடன் அநேகம்பேர் துணையானார்
பாங்குகளும்பல்லயமும் பரிட்டங்களுங்கதிகளும்
ஈட்டிகளுமம்புகளும் எதிர்த்துக்குத்துஞ்சூலங்களும்
வளைதடியும்சக்கரமும் மங்கையர்கைபிடித்து
இவ்வளவுபேரையும் ஏந்திழைக்குதுணையாக்கி
மருமகட்குதானுகந்த வரிசைகளுந்தான்கொடுத்து
மேளமும்பேரிகையும் விருதுகளுந்தான்கொடுத்து
ஆற்றிலேதெப்பங்கட்டி அதின்பேரில்தானேற்றி
போய்வாங்களென்று பொற்கொடியுமனுப்பிவைத்தார்
தெப்பமரத்தின்மேல் தேன்மொழிமாரானேறி
சகலவிருதுடனே தையலர்கள்வாரார்கள்
கரைபுரண்டவெள்ளம் கனத்தாருமுன்னேடே
அந்தச்சமயத்தில் அச்சுதரும்பார்த்திருந்தார்

கலந்தாரிதீயைச் சுற்றிவருவது.

அக்கினியில்வந்துநின்றாள் அரிவைகலந்தாரி
சுற்றிவரச்சொன்னார்கள் தோகையிளமயிலை
தலைமேற்கரங்குவித்துத் தையலரும்கறறிவந்தாள்
தள்ளுமென்றாள்தீயில் சற்பக்கொடிபோலந்தன்
விழப்போகுஞ்சமயத்தில் வெள்ளம்புரண்டதுவே

ஆறுபெருகி அக்கினியைத்தணித்தது.

ஆயர்கிருபையினால் ஆறுபுரண்டதுவே
ஆகாயகெங்கை அலைமோதிவந்ததுவே

புலந்திரன் களவுமாலை

புறண்டோடிவெ[illegible]மபெருந்தனலிலில்விழுந்தன
கட்டையுந்தீயுங் கனக்கமிதந்ததுகாண்
அக்கினிதணிந்[illegible] ஆ[illegible]வெள்ளமோடுதுகாண்
படர்ந்ததேவெள்ளம் பார்மன்னர்மீதிலேதாள்
சிலபேர்மிதந்தார்கள் சிலபேர்மடிந்தார்கள்
வேடிக்கைப்[illegible]த்தவர் மிதக்கிறாரம்பையிலே
உயிர்[illegible]ந்துபோனவரும ஓடியேபோனவரும்
கரையேறிப்போனவருங் காலோட்டம்பிடித்தவரும்
சிதறிவிழுவாரும் சீவனுயிர்போனவரும்
அலறிவிழுந்தவரும அக்கரையேபோனவரும்
திக்குத்தெரியாமல் திசைகெட்டுப்போனவரும்
அறியாமல்வந்தோம் ஆற்றுக்கிரையாக
தெரியாமல்வந்தோம் சீவனபறிகொடுக்க
ஒருவர்கள்போனவழி ஒருவர்க்குந்தெரியாமல்
மூலைக்குமூலை முறிந்துகெட்டுஓடுகிறார்
அரிவைகலந்தாரி அசையாப்பதுமைபோல்
ஆயன்கிருபையினால் அவ்விடத்தில்தானிருந்தாள்
கைகுவித்தப்படியாகக் கன்னியருந்தானிருந்தாள்
ஆறுபெருகிசலம் அவளைச்சுற்றிஓடுகுதாம
கர்ணரும்நின்றிருந்தார் கனத்தபெருவாற்றில்
மற்றவர்களெல்லாம் மாண்டுபிழைத்ததுவும்
மூர்ச்சைகளானவரும் மெய்மறந்துபோனவரும்
வயிறுபெருத்தவரும் மண்மேல்விழுந்தவரும்
களைபட்டுப்போனவரும் கண்பிதுங்கிப்போனவரும்
திகிலடைந்துபோனவரும் திசைமாறியோடுகிறார்

மதுரைப்பெண்கள்வந்து நெருங்கினது.

அந்தச்சமயத்தில் ஆற்றங்கரையோரம் ;
பெண்டுகள்படைநெருங்கப் பேரிகைவாத்தியங்கள்
முரசுகளடிப்படவே முறையமிட்டபேரிகைகள்
டங்காரமுழக்கவுந் தவுண்டிமல்லாரிகொட்ட;
சர்சரிகைவீணைகளுந் தாக்கிமுரசறைய
அடிபடுதேபேரிகை அடிவானத்திடிபோல
கோடைகாலத்திடிபோல குமுறுதேபேரிகைகள்
சமுத்திரகோஷ்டம்போல் தனிமதுரைப்பெண்களெல்லாம்
ஆரடாஎன்னுடைய அருமைமருமகளை
இந்திரனார்தேவியரை என்னுடையகண்மணியை
துன்னுங்கருங்குழலைத் தோகையிளமயிலை
என்னுயிர்பிக்க என்னுடையகண்மணியை
ஆசைமருமகளை அக்கினியிற்றள்ளுபவன

...ரியமும் அறிவேனென்பாரென்று
...தவிட்டுத் தேன்மொழிமார் தானிறங்கி
...டன்பெண்கள் பதறிவிருந்தார்கள்
...றஜனங்களை ஒருமிக்கத் துறத்துகிறார்
...க்குத்திரவிலே இராஜாளிபுகுந்ததுபோல
...னத்திகூட்டத்தில் போய்விழுந்தசிங்கம்போல்
...னதுகூட்டத்தில் போய்விழுந்தசிங்கம்போல்
...துவிழுந்து மாட்டுகிறார்பெண்களெல்லாம்
...னைபடைக்கஞ்சாதே அல்லியின்றன் தாதிகள்
பாலாவும்பரிசைகளும் பாங்குடனம்புகளும்
எட்டிச்சுழட்டுவதும எகிறிக்குதிப்பதுவும்
பாலாதிருப்பதுவும் படையிலேமோதுவதும்
பாங்குசுழட்டுவதும் பக்கத்தில்குதிப்பதும்
கத்திச்சுழட்டுவதும் கவலில்விழுவதும்
திருத்தைப்போலாட்டுவதும் சேரவந்துகுத்துவதும்
எகிறிகுதிக்கிறதும் எச்சரித்துமாட்டுவதும்
இந்தப்படியாக இசைந்துமேசேனையெல்லாம்
மூலைக்குமூலை முறிந்ததேசேனையெல்லாம
இதுவென்னவதிசியம் இவர்கள்யார்பெண்படைகள்
இனிபிழைக்கப்போறோமோ இவள்கையில்தப்புவமோ
மட்டடங்காப்பெண்ணரசு மதியாளொருவரையும்
இன்றைக்கிருக்கிறோமே அவன்கையில்மாண்டிடுவோம்
தாக்ஷண்யமென்னுளே தயவுவைத்துப்பாராளே
எப்படியென்றுசொல்லி இரடிவிழுவாரும்
ஆயுதத்தால்காயப்பட்டு அலண்டுவிழுவாரும்
ஆற்றுக்குத்தப்பியே ஆருயிர்பிழைத்தவந்தோம்
கூற்றுவன்போலக் கொல்லவந்தார்பெண்களென்று
பல்லைத்திறப்பார்கள் படுக்கையாய்விழுவார்கள்
முன்னேறுகிறவன்பின்னே முட்டுவானிவன்தலையை
ஓடிநின்றுபார்ப்பார்கள் ஒருவர்பின்னேநுழைவார்கள்
கால்மாடுதலைமாடாய்க் கதறிவிழுவார்கள்
இந்தப்படியாக இறைஞ்சுதுசேனையெல்லாம
அலலியைப்போலவந்த அதிகாரிசெங்கமலம்
மன்னவராய்ப்பார்த்து மாட்டுகிறாள்நல்லதெப்பை
சின்னங்களானார் துரியோதனன்படைகள்
அப்போதுமாயவனார் அச்சுதனார்கோபாலர்
அறியாதுபோல ஆனந்தமாகவேதான்
குஞ்சிரிப்புக்கொண்டு கோபாலர்பார்த்திருந்து
அங்கதேசாதிபதி அதிவீரனகர்ணனுமே
ஆறுபெருகினதும் அல்லிப்பெண்கள்கொல்லுறதும

அதிசயம்
கட்டார்ச
சிரித்தமு
பெண்கள்
என்னை
என்றுமனம

தேசத்தழகுமன்ன ... ள்
எண்ணுவான்கோடி ... னவன்
அக்கினிவளர்ந்ததும் அ ... பானதுவும
வெள்ளம்பிறண்டு வெரு ... தந்ததுவும
சகிக்கமுடியாமல் தானோடிவந்ததுவும
மதுரைப்படைப்பெண்கள் வந்துமிகச்சாடுவதும
வெட்கங்கெட்டுநிற்பதுவும வேந்தர்களோடினதும்
விர்தாவாய்த்திரவியங்கள் வீண்சிலவானதுவும
மங்கைகலந்தாரி மனமகிழ்ந்துநிற்பதுவும்
திரவியங்கள்போனதல்லால் சின்னங்கள்பட்டதுவும்
கிழப்பாப்பான்சொன்ன கெடுதலைவார்த்தைகளும்
அடையாளங்கண்டிருந்தும் அக்கினியைவளர்த்தினதும்
இதுகளெல்லாம்பார்த்து ஏங்கிமனங்குன்றி
பெருமூச்சுவிட்டான் பேரானதுரியனவன்
குன்றினான் துரியனவன் குருடன்திருமகனார்
அறியாமற்செய்தோம் அல்லிமருமகளை
இடுக்கங்கள்வந்ததுவே இந்திரன்தேவியினால்
மிதமிஞ்சிப்போயிற்றே மெல்லியவளஞ்சாளே
பாராமற்போனேமே பவுசுங்குலைந்தேமே
கண்டோர்நகைக்கக் கனத்தவுடலெடுத்தேன்
பார்த்தோர்நகைக்கப் பரிகாசமாச்சுதென்று
கும்ப்பாகப்பார்த்தேன் கோதைதிருவழகை
அல்லியவளாலே அதிகாரம்பெற்றுவந்தாள்
அல்லியனுமதியால் அதிகாரம்பெற்றுவந்தாள்
முத்திரையுஞ்செங்கோலும் முடியுந்தரித்துவந்தாள்
இவள்கையால்மாண்டவர்கள் எண்ணத்தொலையாது
அவள்வந்தாளேயாமானால் ஆர்தப்பப்போறார்கள்
வெள்ளாட்டிகைதனிலே வெட்கங்கள்கெட்டோமே
தாதியல்லிகையில் தலையிறக்கமானோமே
தாதியரைத்தான்வணங்கத் தலைவிதியோவெந்தனுக்கு
யாரைக்கொண்டுமன்னிப்போம் அந்நீதமாய்மாளுகுதே